விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

*Valampurii*

Registered as a Newspaper in Srilanka

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 புரட்டாதி 08 புதன்கிழமை (24.09.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 279

ராம்கோ
MADRAS CEMENTS
RAMCO CEMENTS
உலகத்தர ISO 14 001,
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## தீக்காயம் இளைஞன் மரணம்

(யாழ்ப்பாணம்)

தீக்காயங்களுடன் வைத்திய சாலையில்அனுமதிக்கப்பட்ட இளைஞர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

கே.கே.எஸ்.வீதி யாழ்ப்பாணத் தைச் சேர்ந்த தயாபரன் சிவதர்ஷன (வயது-24)என்ற இளைஞரே நேற்று அதிகாலை யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்து ள்ளார்.

யாழ்.நாவாந்துறை சூரியவெளிப பகுதியில் கடந்த 4 ஆம் திகதி காலை 7.30 மணியளவில்குறித்த

20 ஆம் பக்கம் பார்க்க

## பௌத்தத்திற்கு அனைத்தும் மாறவேண்டும்

# ஏழாயிரம் பௌத்த தேரர்களுடன் பொது பல சேனா கொழும்பில் மாநாடு



(கொழும்பு)

எதிர்வரும் 28-ம் திகதி நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் ஒரு நாளாக அமையும் என பொது பல சேனா தெரிவித்துள்ளது.

நான்காயிரம் தேரர்களை ஓர் இடத்தில் குவித்து எமது பௌத்த தலைவர்கள் எவரும் மாநாடுகளை நடத்தவில்லை. இதை சவாலாக ஏற்று ஏழாயிரத்துக்கும் மேற்பட்ட பௌத்த தேரர்களை ஓர் இடத்துக்கு அழைத்து சுகததாச விளையாட்டர ங்கில் மேற்படி தினத்தில் இந்த மாபெரும் மாநாட்டை நடத்த தீர் மானித்துள்ளோம் என அந்த அமை ப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

நேற்றுக் காலை கிருலப்பனை பொது பல சேனா தலைமைக் காரி

20 ஆம் பக்கம் பார்க்க

## தேர்தல் வன்முறை வீடியோ ஐ.நாவிற்கு

(பதுளை)


ஊவா மாகாண சபைக்கான தேர்தலின் போது இடம்பெற்ற தேர் தல் வன்முறை சம்பவங்கள் தொட ர்பிலான வீடியோ, படங்கள் மற்றும அறிக்கைகள் ஐ.நாவின் பொதுச் செயலாளர் பான் கீ மூனுக்கு அனு ப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சர்வ தேச நடவடிக்கை தொடர்பான உத விச் செயலாளர் சாகல ரத்னாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஊவா மாகாண சபைக்கான

20 ஆம் பக்கம் பார்க்க

## முதல்வரால் வீடமைப்புத் திட்டம் கைதடியில் நேற்று ஆரம்பிப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபைக்கு மக் கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப் பட்டு மாகாண சபை செயற்படத் தொடங்கிய பின்னர் முதல் தடவை யாக நேற்று வட மாகாண உள்ளூ ராட்சி அமைச்சின் வீடமைப்புத் திட்டத்தினை வடமாகாண சபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன யாழ்ப்பாணத்தின் கைதடி மத்தியில தெரிவு செய்யப்பட்ட முற்றாக கண்

20 ஆம் பக்கம் பார்க்க

# போர்க்குற்ற விசாரணை

## முன்னேற்றம் குறித்த அறிக்கை ஐ.நாவில் இன்று சமர்ப்பிக்கப்படும்

(ஜெனிவா)

**இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பிலான ஐக்கிய நாடுகளின் விசாரணை நடவடிக்கையின் முன்னேற்றங்கள் அடங்கிய அறிக்கை ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது.**

மேலும் சில நாடுகள் தொடர்பி லும் இடம்பெறும் விசாரணைகள் குறித்த பொது அறிக்கையில் இல ங்கை தொடர்பான வாய்மூல அறி க்கையும் அடங்குவதாக செய்தி வெளியாகியுள்ளது.

இதேவேளை, ஐக்கிய நாடுகளின விசாரணைக் குழுவினால் முன் னெடுக்கப்படும் வசாரணை மற்றும அதன் எதிர்கால விடயங்கள் தொடர் பில் அறிந்துகொள்வதற்கு இலங்கை உள்ளிட்ட உறுப்பு நாடுகளுக்கு இத னூடாக சந்தர்ப்பம் கிடைத்துள்ள தாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் கலாநிதி பிரதீப மஹானாமஹேவா குறிப்பிட்டார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## மகிந்த – மோடி சந்திப்பு நடைபெறும்

(புதுடில்லி)

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சந்திப்பார் என இந் திய அரசாங்கம் அறிவித்துள்ளது.


ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்திற்கு இடைநடுவில் இந்த சந்திப்பு நடைபெறவுள்ளது.

நரேந்திர மோடி நாளை 25 ஆம் திகதி அமெரிக்காவிற்கு விஜ யம் செய்வார் எனவும், எதிர்வரும் 27 ஆம் திகதி பொதுச் சபைக் கூட் டத்தில் உரையாற்றுவார் எனவும அவர் தெரிவித்துள்ளார்.

உரையாற்றுவதற்கு முன்னதாக

19 ஆம் பக்கம் பார்க்க

## ஐ.தே.க சார்பில் ரணிலே போட்டி



(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்த லில் ஐக்கிய தேசிய கட்சி சார்பில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடு வார் என அக்கட்சி நேற்று செவ்வா ய்க்கிழமை அறிவித்துள்ளது.

கட்சியின் நாடாளுமன்ற உறுப் பினர் அகிலா காரியவசம் நேற்று செய்தியாளர் மாநாட்டில் இதனை தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சி வேறு ஒரு வேட்பாளரையும் நிறுத்தாது, ஊழ லற்ற, நாட்டை அபிவிருத்தி செய்யக கூடிய அதன் தலைவரையே வேட் பாளராக நிறுத்தும் என அவர் தெரி வித்துள்ளார்.

ஊவா மாகாணத்தில் சில மூத்த அமைச்சர்களின் தொகுதிகளில் தோல்வி ஏற்படக் காரணம் அரசா ங்கம் அபிவிருத்தி திட்டங்களுக

02 ஆம் பக்கம் பார்க்க

## 617 ஏக்கர் முள்ளிவாய்க்கால் நிலப்பரப்பை கடற்படைத் தேவைக்கு ஆக்கிரமிக்க முயற்சி

### காணி உரிமையாளர்கள் திரண்டு எதிர்ப்பு

(முல்லைத்தீவு)

இறுதி யுத்தம் நடைபெற்ற முள்ளி வாய்க்கால் நிலப்பகுதியினை கடற் படைக்கென முழுமையாக ஆக்கிர மிக்கும் நடவடிக்கை மக்களின் எதிர் ப்பால் கைவிடப்பட்டுள்ளது.

இறுதி யுத்தம் நடந்த முள்ளி வாய்க்கால் நிலப்பகுதியை முழு மையாக உள்ளடக்கி ஏ32 வீதிக்கு வலது பக்கமாகவுள்ள 617 ஏக்கர் பொதுமக்களின் காணியினை நில அளவீட்டுத் திணைக்களத்தினர் நேற்று அளப்பதற்காக வருகை தந் திருந்தனர் எனினும் அவர்களது முயற்சி பொதுமக்களின் எதிர்ப்பி னால் கைவிடப்பட்டுள்ளது.

பொதுமக்களின் குறித்த காணி யினை கடற்படை முகாம் அமைக் கும் பொதுத் தேவைக்காக சுவீகரிக்கப் போவதாக கடந்த 17 ஆம் திகதி சுவீ கரிப்பு பிரசுரம் ஒட்டப்பட்டு இருந்தது.

குறித்த நிலங்களின் உரிமையா ளர்களை அடையாளம் காண முடிய வில்லை எனவும் அப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பிரசுரம் ஒட்டப்பட்டதன் பின்னர் நிலத்தின் உரிமையாளர்கள் தங்கள் நிலத்திற்கான ஆவணங்களை கரைதுறைப்பற்று பிரதேச செயல

20 ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா விசாரணைக்கு இலங்கை விரைந்து ஒத்துழைக்க வேண்டும்

### ஹுசைன் மீண்டும் கோரிக்கை

(ஜெனீவா)

அனைத்து இலங்கை மக்களின நலனுக்காக ஐ.நா மனிதவுரிமை கள் ஆணையாளர் பணியகத்தின் விசாரணைச் செயற்பாட்டுடனும், ஐ.நாவின் விசேட ஆணையாளர் களுடனும் இலங்கை அரசாங்கம் முழுமையாக ஒத்துழைத்து செயற பட வேண்டும் என்று ஐ.நா மனித வுரிமைகள் ஆணையாளர் சயிட்



20 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...மேஸ்வரா வித்தியாலயத்தில் ...லகத் திறப்பு விழா இன்று

(...லவேலி)

...ன் வங்கியின் உதவித் திட்டத்தின் ... நல்வேலி பரமேஸ்வரா வித்தியாலய த... மீள்நிர்மாணம் செய்யப்பட்ட நூலகத்தின் திறப்புவிழா இன்று முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும்.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராஜா, நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாஸ், செலான் வங்கியின் வட மாகாண பிராந்திய முகாமையாளர் எஸ். சுரேஸ், செலான் வங்கியின் யாழ்ப்பாண சிரேஷ்ட முகாமையாளர் எஸ். ஞானபண்டிதன் ஆகியோர் விருந் தினர்களாகக் கலந்து கொள்வர். (நு)

# சீன இராணுவ உயர் அதிகாரி கோத்தாவுடன் நேற்று சந்திப்பு



சீன மத்திய இராணுவ ஆணைக்குழுவின் துணைத் தலைவர் சீயூ கீயூலியாங் இலங்கையின் படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை நேற்று செவ்வாய்க்கிழமை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இச்சந்திப்பில் சீனாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான படைத்துறை சார்ந்த ஒத்துழைப்பை பரஸ்பரம் பகிர்ந்து கொள்வது, பாதுகாப்பு மற்றும் பயிற்சி நடவடிக்கைகளை கூட்டிணைப்பது தொடர்பில் பேசப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சீனாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான படைத்துறை சார்ந்த உறவுகளை மேலும் பலப்படுத்தும் வகையில் இருநாட்டு உறவுகள் தொடரும் என்று கோத்தபாய ராஜபக்ஷ இதன்போது உறுதியளித்தார் என்றும் கூறப்பட்டுள்ளது.

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கின் கொழும்பு விஜயத்தின் போது இருநாடுகளின் மூலோபாயக் கூட்டுறவை வலுப்படுத்துவதென்று இரு தலைவர்களும் உடன்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# வீதி விபத்தில் மூவர் காயம்

நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 12 மணியளவில் கனகராயன்குளம் ஏ9 வீதியில் இடம்பெற்ற விபத்தில் மூவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என கனகராயன்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஏ 9 வீதியில் பயணித்த ஹயஸ் ரகவாகனம் முன்னால் சென்றுகொண்டிருந்த பொலிஸாரின் உழவு இயந்திரத்துடன் மோதியதில் ஹயஸ் வாகனம் பலத்த சேதமடைந்தது. அதில் பயணம் செய்தவர்களில் யாழ்ப்பாணம், நீர்வேலியைச் சேர்ந்த சுரேஸ்குமார் சுஜீபன் (வயது 33), அற்புதராஜா தியஸ்கான் (வயது 5) ஆகியோரும் உழவு இயந்திர சாரதியான டபிள்யூ.எம்.கே.வீரக்கோன் (வயது 43) என்பவரும் காயமடைந்து வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். இது தொடர்பான விசாரணைகளை கனகராயன்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(செ-250)

# ஆட்சியாளர்களுக்கு சொந்தமில்லாத பல விடயங்கள் உலகில் உண்டு

## நியூயோர்க்கில் ஜனாதிபதி மகிந்த உரை

ஆட்சியாளர்களுக்கு சொந்தமில்லாத பல விடயங்கள் உலகில் உண்டு என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கில் நடைபெற்று வரும் 2014-ம் ஆண்டு காலநிலை மாநாட்டில் உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உலகம் ஆட்சியாளர்களுக்கு சொந்தமானதல்ல, உலகின் பாதுகாவலர்களே ஆட்சியாளர்கள்.

உலக சுற்றாடல் பாதுகாப்பு குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

காலநிலை மாற்றத்தினால் ஏற்பட்டுள்ள அனர்த்தங்களை அவசர நிலைமையாகக் கருதி உலக நாடுகள் செயற்பட வேண்டும்.

காலநிலை தொடர்பான பிரச்சினைகள் ஓர் உலக சவாலாகும். இந்த சவாலை வெற்றி கொள்ள அனைத்து தரப்பினரதும் ஒத்துழைப்பு அவசியமானது.

இலங்கையில் தனிநபர் வருமானம் மூன்று மடங்காக கடந்த எட்டு ஆண்டுகளில் உயர்வடைந்துள்ளது.

எனினும், தனிநபர் காபனீரொட்சைட் வெளியீடு குறைவாகவே காணப்படுகின்றது.

காலநிலை பாதுகாப்பு திட்டங்களுக்கு அபிவிருத்தி அடைந்த நாடுகள் ஒத்துழைப்பு வழங்க வேணடுமென ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.(செ-11)

# நடத்துநர்-ஓட்டுநர் கைகலப்பு

தனியார் பேருந்து ஓட்டுநருக்கும் இலங்கை போக்குவரத்துக்குச் சொந்தமான பேருந்து நடத்துநருக்கும் இடையில் நேற்று மாலை சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்துக்குச் சொந்தமான பேருந்து சாவகச்சேரி பேருந்து நிலையத்திலுள்ள பயனிகளை ஏற்ற முற்பட்ட வேளையில் தனியார் பேருந்து ஓட்டுநர் ஒருவர் சம்பவ இடத்திற்கு வந்து வாயதர்க்கத்தில் ஈடுபட்டார்.

இதன் பின்னர் வாயதர்க்கம் கைகலப்பாக மாறியது. இதன் போது தனியார் பேருந்து ஓட்டுநர் இலங்கை போக்குவரத்துக்கு சொந்தமான பேருந்து நடத்துநரை பலமாக தாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக சம்பவ இடத்திலுள்ளவர்கள் தெரிவித்தனர்.

சம்பவவிடத்துக்கு விரைந்த சாவகச்சேரி பொலிஸார் குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டதுடன் தாக்கிவிட்டு தப்பி சென்ற தனியார் பேருந்து ஓட்டுநரை தேடிப் பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக தெரியவருகின்றது. (செ-11)

# ஐ.தே.க...

காக அவர்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யாததே.

ராஜபக்ஷக்கள் ஊடாகவே நிதி ஒதுக்கீடு இடம்பெறுகின்றது. அரசாங்கம் சில மூத்த அமைச்சர்கள் வெற்றி பெறுவதை விரும்பவில்லை. அவர்களை தோற்கடிக்க விரும்பியது. ராஜபக்ஷக்களுக்குத் துதிபாடும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரம் வெல்ல வேண்டும் என அரசாங்கம் விரும்பியது.

ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு முடிவுகட்ட மக்கள் தீர்மானித்துவிட்டார்கள். ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்திற்கு எதிராக மக்களை வீதியில் இறக்கி அவர்களால் என்ன செய்ய முடியும் என்பதை காண்பிக்கப் போகின்றது என குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை சின்னத்துரை

வல்லிபுரம், புலோலி தெற்கைப் பிறப்பிடமாகவும் நாகர்கோவிலை வதிவிடமாகவும் தற்போது தவசிக்குளம், மிருசுவிலில் வசித்து வந்தவருமான கணபதிப்பிள்ளை சின்னத்துரை நேற்று (23.09.2014) இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.09.2014) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் தவசிக்குளம் மிருசுவிலில் உள்ள மருமகன் செ.தர்மகுலசிங்கம் (துரை) அவர்களின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தவசிக்குளம் ஈச்சங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தவசிக்குளம், மிருசுவில்.

தகவல்:- மருமகன்
செ.தர்மகுலசிங்கம் (துரை)

(சி-8578)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 321 0815
021 567 1532

# யாழ் மாநகர சபை அறிவித்தல்

2007-ம் ஆண்டின் 11-ம் இலக்க நுளம்புப் பெருக்கத்தடுப்புச் சட்டத்தின் கீழ் யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட சகல ஆதன உரிமையாளர்களுக்கும், குடியிருப்பாளர்களுக்கும் ஏற்கெனவே டெங்கு வாரத்தை முன்னிட்டு (10.09.2014-16.09.2014) வழங்கப்பட்ட அறிவித்தல்களுக்கு மேலதிகமாக இவ் அறிவித்தல் வழங்கப்படுகின்றது. தங்களது வளவுகளில் காணப்படும் நுளம்பு பெருகுவதற்கு சாதகமாகவுள்ள சகல நிலைமைகளையும் சீர்செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

அவ்வாறு சீர்செய்யத்தவறும் பட்சத்தில் மேற்படி சட்டத்தின் 5 (1) இன் படி, மாநகர சபை ஊழியர்களால் வளவானது சீர் செய்யப்படுமிடத்து அதற்கான செலவானது உரிய ஆதன உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரிடமிருந்து அறவிடப்படும்.

இவ்வறிவித்தலை இறுதி அறிவித்தலாக ஏற்று மேற்கூறப்பட்ட நடவடிக்கைகளுடன் ஒத்துழைப்பு வழங்கத்தவறும் பட்சத்தில் மேற்படி சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

ஆணையாளர்
யாழ்.மாநகர சபை, யாழ்ப்பாணம்.

(சி-5577)

# மரண அறிவித்தல்

## செல்வன் தயாபரன் சிவதர்ஷன் (சிவா)

(உரிமையாளர் -சிவதயா பிறிண்டேர்ஸ்)



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் தயாபரன் சிவதர்ஷன் நேற்று (23.09.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் தயாபரன் (தயா அச்சகம்), சாந்தாதேவியின் புதல்வனும் யதுர்ஷன் (தொழில்நுட்பக் கல்லூரி மாணவன்), குகதர்ஷன் (வைத்தீஸ்வரா, யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தயானந்தன், தயாபாலன் (ஆசிரியர்-யாழ்.இந்துக் கல்லூரி), ரவீந்திராதேவி, சந்திராதேவி, கங்காதேவி, ஜெயரஞ்சினி, சசிகலா, வேலாயுதம் (யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி ஓய்வுபெற்ற பிரதி அதிபர்), நந்தகோபால் (மில்க்வைற்), சிவன்ராஜ் (T.O நெடுந்தீவு) ஆகியோரின் பெறாமகனும் விஜயராணி, விஜயதேவி, விஜயகுமாரி, விஜயகௌரி, விஜயகலா, தியாகலிங்கம், புவனேந்திரன், ஜோதிமார்க்கண்டு, சுரேஸ்குமார், ஆனந்தநடேசன் ஆகியோரின் அன்பு மருமகனும் , காலஞ்சென்றவர்களான விஜயசிங்கம், நாகேஸ்வரி மற்றும் காலஞ்சென்ற நாகரத்தினம் (உரிமையாளர்-சாந்தி அச்சகம்) மற்றும் தனலட்சுமி ஆகியோரின் அன்புப் பேரனும் கஜானன், சரவணன் (வைத்தியர் யாழ்.போதனா வைத்தியசாலை), பாமா, கோகுலன், ரமணன் (இலங்கை மின்சார சபை) ரேகா, சாரங்கன், சாம்பவி ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரனும், இளங்கோ, கார்த்தீபன், சாருஜன், சாலினி, மயூரகன், மயூரி, சர்மிலி, திவ்யன், விந்துஜன், பாமினி, சர்ஜன், ஆகாஷ், சரவணகரன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (24.09.2014) புதன்கிழமை இடம்பெற்று பிற்பகல் மூன்று மணியளவில் தகனக் கிரியைக்காக பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

575, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
0773965214

தகவல்:-குடும்பத்தினர் தயா அச்சகம்
(வெற்றி இலக்கு தயா வெளியீடு)

(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி வேட்பாளரானால் மகிந்தவுக்கு ஆதரவு இல்லை

## வாசுதேவ தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் சாதாரண வேட்பாளராக போட்டியிட்டால் மாத்திரமே தாம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவு அளிக்கமுடியும் என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலை பொறுத்த வரையில் மகிந்த ராஜபக்சவுக்கு பாரிய தடங்கல் எதுவும் இருக்கப் போவதில்லை.

எனினும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியங்கள் காரணமா கவே ஊவாவில் வாக்குகள் குறைந்தன என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில சாதாரண வேட்பாளராக மகிந்த போட்டியிட்டால் அவருக்கு ஆதரவு வழங்கவுள்ளதாக வாசுதேவ குறிப்பிட்டுள் ளார். ஜே. வி பியை பொறுத்தவரை அவர்க ளின் செல்வாக்கில் மாற்றம் இல்லை என்றும் அமைச்சர் மேலும கூறியுள்ளார். (இ)

# கிளிநொச்சி மாவட்டத்தில் புதித[illegible] உள்ளூராட்சி மன்றங்கள் உருவா[illegible]ல

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை பிரதேச சபை மற்றும் கிளிநொச்சி நகர சபை ஆகியன உருவாக்கப்படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட செயலாளர் றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கூறுகையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி மற்றும் பூநகரி ஆகிய 4 பிரதேச செயலகங்கள் இருக்கின்றன. ஆனால், பிரதேச சபைகளாக கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய மூன்று மாத்திரமே இருக்கின்றன.

கண்டாவளை, கரைச்சி பிரதேச செயலகங்கள் கரைச்சி பிரதேச சபையாகவே இருப்பதால் பல சிக்கல்கள் உருவாகியுள்ளன. அதாவது, பரந்த பிரதேசத்தை ஒரு பிரதேச சபையால் நிர்வகிக்க முடியாத இக்கட்டான நிலை காணப்படுகின்றது.

209.7 சதுர கிலோமீற்றர் (20970 ஹெக்டேயர் நிலப்பரப்பு) பரப்பளவை கொண்ட கண்டாவளை பிரதேச செயலகத்தின் கீழ் 16 கிராம சேவையாளர் பிரிவுகளும் 104 கிராமங்களும் இருக்கின்றன.

இதனால், கண்டாவளை பிரதேச சபை தனியாக உருவாக்கப்படவேண்டும் என பல்வேறு தரப்பட்டவர்கள் கருத்துக்கள் கூறினார்கள். இதனடிப்படையிலேயே கிளிநொச்சி நகர சபையும், கண்டர்வளை பிரதேச சபையும் புதிதாக உருவாக்கப்படவுள்ளன.

கிளிநொச்சி நகரப் பிரதேசத்தின் துரித வளர்ச்சியை கருத்தில் கொண்டும், கண்டாவளை பிரதேச மக்களுக்கு சிறந்த உள்ளூராட்சி சேவையை வழங்கும் நோக்குடனும் கிளிநொச்சி நகர சபையும், கண்டாவளை பிரதேச சபையும் உருவாக்கப்படவுள்ளன.

இது தொடர்பாக பொதுமக்களும் சமூக அமைப்புக்களும் அபிப்பிராயங்களை தெரிவிக்க முடியுமென கூறினார்.

இதன் மூலம் கிளிநொச்சி மாவட்டம் ஒரு நகர சபை, 4 பிரதேச சபைகளை கொண்டதாக மாற்றமடையும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (2)

## வவுனியா வடக்கு பிரதேச செயலக கலைவிழா நாளை

வவுனியா வடக்கு பிரதேச செயலக கலை விழா நாளை வியாழக்கிழமை காலை 8 மணிக்கு வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதேச செயலாளர் க. பரந்தாமன் தலைமையில் நடைபெறும் முதலாவது அமர்விற்கு பிரதம விருந்தினராக வட மாகாண பண்பாட்டலுவல்கள் கல்வி அமைச்சின் பணிப்பாளர் திருமதி உசா சுபலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக வவுனியா வடக்கு கல்வி பணிப்பாளர் திருமதி பராசக்தி கணேசலிங்கம், வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி மதிதரன், வவுனியா தமிழ்ச்சங்க செயலாளர் தமிழருவி த. சிவகுமாரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

அதனை தொடர்ந்து பண்பாட்டு பேரணி, இலக்கிய சொற்பொழிவுகள், சிறுவர் நாடகம், பட்டிமன்றம் மற்றும் மாருதம் மலர் வெளியீடு என்பனவும் இடம்பெறவுள்ளன.

அன்றைய தினம் மாலை 3 மணிக்கு ஆரம்பமாகும் இரண்டாவது அமர்விற்கு பிரதம விருந்தினராக வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ச. மோகநாதன், சிறப்பு விருந்தினர்களாக வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியின் விரிவுரையாளர் மி.சூசைதாசன், மாங்குளம் உதவி பொலிஸ் அத்தியட்சகர், நெடுங்கேணி இலங்கை வங்கி முகாமையாளர் டி.பெனடிக்ஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இதன்போது கிராமிய இசை, குழு இசை, ஒயிலாட்டம், கோலாட்டம, கவியரங்கம், நாடகம், கலைஞர் கௌரவிப்பு என்பனவும் இடம்பெறவுள்ளன. (2-250)

# கல்வீரங்குளம் தூர்வாரப்படாமையால் நீரை சேமித்து வைப்பதில் இடர்பாடுகள்

## விவசாயிகள் கவலை

வவுனியா கல்வீரங்குளம் நீண்ட காலமாக புனரமைக்கப்படாது காணப்படுகின்றமையினால் அதனை நம்பி விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர்.

வவுனியா நகரிலிருந்து சுமார் 15 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள கல்வீரங்குளத்தை நம்பி சுமார் 65 இற்கும் மேற்பட்ட விவசாய குடும்பங்கள் வாழ்வாதாரத்தை நடத்தி வருகின்றன. இந் நிலையில் கடந்த 18 வருடங்களாக தூர்வாரப்படாமை மற்றும் குளக்கட்டுகள் திருத்தம் செய்யப்படாமையினால் மழை நீரை குளத்தில் சேமித்து வைப்பதில் இடர்பாடுகள் காணப்படுகின்றன.

இதேவேளை அதிகளவான மழை வீழ்ச்சி நிலவுகின்ற காலப்பகுதியில் குளத்து நீர் குளக்கட்டின் மேலாக பாய்ந்து குடிமனைகளுக்குள் செல்லும் நிலையும் ஏற்படுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். எனவே தற்போது நிலவும் வரட்சி காரணமாக குளம் முற்றாக வற்றியுள்ளமையினால் கமநல கேந்திர நிலைய அதிகாரிகள் இக்குளத்தை புனரமைப்பு செய்து இப்பகுதி விவசாயிகளின் ஜீவனோபாயத்தை மேன்மை அடையச் செய்யவேண்டும் என இப் பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-250)


**உடனடியாக தேவை**

17-55 வயது ஆண், பெண் தேவை. சம்பளம் 18000/= 26000/= 38000/= கொழும்பை அண்மித்த டொபி/ கோடியல்/ பிளாஸ்டிக்/ வாசனைத் திரவியம்/ நூடில்ஸ்/ பால்மா/ மாபிள்... போன்ற பல தொழிற்சாலைகளில் உற்பத்தி/ லேபல்/ பொதியிடல்/ தரம்பிரித்தல்/ களஞ்சிய பிரிவுகளில் பல வெற்றிடங்கள் உணவு+ தங்குமிடம் குறைந்த விலைகளில்.

**மேலதிக தகவல்களுக்கு**

(சி-8558) **077 5997295**

**நிரந்தர வேலைவாய்ப்பு**

உங்கள் எதிர்கால கனவுகள் நனவாக உடன் தொடர்பை ஏற்படுத்துங்கள். நிரந்தர வேலையினை தருவதற்கு நாங்கள் தயாராகவுள்ளோம். சம்பளம் 18000/=, 32000/= உணவு, பாதுகாப்பான தங்குமிடம், சகாய விலைகளில் கொழும்பை அண்மித்த ஏற்றுமதி தொழிற்சாலைகளில் உற்பத்தி/ பொதியிடல்/ களஞ்சிய பிரிவுகளுக்கு 17-50 வயது ஆண்/ பெண் உடனடியாக தேவை. E.P.F, E.T.F வழங்கப்படும். வருகை தரும் நாள் அன்றே வேலைக்கு செல்லலாம். மேலதிக தகவல்களுக்கு இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

**தொடர்புகளுக்கு :- 077 111 6770** (சி-8575)

**நிரந்தர தொழில் வாய்ப்பு**

உங்கள் எதிர்காலவாழ்க்கைக்கு நிரந்தர தொழில் ஒன்றினைப் பெற எம்மோடு இணையுங்கள். கொழும்பை அண்மித்த நவீன தொழிற்சாலைகளான ஜேம்/ டொபி/கோடியல்/ பிளாஸ்டிக்/ டயர்/ பொலித்தீன்/ கிளவுஸ்/ Printing.... போன்றவற்றில் உற்பத்தி) லேபல்/பொதியிடல்/களஞ்சியபிரிவுக்கு 17-55 வயது ஆண், பெண் தேவை. சம்பளம் 18000/= 38000/= உணவு+ தங்குமிடம் குறைந்த விலைகளில் வருகை அன்றே வேலைக்கு செல்லலாம்.

**தொடர்புகளுக்கு:- 077 9141804** (சி-8560)

**தொழில்வாய்ப்பு**

ஏற்றுமதி, இறக்குமதி தொழிற்சாலைகளான 150 இற்கும் மேற்பட்டவற்றில் உற்பத்தி/லேபல்/பொதியிடல்/தரம்பிரித்தல்/களஞ்சிய பிரிவுகளுக்கு 17-55 வயது ஆண், பெண் இருபாலாரும் சம்பளம் 19000/= 28000/= 38000/= உணவு, பாதுகாப்பான தங்குமிடம் சகாய விலைகளில் (விசேடம் நண்பர்கள், குழுக்கள், தம்பதியினர் ஒரே இடம்) வருகை தரும் நாளிலே வேலை. (சி-8559)

**தொடர்புக்கு:- 077 222 5889**


# இராசி பலன்

**24.09.2014**

(புரட்டாதி 8, புதன்கிழமை
சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு
அமாவாசை பிற்பகல் 12.09 மணிவரை
உத்தரம் மாலை 6.43 மணிவரை
இராகுகாலம் 12.02-01.32 மணிவரை
சுபநேரம் 4.32-06.02 மணிவரை
நவராத்திரி விரதாரம்பம்

வளவன்

**மேடம்:** கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள், அம்பிகையை வழிபட்டு ஆனந்தம் காண வேண்டிய நாள்.

**இடபம்:** மனமகிழ்ச்சியோடு செயற்படுவீர்கள், பிள்ளைகள் வழியில் சுப செய்திகள் வந்து நேரும் நாள், எடுத்த முயற்சிக்கு மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**மிதுனம்:** நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும், பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கடகம்:** குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், செய்தொழிலில் முன்னேற்றமுண்டு, போசன சுகமுண்டு.

**சிம்மம்:** புண்ணிய காரியங்களில் ஈடுபாடு செலுத்துவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**கன்னி:** ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், புதிய அனுபவங்கள் ஏற்படும் நாள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், உடல்நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**துலாம்:** நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று நினைக்க வேண்டிய நாள், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, வருமானம் திருப்திதரும், காரிய அனுகூலமுண்டு. பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**தனுசு:** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மகரம்:** அரைகுறையாக இருந்த பணிகளை ஆர்வத்தோடு செய்து முடிப்பீர்கள், வழிபாட்டில் கவனம் செலுத்துவீர்கள், கைவிட்டுப் போன பொருளொன்று மீண்டும் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கும்பம்:** கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் இழுத்தடிக்கப்படலாம், நிதானத்துடன் செயற்படுவது நல்லது.

**மீனம்:** நீண்டநாளைய ஆசையொன்று நிறைவேறலாம், சொந்தபந்தங்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், மனதிற்பினிய தகவல்கள் வந்து சேரும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# [illegible]சதுரை ஞாபகார்த்த ப[illegible]மன்றச் சமர்-2014

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத்தராதர உயர்தர மாண வர்களின் வாசிப்பு, பேச்சு, தர்க்கித்தல் என் பவற்றை வளர்க்கும் நோக்கில் முன்னாள் அதிபர் அமரர் கணபதி இராசதுரை நினைவு நிதிய அனுசரணையுடன் யாழ்ப்பாணம் மத்திய தமிழ் சங்கம் வருடந்தோறும் நடத்தி வரும் பட்டிமன்றச் சமர் எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ் ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெற வுள்ளது.

இதில் பங்கு பற்ற விரும்பும் வடக்கு மாகா ணத்திற்குட்பட்ட பாடசாலைகள், பொறுப் பாசிரியர் 0775478159, தலைவர் 07764 46156, உபதலைவர் 0754353370 ஆகியோரின் தொலைபேசி இலக்கங்களுடன் இன்றே தொடர்பு கொண்டு பதிவுகளை மேற் கொள்ளவும்.

இப் போட்டியில் வெற்றி பெறும் பாட சாலைகளுக்கு வெற்றிக்கேடயங்களும், சிற ந்த விவாதிக்கான கேடயம் மற்றும் பங்கு பெறும் சகலருக்கும் மாகாணநிலை சான் றிதழ் என்பனவும் வழங்கப்படும் என யாழ் ப்பதணம் மத்திய கல்லூரியின் அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் மேலும் அறிவித் துள்ளார். (இ




# இடைநிறுத்தப்பட்டுள்ள பேருந்து சேவையை மீள ஆரம்பிக்குமாறு பயணிகள் கோரிக்கை

(மிருசுவில்)

யாழ்ப்பாணத்திலிருந்து உசன் வரை செல்லும் இரவு 8 மணிநேர சேவையில் ஈடுபடும் இலங்கை போக் குவரத்துச் சபைக்கு சொந்தமான அரச பேருந்து தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாக பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதனால் யாழ்ப்பாணத்தில் இரு ந்து கொழும்பு நோக்கிச் செல்லும் அரச பேருந்துகளில் பயணம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதா கவும் பயணிகள் சுட்டிக்காட்டியுள் ளனர்.

வெளிமாவட்டங்களுக்குச் செல் லும் அரைச்சொகுசு பேருந்துக ளில் ஏறிப் பயணம் செய்வதால் கட் டணத்தில் அதிகரிப்பு உள்ளதாக வும் பல்வேறு விதமான முரண்பாடு களை சந்திப்பதாகவும் அப்பயணி கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து தமது வேலையை முடித்துவிட்டுச் செல் லும் பயணிகள் அரச பேருந்து களை நம்பி தமது பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆனால் குறித்த சேவையானது தற்காலிகமாக இடைநிறுத்தம் செய் யப்பட்டிருப்பதால் பெரும் சிரமங்க ளுக்குள்ளாக்கப்பட்டுள்ளதாக பயணி கள் தெரிவித்துள்ளனர்.

அரச பேருந்துகளை நம்பி பேரு ந்துக்காகக் காத்திருக்கும் பயணி கள் பற்றிச் சிந்திக்கவேண்டும் என வும் இது சம்பந்தமாக சில அதிகாரி களுக்கு தெரியப்படுத்தப்பட்ட போதும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவி ல்லை எனவும் கூறப்படுகின்றது.

அத்துடன் காலைவேளையில் பருத்தித்துறையிலிருந்து யாழ்ப் பாணம் நோக்கிச் செல்கின்ற இரு அரச பேருந்துகள் போட்டிகளுக்கு மத்தியில் சேவையில் ஈடுபட்டு வரு கின்றன எனவும் தெரிவிக்கப்படு கிறது.

இதனால் இடையிடையே பேரு ந்துக்காக காத்திருக்கும் பயணி களை ஏற்றாமல் விட்டுச் செல்வ தாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக அரச பேருந்துகளுக் கான கட்டணம் மாதாந்த சிட்டை வைத்திருக்கும் பாடசாலை மாண வர்கள், வேலைக்குச் செல்வோர் மற்றும் வைத்தியசாலைக்கு செல் வோர் எனப் பல பொதுமக்கள் பேரு ந்துகளுக்காக காத்திருக்கிறார்கள்.

ஆனால் போட்டி காரணமாக குறித்த பகுதியில் சேவையில் ஈடுப டும் பேருந்துகள் இடையிடையே நிற்கும் பயணிகளை ஏற்றாமல் சென்று விடுகின்றது.

அரச பேருந்துகளின் நேரக் கட்டுப்பாட்டுக்கமைய மாணவர்கள், ஊழியர்கள் என பல தரப்பட்டவர் களும் பேருந்துகளுக்காக காத்தி ருப்பார்கள்.

ஆனால் இவ்வாறான சம்பவ ங்கள் இடம்பெறுவதால் பாடசாலை களுக்கோ அலுவலகங்களுக்கோ நேரம் தாழ்த்தி செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அனைத் துப் பயணிகளும் குற்றஞ்சாட்டு கின்றனர்.

இவ்வாறான செயற்பாட்டால் பாடசாலைகள், அலுவலகங்கள் மற் றும் வைத்தியசாலைகள் என்பவற் றில் பல்வேறு இடர்பாடுகளை எதிர் நோக்கி வருவதாக சம்பந்தப்பட்ட பயணிகள் தெரிவித்துள்ளனர்.

எனவே தற்காலிகமாக நிறுத்தப் பட்டுள்ள யாழிலிருந்து உசன் வரை செல்லும் இரவு 8 மணி நேர பேரு ந்து சேவையை மீண்டும் ஆரம் பிக்க வேண்டுமெனவும் பருத்தித் துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் செல்லும் பேருந்துகள் சீரான முறையில் சேவையில் ஈடுபட வேண்டும் எனவும் அரச பேருந் துகளை நம்பி பயணங்களை மேற் கொள்ளும் பயணிகள் சம்பந்தப் பட்ட அதிகாரிகளுக்கு வேண்டு கோள் விடுத்துள்ளனர். (இ-85)

## நவராத்திரி விழா ஆரம்ப நிகழ்வும் இறுவெட்டு வெளியீடும்

யாழ்.அரியாலை ஸ்ரீசரஸ்வதி அம்பாள் ஆலய நவராத்திரி விழா வின் ஆரம்ப நிகழ்வும் இறுவெட்டு வெளியீடும் இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு ஆலய அறங்கா வலர் கவிஞர் வே.ஐ.வரதராஜன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதன்போது விசேட சொற்பொழி வினை வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் சைவப்புலவர் சைவசிந்தாந்த பண்டிதர் செ.கந்த சத்தியதாசன் ஆற்றவுள்ளார்.

தொடர்ந்து அமரர் சு.நாகமணி ஞாப கார்த்த அருள் மழையே அரிய கலை வாணியே எனும் இறுவெட்டு வெளி யீட்டு நிகழ்வு இடம் பெறவுள்ளது. இவ் இறுவெட்டுகளை செ.கந்தசத்திய தாசன் வெளியிட்டு வைக்கவுள்ளார்.

ஏற்புரையை அல்வையூர் வெற்றி. துஸ்யந்தன் வழங்குவதுடன் சிற ப்புச் சொற்பொழிவினை ஆசிரியை திருமதி.பிறேமலதா பாரதிதாசன் வழ ங்கவுள்ளார். சிறப்பு நிகழ்வாக அக் ஷயா கௌரிஹாசனின் நடன நிக ழ்வும் இடம்பெறும்.

எனவே அனைவரையும் கல ந்து கொள்ளுமாறு நிகழ்வின் ஏற் பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.(இ

# வருத்தப்படாத வாலிபர் சங்கம் மருத்துவ முகாம் நடத்தியுள்ளது




(மானிப்பாய்)

யாழ்.இளவாலை வருத்தப்படாத வாலபர் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த 21 ஆம் திகதி இளவாலை வைத்தியசாலையில் இடம்பெற்ற மருத்துவ முகாமில் 500இற்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்ட னர்.

அமரர்களான திருமதி சிவ ராஜாரத்னம் தம்பதிகளின் ஞாப கார்த்தமாக அவர்களது மகன் சிவமோகனின் நிதிப்பங்களிப்புடன் இம் மருத்துவமுகாம் இடம்பெற் றது.

ஆரம்ப நிகழ்வை சிவஸ்ரீ ராம பாலச்சந்திர குருக்களும் அருட் தந்தை யேசுதாஸ் அடிகளாரும் ஆசியுரைகளுடன் ஆரம்பித்து வைத்துள்ளனர்.

இந்நிகழ்வில் வைத்திய நிபு ணர் பேரானந்தராஜா, தெல்லிப் பழை ஆதார வைத்தியசாலையின் வைத்திய நிபுணர் பிரதீபன், இள வாலை பிரதேச வைத்தியசாலை யின் முன்னாள் வைத்திய நிபுணர் கணேசலிங்கமும் யாழ். பல்க லைக்கழகத்தின் மூன்றாம், நான் காம் வருட மருத்துவ பீட மாண வர்கள் 15 பேர், அவர்களோடு 2 வைத்திய ஆய்வுகூட பரிசோத கர்கள் மற்றும் நான்கு தாதியர்கள் மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்டனர். (இ-23)




## நினைவு தினக் கூட்டம்

இடதுசாரி இயக்கத்தின் இரண் டாம் தலைமுறையைச் சேர்ந்தவரும் இலங்கைவர்த்தக ஊழியர் சங்க முன்னாள் பொதுச்செயலாளரு மான தோழர் பாலதம்புவின் நினைவு தினக்கூட்டம் யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது. (இ

## முதுதொழில் நிர்வாகமாணி நிதியியலில் சிறப்புப் பட்டம்

இலங்கைகணக்காய்வாளர்தலை மையபதியின் யாழ்ப்பாண அலுவ லகத்தின் கணக்காய்வு அத்தியட்ச கராக பணியாற்றும் க.பிரதீபனுக்கு இன்று ஸ்ரீஜயவர்த்தனபுர பல் கலைக்கழகத்தால் முதுதொழில் நிர்வாகமாணி நிதியியலில் சிறப் புப் பட்டம் வழங்கி கௌரவிக்கப்ப டவுள்ளது.

இவர் விரிவுரையாளர், கணக்கா [illegible] டத்தக்கது. (இ

## யாழிலிருந்து

# தலைமைத்துவ பயிற்சிக்கான விசேட பேருந்துச் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக புதிய மாணவர்களுக்கு மின்னேரியா, மாதுறுஓயாவில் நடைபெறும் தலை மைத்துவ பயிற்சிக்கு செல்வதற் காக விசேட பேருந்து சேவை எதிர் வரும் ஒக்டோபர் மாதம் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.30 மணி தொடக்கம் மாணவர்களின் வருகைக்கு ஏற்ப யாழ்.மத்திய பேரு ந்து நிலையத்திலிருந்து மின்னே ரியா, மாதுறுஓயா வரை சேவை யாற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டி ருக்கின்றன.

எனவே தலைமைத்துவ பயிற் சிக்கு செல்லும் மாணவர்கள் யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் தங் களது பயண முற்பதிவினை மேற் கொள்ளலாம் என இலங்கை போக் குவரத்து சபையின் யாழ்ப்பாண சாலை முகாமையாளர் அறிவித் துள்ளார். (இ

# தொழிற்கற்கை நெறிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

யாழ்.கரவெட்டி பிரதேச செயலக பிரிவில் அலுமினியம் கட்டுமானம், வீட்டு மின்னிணைப்பு மற்றும் நீர்க் குழாய் பொருத்துதல், குளிர்சாதன உபகரணம் திருத்துதல் போன்ற பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்ப ங்கள் கோரப்படுகின்றன.

இப்பயிற்சி நெறிகளை பூர்த்தி செய்பவர்கள் தேசிய தொழில் தரா தரப்பத்திரச் (NVQ) சான்றிதழினை பெற் றுக்கொள்ள முடியும்.

மேற்படி பயிற்சி நெறிகளில் இணைய விரும்பும் விண்ணப்பதா ரிகள் தமது பெயர், முகவரி உள் ளிட்ட சுயவிபரக்கோவையினை எதிர் வரும் ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் கரவெட்டி பிரதேச செயலகத்தின் திறன்அபிவிருத்தி உதவியாளரிடம் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுவதுடன் ஏனைய தொழிற்கற்கைநெறிகள் பயில்வது தொடர்பில் அதற்கான ஆலோச னைகளையும் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிவசிறி அறிவித்துள் ளார். (இ-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் ஜனநாயகம் இதுதானா?





(கொழும்பு)

பதுளை, மொனராகலை மாவட்டங்களில் ஆளுங்கட்சி கட்டவிழ்த்துவிட்டுள்ள வன்முறைகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றுள்ளது.

ஊவா மாகாண சபைத் தேர்தல் பின்னடைவு காரணமாக ஆளுங்கட்சியினர் கடும் ஆத்திரமடைந்துள்ளனர். இதன் காரணமாக எதிர்க்கட்சிகளின் வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மீது தாக்குதல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

இந்தத் தாக்குதல்களின் பின்னணியில் பாதுகாப்புத் தரப்பினர் இருப்பதாக பொது மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். தாக்குதலை மேற்கொள்ளும் தரப்பினர் பெரும்பாலும் பாதுகாப்புத் தரப்பினர் பயன்படுத்தும் டிபெண்டர் வாகனங்களில் வருவதே அதற்கான காரணமாக உள்ளது.

இந்நிலையில் பாதுகாப்புத் தரப்பினரை பயன்படுத்தி பொதுமக்கள் மீது ஆளுந்தரப்பு கட்டவிழ்த்து விட்டுள்ள வன்முறைக்கு எதிராக மொனராகலையில் ஆர்ப்பாட்டமொன்று நேற்றுநடைபெற்றுள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் டிபெண்டர் சண்டியர்கள் எங்களுக்கு வேண்டாம், மகிந்தவின் ஜனநாயகம் இதுதானா என்பது போன்ற சில கோசங்களை எழுப்பினர். (இ)

## கட்டடத் திறப்பு விழாவும் நினைவுத்தூபி திறப்புவிழாவும்

(முல்லைத்தீவு)

மு/கள்ளப்பாடு அ.த.க.பாடசாலை கட்டடத் திறப்பு விழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் செல்லையா இரவீந்திரராசா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா கலந்துகொண்டு பாடசாலை கட்டடத்தை திறந்து வைப்பார்.

முல்லைத்தீவில் கடந்த 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி இடம்பெற்ற ஆழிலைப் பேரலையின் போது உயிர்நீத்த இப்பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்களுக்கான சுனாமி நினைவுத் தூபி ஒன்று அன்றையதினம் திறந்து வைக்கப்படவுள்ளது. (2-267)

## பாகிஸ்தானில் குண்டு வெடிப்பு

பாகிஸ்தானில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் குறைந்தபட்சம் மூவர் கொல்லப்பட்டுள்ளதுடன் 9 பேர் காயமடைந்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

வட-மேற்கு பாகிஸ்தானின் பெஷ்வாரில் புகையிரத நிலையத்துக்கு அருகில் இந்தக் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

துணை இராணுவ எல்லைப்புற படைப் பிரிவின் தொடரணி இதன் இலக்காக இருந்ததாக அந்த நாட்டு அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (இ

## இலங். சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதி மகிந்தவுக்கு கடிதம்

(கொழும்பு)

மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கான சட்டத்தரணிகள் நியமிக்கப்படும் செயற்பாடுகள் சம்பந்தமாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

மேன்முறையீட்டு சட்டத்தரணிளை நியமிக்கும் அனுமதிகளை பெற வேண்டிய நபர்கள் சம்பந்தமாகவே இந்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேன் முறையீட்டு நீதிமன்ற சட்டத்தரணிகளை நியமிக்கும் போது பிரதம நீதியரசர், சட்டமா அதிபர், சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரின் அனுமதியின் கீழ் இந்த நியமிப்புகளை மேற்கொள்ளுமாறு சட்டத்தரணிகள் சங்கம் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் இந்த நியமனங்கள் வழங்கப்படும் போது தரப்படுத்தலுக்கு மூன்று சந்தர்ப்பங்கள் இருப்பது குறித்தும் ஆராய்ந்து பார்க்குமாறும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (இ)


### வேலைவாய்ப்பு

உங்களின் கனவு எங்களின் பொறுப்பு. கல்வி தகைமை சிங்களம் அவசியமில்லை. பிரதான 195 தொழிற்சாலைகளில் 500 இற்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புக்கள். (உற்பத்தி/ லேபல்/ பொதியிடல்/ தரம்பிரித்தல்) வயது 18-50 ஆண்/ பெண் சம்பளம் 24000/= 35000/= வரை. விவாகமானவர், குழுக்கள், நண்பர்கள் ஒரே தொழிற்சாலைகளில் வருகை. அன்றே வேலை மேலதிக தகவல்களுக்கு இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

முல்லைத்தீவு- 077 4430166 யாழ்ப்பாணம்- 077 1116770
கிளிநொச்சி-077 4567082 வவுனியா- 077 8304013 (சி-8537)

### நிரந்தர வேலைவாய்ப்பு

உங்களுடைய திறமைக்கு ஏற்ற 18000/=- 38000/= சம்பளம் (கொழும்பு/ மயகம/ களனி/ கொட்டாவ/ பிலியந்தலை/ ஓமாஹம/ கடவத்தை/ தெஹிவளை/ ஜாஎல/ கட்டுநாயக்க/ நிட்டம்புவ/ (ஜேம், டொபி, கோடியல், ஸ்டிக்கர், காபெட், கிளவுஸ், ஆடை உற்பத்தி, லேபல், பொதியிடல், Loading Unloading பிரிவுக்கு வயது 18-50 ஆண், பெண் தேவை. குழுவினர் இணைத்துக் கொள்ளப்படுவீர்கள்.

(சி-8556) தொடர்பு:- 077 4307222

### வேலைவாய்ப்பு

நிரந்தர வேலை ஒன்றினை பெற இன்றே தொடர்பு கொள்ளுங்கள். கொழும்பை அண்மித்த பிரதேசத்தில் ஜேம்/டொபி/ பிஸ்கட்/ நூடில்ஸ்/ பால்மா/ மாபிள்/ கிளவுஸ் போன்ற பல தொழிற்சாலைகளுக்கு உற்பத்தி / லேபல்/ பொதியிடல்/ களஞ்சிய பிரிவுக்கு 17-55 வயது ஆண்/ பெண் தேவை. சம்பளம் 18000=, 25000/= ,38000/= உணவு+ தங்குமிடம் குறைந்த விலைகளில் (குழுக்கள் நண்பர்கள் ஒரே தொழிற்சாலையில்) வருகை அன்றே வேலை.

(சி-8557) தொடர்புக்கு:- 077 4805891


## நவராத்திரி பாமாலை

நவராத்திரி நன்னாளின் முதல் நாளே
உன்நாமம் சொல்கிறது
விளைகின்ற மண்ணில்
துளிர்கின்ற குருத்துகளில்
உன் வீரம் என்றும் அடிப்படையே
காலமெல்லாம் மானிடம் நடந்தாலும்
வீரம் எனும் ஆயுதம் இல்லையேல்
வெற்றி சூனியமாகி விடும்
வாழ்க்கையம்மா இது....

ப.சானுகா
(யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)




### கல்யாண மாலை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 32 1/4
உயரம்: 5'11"
தகைமை/தொழில்: A/L/ தனியார் வேலை
தொ.இ: B/3631

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 23 செவ் 7 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்
தொ.இ: B/3636

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: சதயம் 3
கி.பா: 38
உயரம்:5'1"
தகைமை/தொழில்:A/L(கனடாPR)
தொ.இ: B/3641

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 1
கி.பா: 56
உயரம்: 6'2"
தகைமை/தொழில்: பொறியியலாளர்
தொ.இ: B/3642

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 2
கி.பா: 25
உயரம்: 5'
தகைமை/தொழில்: அரச தொழில்
தொ.இ: G/3619

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 2
கி.பா: 36
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/3621

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: விசாகம் 3
கி.பா: 53 1/4 செவ் 8 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: ஆசிரியர்
தொ.இ: G/3623

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 23 1/4
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BSC/ ஆசிரியர்
தொ.இ: G/3626

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண சபையூடாக வாழ்வாதார உதவிகள்!

## நலன்புரி நிலைய மக்கள் முதலமைச்சரிடம் கோரிக்கை

நாம் எமது சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்படும் வரை வடக்கு மாகாண சபை எமக்கு வாழ்வாதார உதவிகளினை வழங்க வேண்டுமென வடமாகாண முதலமைச்சரிடம் சுன்னாகம் சபாபதிப்பிள்ளை முகாம் மக்கள் கோரியுள்ளனர்.

எமக்கான வாழ்வாதார உதவிகளினை யாரும் வழங்கா விட்டால் நாம் பட்டினியால் இறக்கவும் நேரிடலாம் எனவும் அம் முகாம் மக்கள் உருக்கமாக தெரிவித்தனர்.

வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங் கியுள்ள மக்களிற்கு புலம் பெயர் தமிழர்களால் வழங்கப்பட்ட உதவிப் பொருட்களினை கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சுன்னாகம் சபாபதிப்பிள்ளை முகாமில் நடை பெற்றது.

இதில் கலந்து கொண்ட முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மக்களிற்கான உதவிகளினை வழங்கிய தனையடுத்தே மக்களினால் மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினரால் எமது காணிகள் பிடித்து வைக்கப்பட்டுள்ள நிலையில் நாம்24வருடங்களுக்குமேலாகசொந்த இடத்திலேயே அகதிகளாக அடி ப்படை வசதிகளற்ற நிலையில் நலன்புரி முகாம்களில் வாழ்ந்து வருகின்றோம்.

கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் என அனைத்திலும் மிகவும் பின் தங்கிய நிலையிலேயே வாழ்ந்து வருகின்றோம். முகாம்களில் இருப்பத னால் தொழில் முயற்சிகளும் மேற்கொள்ள முடியாத நிலை யிலுள்ளோம்.

இதனால் எமது அன்றாட வாழ்க்கை யினைக்கூட நடத்த முடியாத நிலையில் வறுமைக் கோட்டின்கீழ் வாழ்ந்து வருகின்றோம்.

எம்மை எமது சொந்த நிலங்களில் மீள்குடியேற்றும் வரையிலாவது வடமாகாணசபை எமக்கு வாழ்வாதார உதவிகளினை வழங்க வேண் டும்.

மேலும் எமது சொந்த நிலங்களில் எம்மை மீள்குடியேற்றுவதற்குரிய நடவடிக்கைகளினையும் வட மாகாண சபை மேற்கொள்ள வேண்டும் எனவும் முதலமைச்சரிடம் அம்மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-4)

# ஆதரவாளர்கள் மீதான தாக்குதலையடுத்து பதுளையில் அதிரடிப் படையினர் குவிப்பு

ஐக்கிய தேசியக்கட்சியின் ஊவா மாகாண எதிர்க்கட்சிக் தலைவர் ஹரின் பெர்னாண்டோவின் ஆதரவாளர்கள் தாக்கப்பட்டமையை அடுத்து பதுளை நகருக்கு விசேட அதிரடிப்படையினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்

ஹரின் பெர்னாண்டோ, தேர்தல் வெற்றியை அடுத்து தமது ஆதரவாளர்களுக்கு நன்றி தெரிவிப்பதற்காக ஹாலி-எல பிரதேசத்துக்கு சென்ற போது நேற்று அவரின் வாகனங்கள் மீதும் ஆதரவாளர்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அமைச்சர் ஒருவரது ஆதரவாளர்களே இந்த தாக்குதலை நடத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில் குறித்த இடத்திலும் பதுளையின் ஏனைய இடங்களிலும் விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 90 | 90 | 120 |
| தக்காளி | 30 | 40 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 35 | 40 | 60 |
| கோவா | 40 | 60 | 80 |
| கரட் | 60 | 60 | 120 |
| பூசணி | 20 | 30 | 40 |
| புடோல் | 60 | 80 | 60 |
| வாழைக்காய் | 80 | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 40-90 | 70 | 60-100 |
| பெரிய வெங்காயம் | 70 | 100 | 80 |
| பாகற்காய் | 100 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 90 | 50 | 80 |
| பயற்றங்காய் | 80 | 60 | 100 |
| லீக்ஸ் | 140 | 80 | 120 |
| பீற்றூட் | 60 | 40 | 80 |
| கறிமிளகாய் | 100 | 30 | 100 |
| முருங்கைக்காய் | 40 | 80 | 80 |
| போஞ்சி | 160. | 120 | 140 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 | 60 |
| கீரை - 1 பிடி | 15 | 20 | 20 |
| தேசிக்காய் | 140 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 15-35 | 30 | 25-35 |
| இராசவள்ளி | 140 | 100 | 100 |

# லங்கா சிமென்ற் நிறுவனத்தில் பணியாற்றிய 57பேருக்கு பணிக்கொடை வழங்கப்படவுள்ளது

(யாழ்ப்பாணம்)

லங்கா சீமென்ற் நிறுவனத்தில் பணியாற்றியோருக்கான பணிக் கொடை நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை காலை 10 மணிக்கு பண்ணை வீதியில் அமைந்துள்ள மாவட்டத் தொழில் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

இப் பணிக்கொடையினை பெறவுள்ளவர்கள் மாவட்ட தொழில் அலுவலகத்திற்கு கிராமசேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டையின் நிழற்பிரதியுடன் சமுகமளிக்குமாறு யாழ்.மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர் நீலலோஜினி ஜெகதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதேவேளை காசோலையினை பெற்றுக் கொள்ளவுள்ள பணியாளர்களின் பெயர் விபரமும் ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது

எம்.தேவகுமார், எஸ். சிறிநாதன், ரி.தியாகலிங்கம், எஸ். லோகநாதன், ஏ. தவராஜா, எஸ். தேவலோகேஸ் வரன், எஸ்.சிவராஜகுமார், எஸ். நித்தியானந்தன், ஏ.செல்வானந் தம், ரி.தயானந் தன், எம்.ஜோன் பற்றிக், ஜீ.அன்ரன் மகேசன், என். சண்முகரட்ணம், பி.எஸ். விஜயகு மார், கே.குகதாசன், எஸ். யோகேஸ் வரன், ரி.பரராஜசிங்கம், எஸ்.வரதப வன், டபிள்யூ. விக்னேஸ்வரராஜா, ஏ.பவளநாதன், ரி.குணசேகரம், கே.வைரவநாதன், கே.சிவராஜா, எம்.செல்வரட்ணம், ரி.கணேசமூர்த்தி, எஸ்.வேலுசாமி, எஸ். நாகேஸ்வரன், கே.திருக்குமரன், எம்.பி.குணரட்ணம், ரி.வரதராஜன், எஸ்.பாலசிங்கம், ஆர். இராஜகுமார், வி.சதானந் தன், எம். ஞானேந்திரன், கே.தவராஜா, ரி.வசந்தராஜா, கே.சிவலோகநாதன், எம்.புவனேஸ்வரன், ரி.வேல்முருகன், ஆர்.நாகராஜா, கே.மகாதேவன், கே.மனோகரன், கே. நவரட்ணம், ரி.தயாளகுமார், ரி.யோகேஸ்வரன், ஜே.ரட்ணபோஸ், பி.செல்வ நாயகம், எம்.கணேசலிங்கம், வி.அருளானந்தம், பி.வரதராஜா, என்.இராஜலிங்கம், எஸ். தேவகுணாளன், எஸ்.வாமதேவன், என்.சந்திர சேகரம், எஸ்.பஞ்சலிங்கம் ஆகியோரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 145

ராகுலன் பாலா




கோபி பிரஜீவ்




மதீசன் கணேஷ்

ஒருவன் ஒரு மகானிடம் சென்று, "ஐயா, நான் திராட்சைப்பழம் சாப்பிடலாமா?" என்று கேட்டான். "தாராளமாக சாப்பிடலாம்" என்றார் மகான். "தண்ணீர் குடிக்கலாமா?" என்று கேட்டான் அவன். "குடிக்கலாம்" என்றார் மகான். "சிறிது புளிப்புப் பொருள்..." என்று இழுத்தான் அவன். "தவறேதும் இல்லை... சாப்பிடலாம்" என்றார் மகான். "இவை மூன்றையும் சாப்பிடலாம் என்கிறீர்கள்... இவை மூன்றையும் சேர்த்து தானே மது தயாரிக்கப்படுகிறது... அதை ஏன் சாப்பிட வேண்டாம் என்கிறீர்கள்?" என்றான் அவன்.

உடனே மகான் அவனைப் பார்த்து கேட்டார், "நான் உன் தலையில் சிறிது மண்ணைப் போட்டால்..." "சிறிதும் கவலைப்பட மாட்டேன்" என்றான் அவன். "சிறிது நீரை தெளித்தால்...?" என்று மீண்டும் கேட்டார் அவர். "அப்பொழுதும் கவலைப்பட மாட்டேன்" என்றான் அவன். "அப்படியானால் , நான் அந்த மண்ணையும், நீரையும் ஒன்றாகச் சேர்த்து, இரண்டையும் தீயில் சுட்டு உருவாக்கப்பட்ட செங்கல்லினால் உன் தலையில் அடித்தால்....?? பதில் சொல்லவில்லை அவன்.

சர்மி சர்மிலா




ரத்தினசபாபதி பாலராஜா



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மோடி தலைமையிலான மத்திய அரசு வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை

**இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கும் தமிழக மீனவர் பிரச்சினைக்கும் தீர்வு காணும் வரை ஐ.நா. கூட்டத்தில் ஜனாதிபதி மகிந்தவை உரையாற்ற அனுமதிக்கக்கூடாது**





இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி. அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என முன்னாள் மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற போரில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டதும், உடைமைகளை இழந்து பாதிக்கப்பட்டதும் அரசின் மனித உரிமை மீறல் செயல் என்பது அனைவரும் அறிந்த ஒன்று. அது குறித்து ஏற்கனவே பல்வேறு உலக நாடுகள் கண்டனம் தெரிவித்திருக்கின்றன.

இது குறித்து ஐ.நா.சபையில் தீர்மானம் வந்த போது மனித உரிமை மீறல் பிரச்சினை தொடர்பான விசாரணை செய்வதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்த குழு இலங்கைக்கு சென்று முழு விசாரணை நடத்துவதற்கு இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அனுமதி கொடுக்கவிலலை. அங்குள்ள தமிழர்களுக்கு நம்பிகை ஏற்படும் வகையில் பிரச்சினையை தீர்ப்பதற்கோ, பாரபட்சமின்றி விசாரணை நடத்துவதற்கோ இலங்கை ஜனாதிபதி முன் வராதது என்பது அவரது மனிதாபிமானமற்ற செயலையே காட்டுகிறது.

இலங்கை தமிழர் பிரச்சினைக்கும், தமிழக மீனவர் பிரச்சினைக்கும் நிரந்தர தீர்வு ஏற்படும் வரையில், மனித உரிமை மீறல் குறித்த விசாரணைக்கு உட்பட்ட இலங்கை ஜனாதிபதி ஐ.நா.வில் நடைபெறும் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுவது என்பது தமிழக மக்களின் ஒட்டு மொத்த உணர்வுகளுக்கு எதிரானதாகும்.

தமிழக மீனவர்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்போம் என்று தேர்தல் நேரத்தில் மோடியும், பா.ஜ.க.வும் வாக்குறுதி அளித்தார்கள். பிரதமர் மோடியின் பதவி ஏற்பு விழாவில் இலங்கை ஜனாதிபதிக்கு செங்கம்பள வரவேற்பும் அளிக்கப்பட்டது.

ஆனால் ஆட்சிக்கு வந்து 100 நாட்களுக்கு மேலாகியும் மீனவர்கள் பிரச்சினை தீர்ந்த பாடில்லை. மீனவர்களை கைது செய்வதும், துன்புறுத்துவதும் அவர்களது வலைகளை அறுப்பதும், படகுகளை சிறைபிடிப்பதும் தொடர்ந்து நடைபெற்று கொண்டிருக்கிறது.

மீனவர்களை விடுதலை செய்தால் மட்டும் போதாது, அவர்களின் வாழ்வாதாரமான படகுகளையும் இலங்கை அரசு திருப்பி தராமல் இருப்பது ஒரு புறம், மறுபுறம் தமிழக மீனவர்களின் படகுகளை ஏலம் விடும் செயலில் ஈடுபடுவதும் மிகுந்த கண்டனத்துக்குரியது. இது எந்த விதத்தில் நியாயம் என கேட்க விரும்புகிறேன். 10 படகுகளின் வலைகளை இலங்கை கடற்படை சேதப்படுத்தியிருக்கின்றது.


மத்திய அரசும் இதில் மெத்தன போக்கையே கடைப்பிடிப்பது எனபது தமிழக மீனவர்கள் மத்தியில் மிகுந்த கொந்தளிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. மேலும் தமிழக மீனவர்களின் பிரச்சினைக்கு எந்த தீர்வும் ஏற்படவில்லை. இலங்கையில் வாழும் இலங்கை தமிழர்களுக்கு 13ஆவது அரசியல் சாசனப்படி, சிங்களவர்களுக்கு உரிய அனைத்து உரிமைகளும் வழங்கப்படாமல் மறுக்கப்படுவது என்பது இலங்கை இந்தியாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறும் செயலாகும்.

இலங்கை தமிழர்களுக்கு சம உரிமை, சம அந்தஸ்து, மறு குடியமர்த்துதல், இந்தியாவிலிருந்து இலங்கை தமிழர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணங்கள் முழுமையாக வழங்கப்படாதது போன்றவை கண்டிக்கத் தக்கதோடு, மத்திய அரசும் இவற்றை கண்காணித்து நிறைவேற்ற உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடந்த ஆட்சியில் இலங்கையில் நடைபெற்ற சார்க் மாநாட்டில் அப்போதைய பாரத பிரதமர் கலந்து கொள்ள கூடாது என்று தமிழக மக்களின் உணர்வுகளை பிரதிபலிக்கும் வகையில் நாங்கள் வேண்டுகோள் விடுத்த போது, அதில் அன்றைய பிரதமர் கலந்து கொள்ளாமல் இருந்ததை நினைவுபடுத்த விரும்புகிறேன். இவ்வாறு அவர்மேலும் கூறியுள்ளார். (இ)

# அமெரிக்க ஜனாதிபதியை விடவும் மகிந்தவுக்கு அதிகளவு அதிகாரம்

## முன்னாள் நீதியமைச்சர் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

நாடாளுமன்றை கைப்பொம்மையாக்கும் ஜனாதிபதி முறைமையை மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென லங்கா சமசமாஜ கட்சியின் முன்னாள் செயலாளரும், முன்னாள் நீதி அமைச்சருமான பெற்றி வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதன் மூலம் மட்டும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இரத்து செய்துவிட முடியாது.

ஜனாதிபதி தேர்தலை நடத்தாது நாடாளுமன்ற அரசியலமைப்பில் மாற்றம் செய்யப்பட வேண்டும்.

அரசியலமைப்பில் மாற்றம் கொண்டு வந்து, நாடாளுமன்றிற்கு பொறுப்புச் சொல்லக்கூடிய ஓர் பிரதமர் ஆட்சி முறைமை உருவாக்கப்பட வேண்டும்.

நிறைவேற்று அதிகாரத்தின் ஊடாக ஜனாதிபதிக்கு அதீத அதிகாரங்கள் வழுங்கப்பட்டுள்ளன.

அரச தலைவர், அமைச்சரவையின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர்எல்லோரையும் எந்த நேரத்திலும் நாடாளுமன்றிற்குள் பிரவேசிக்க செய்ய ஜனாதிபதிக்கு அதிகார முண்டு.

சகல ஆணைக்குழுக்களை நிறுவும் அதிகாரமும் ஜனாதிபதிக்கே உண்டு.

இதனால் இன்று நாடாளு மன்றம் ஓர் கைம்பொம்மையாக மாற்றமடைந்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களது தொகுதிகளில் வேலை செய்ய முடியாத நிலைமை காணப்படுகின்றது.

மாகாணசபைகளின் ஊடாக ஜனாதிபதியே வேலைகளை செய்கின்றார்.

அமெரிக்க ஜனாதிபதியை விடவும் இலங்கை ஜனாதிபதிக்கு அதிகளவு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆட்சி முறைமையில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டியது அவசி யமாகின்றது.

ஐக்கிய தேசியக்கட்சியை ஆட்சியில அமர்த்துவது பிரச்சினைகளுக்கு தீர்வாக அமையாது என பெற்றி வீரக்கோன் சிங்களப் பத்திரிகையொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# தோல்வியை தாங்காமல் ஆதரவாளர் தற்கொலை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் தோல்வியை தாங்கிக் கொள்ள முடியாத ஆதரவாளர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

அண்மையில் நடைபெற்று முடிந்த ஊவா மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியை கைப்பற்றவில்லை என்ற கவலையில் இவ்வாறு நஞ்சு அருந்தி தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

மொனராகல வெஹரயா என்னும் இடத்தைச் சேர்ந்த 50 வயதான ஆர்.எம். சுமணதாச என்பவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

நஞ்சு அருந்திய சுமணதாசவை வெல்லவாய வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக அவரது மனைவி தெரிவித்துள்ளார்.

2009ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி மாகாணசபைத் தேர்தலில் தோல்வியைத் தழுவிய போதலும், சுமணதாச ஊரை விட்டு வெளியேறி நீண்ட காலத்தின் பின்னரே ஊருக்கு வந்ததாக அவரது மனைவி குறிப்பிட்டுள்ளார். (இ)

# ஊவா மாகாண தேர்தல் முடிபுகளை ரத்து செய்யக்கோரி ஐதேக வழக்கு

இலங்கை அரசாங்கம் தேர்தல் சட்டத்தை மீறிச் செயற்பட்டது என்ற அடிப்படையில் ஊவா மாகாணசபை தேர்தல் முடிவுகளை இரத்துச் செய்ய வேண்டும் என்று கோரி ஐக்கிய தேசியக் கட்சி வழக்கு தாக்கல் செய்யவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி.பெரேரா இதனை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கட்சி தற்போது ஆராய்ந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கம் பல்வேறு தேர்தல் மீறல் செயல்களை மேற்கொண்டதன் காரணமாகவே ஊவா மாகாணசபை தேர்தலில் வெற்றி பெறமுடிந்திருக்கிறது.

ஊவா மாகாண சபை தேர்தலில் ஆளும் கட்சி 19 ஆசனங்களில் வெற்றி பெற்றது.

ஐக்கிய தேசியக் கட்சி 13 ஆசனங்களையும் ஜே.வி.பி 2 ஆசனங்களையும் பெற்றிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## பிரிவுத்துயர் பகிர்வு



**கணபதிப்பிள்ளை குகநாதன்**

மாதகலைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியா Canberra ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை குகநாதன் கடந்த 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு No 38, Loveday Crescent, Casey, Canberra என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

**பொன்னுத்துரை அருணாகரன்**



உடுப்பிட்டி நாவலடியைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் Bern Trubschachen ஐ வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை அருணாகரன் கடந்த 17 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு Friedhof 2, 3400 Burgdorf, Switzerland என்னும் முகவரியில் நடைபெறும்.




**சின்னட்டி இரத்தினம்**

கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னட்டி இரத்தினம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று கைதடி கிழக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் ஊத்தல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







- 622 - முகமது நபி மெக்காவிலிருந்து மதினாவுக்கு இடம் பெயர்ந்தார் (ஹிஜ்ரா).
- 1664 - நெதர்லாந்து நியூ ஆம்ஸ்டர்டாமை இங்கிலாந்துக்குக் கொடுத்தது.
- 1674 -பேரரசர் சிவாஜியின் இரண்டாவது முடிசூட்டு விழா (தாந்திரீக சடங்கு) இடம்பெற்றது.
- 1789- அமெரிக்க உச்சநீதிமன்றம் நிறுவப்பட்டது.
- 1799 - கட்டபொம்மனும் இன்னும் 6 பேரும் புதுக்கோட்டை அரசன் விஜயரகுநாத தொண்டைமானால் கைது செய்யப்பட்டுப் பின்னர் செப் 29 இல் ஆங்கிலேயரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.
- 1840 - இலங்கை வங்கி அமைக்கப்பட்டது.
- 1841 - புருணை சுல்தான் சரவாக் மாநிலத்தை பிரித்தானியாவுக்குக் கொடுத்தான்.
- 1869 - கறுப்பு வெள்ளி: ஜேய் கூல்ட், ஜேம்ஸ்பிஸ்க் என்ற இரு செல்வந்தர்களின் சூழ்ச்சியை முறியடிக்க அமெரிக்கா பெருமளவு தங்கத்தை விற்பனைக்கு விட்டதில், தங்க விலை சரிந்தது.
- 1898 - யாழ்ப்பாணம், இணுவிலில் பெண்களுக்கான மக்லியொட் மருத்துவமனையை அமெரிக்க மிசன் அமைத்தது.
- 1906-வயோமிங்கிலுள்ள பேய்க் கோபுரம் அமெரிக்காவின் முதலாவது தேசிய நினைவுச் சின்னமாக அறிவிக்கப்பட்டது.
- 1948 - ஹொண்டா நிறுவனம் அமைக்கப்பட்டது.
- 1968 - சுவிட்சர்லாந்து ஐ.நாவில் இணைந்தது.
- 1973 - கினி-பிசாவு போர்த்துக்கலிடமிருந்து விடுதலையை அறிவித்தது.
- 1979- உலகின் முதலாவது மின்னஞ்சல் சேவையை கம்பியூசேர்வ் ஆரம்பித்தது.
- 1990 - சனிக் கோளில் பெரும் வெண் புள்ளி ஒன்று தொடர்ச்சியாக அவதானிக்கப்பட்டது.

பிறப்புகள

- 1902 - ருஹொல்லா கொமெய்னி, ஈரானிய அரசியல்வாதி (இ. 1989)
- 1936 - சிவந்தி ஆதித்தன் தினத்தந்தி உரிமையாளர் (இ. 2013)

இறப்புகள்

- 2006 - பத்மினி, தென்னிந்திய நடிகை (பி. 1932)
- 2009 - நாத்திகம் இராமசாமி, இதழாசிரியர், பகுத்தறிவாளர் (பி. 1932)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சச்சின்

## சாத்தனை நாயகனின் சரித்திரம்

74

....இந்திய அணிக்காக ஒருவர் விளையாட வேண்டும் என்றாலோ அல்லது தேர்வு ஆக வேண்டும் என்றாலோ கிரிக்கெட் வாரியத்தின் ஆதரவு அல்லது தயவு இல்லாமல் நடைபெறுவது இயலாத காரியம். கிரிக்கெட் என்பது பதினொரு நபர்கள் ஆடும் டீம் வொர்க். டீமில் இருக்கும் ஒவ்வொருவரும் தங்கள் பொறுப்புகளை உணர்ந்து கொண்டு விளையாடவேண்டும். விருப்பு வெறுப்புகளுக்கு இடம் தராமல் தனிநபர் சாதனைகளுக்கு முன்னுரிமை தராமல் குழுவின் வெற்றிக்கு உழைக்க வேண்டும். கேப்டனாக நியமிக்கப்படுபவர் இளைஞனாகக்கூட இருக்கலாம். அந்தப் பதவிக்குத் தான் முக் கியத்துவம் தரவேண்டும். நான் உன்னை விட சீனியர். நீ யார் என்னைக் கட்டுப்படுத்த என்னும் ஈகோ இருந்தால் அது அணியின் வெற்றிக்குப் பாதகமாக முடிந்துவிடும்.

எனவே, கேப்டனாக இருப்பது இருதலைக் கொள்ளி எறும்புக்குச் சமம் என்றால் அது மிகையில்லை. மத்தளத்திற்கு இரண்டு பக்கமும் இடி



என்பதுபோல் உடன் ஆடும் வீரர்களையும் அரவணைத்துச் சென்று ஊக்குவிக்க வேண்டும். அதேசமயம் பிரச்சினைகள் வந்தால் கிரிக்கெட் வாரியத்தையும் சமாதானப் படுத்தி சரிக்கட்ட வேண்டும். அதனால், நாட்டாண்மை செய்யும் கிரிக்கெட் வாரியத்தின் முன்பு பெரும்பாலும் கிரிக்கெட் கேப்டன்கள் கைகட்டி வாய்பொத்தி மௌனியாகவே இருப்பார்கள். அப்போதுதான் அவர்க்ள் கேப்டன் பதவி தப்பிப் பிழைக்கும். இது இன்றைக்கு நேற்றல்ல. நீண்டகாலமாகவே நடைபெறும் விடயம்தான்.

1997 ஆம் ஆண்டு இந்தியக் கிரிக்கெட் குழு ஏகப்பட்ட போட்டிகளில் கலந்துகொண்டது. வருடம் முழுவதும் தென் ஆப்பிரிக்கா, மேற்கு இந்தியத் தீவுகள், இலங்கை, பாகிஸ்தான், டொரென்டோ, ஷார்ஜா என தொடர் சுற்றுப் பயணங்கள், விளையாட்டு வீரர்களின் டைரிகள் நிரம்பி வழிந்தன. சுற்றுப் பயணங்கள் மகிழ்ச்சியைத் தந்தாலும் சச்சினுக்கு உள்ளூரத் தனது அணியில் உள்ள வீரர்கள் மீது முழுமையான நம்பிக்கை இல்லை. மற்றவர்களை விடுங்கள். அசார் போன்ற சீனியர்கள் சரியாக விளையாடுவது இல்லை என்ற குறை சச்சினுக்கு நீண்ட நாட்களாகவே இருந்துவந்தது. இது குறித்து ஒருநாள் அசாரிடம் கேட்டுவிட்டார். ஆனால், அசார் இதைப்பற்றி கவலைப்பட்டதாகவே தெரியவில்லை. தன்னைக் கேப்டன் பதவியில் இரு

### அதிகாரம் இல்லாத கேப்டன் பதவி!

ந்து நீக்கியது. தன்னை விட ஜூனியரான சச்சின் கேப்டனானது, ஒரு ஜூனியரின்கீழ் தான் வேலை செய்வதா என்ற தாழ்வு மனப்பான்மை இவை அசாருக்கு இருந்தது பின்னாளில் தெரிய வந்தது. மேற்கண்ட விடயங்கள் அவரது தனிப்பட்ட வாழ்க்கையில் ஏற்பட்ட பிரச்சினைகள் ஆகியவை அசாரின் கிரிக்கெட் விளையாட்டிற்கு தடைக்கற்களாக இருந்து வந்தன., அசார் ஒரு உதாரணம்தான். அவரைத்தவிர ஒருசில வீரர்களின் நடவடிக்கைகளும் இதே ரகத்தில்தான் இருந்தன.

கிரிக்கெட்தான் எனது முதல் மனைவி. கிரிக்கெட்தான் எனது சுவாசம் என்று வாழ்ந்துகொண்டிருந்த சச்சினால் தன் அணியில் இருந்தவர்களின் நடவடிக்கைகளை ஜீரணிக்க முடியவில்லை. ஆட்ட நேரத்திற்குப் பிறகு எப்படி வேண்டுமானாலும் இருங்கள். ஆனால், மைதானத்தில் ஆடும்போது நமது நாட்டுக்காக ஆடுகிறோம் என்ற ஒரே சிந்தனைதான் இருக்க வேண்டும். பொறுப்பற்ற முறையில் பந்தைத் தூக்கி அடித்து காட்ச் கொடுத்து அவுட் ஆகும்போது சச்சின் டென்ஷனாகி விடுகிறார். ஒரு சில நேரம் பந்தை எப்படி விளையாட வேண்டும் என்றுகூட ஆசிரியரைப் போல் வகுப்பு எடுக்க ஆரம்பித்துவிடுகிறார்.

**கே. ரமேஷ்** (தொடரும்)

> தனக்குத் தேவையான வீரர்களை தேர்ந்தெடுத்துக் கொள்ள சச்சின் இதை நல்ல வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ள எண்ணினார். கிரிக்கெட் வாரியத்தின் சுயரூபம் என்னவென்று கூட்டத்தின் போதுதான் சச்சின் தெரி ந்து கொண்டார். கூட்டம் ஆரம்பித்த அரைமணி நேரத்திலேயே சச்சின் புயலென வெளியே வந்துவிட்டார்!


---

# ஆத்ம ஞானத்தைத் தேடி

**ஆன்மீகம் 26**

## கவனத்தேவையை விட்டுவிடுதல்

...பாருங்கள், குழந்தைகள் விடயத்திலாவது, கோட்டையை அவர்கள் சொந்தச் சீட்டுக்கட்டில் கட்டுகிறார்கள். ஆனால், நாமோ, நமது கோட்டையை மற்றவர்களின் சீட்டுக்களையும், சான்றிதழ்களையும் வைத்தல்லவா கட்டுகிறோம்! கோட்டை நமது கட்டுப்பாட்டில் இல்லை. ஏனெனில், அது மற்றவர்களின் சான்றிதழ்களைக் கொண்டு கட்டப்பட்டிருக்கிறது.



அதனால் நாம் என்ன செய்கிறோம்? கோட்டையைப் பராமரிக்கவும், நன்றாகப் பாதுகாக்கவும், கடினமாக உழைக்கத் தொடங்குகிறோம். மக்கள் தங்கள் கையெழுத்தையும் சான்றிதழ்களையும் திரும்ப எடுத்துக் கொள்ளாத வகையில் நடந்து கொள்ளத் தொடங்குகிறோம். அவர்களது அங்கீகாரம் தொடர்ந்து கிடைக்கும் வகையில் செயலாற்றத் தொடங்குகிறோம். ஏனெனில், அவர்களது அங்கீகாரமே நமக்கு ரொட்டியும் வெண்ணையும் ஆகிறது.

ஒரு சின்னக் கதை...

ஒரு பெண்மணி அவளது கணவனுடன் கடைக்குச் சென்றாள். அவள் ஒரு மேலங்கி வாங்க விரும்பினாள். அவர்கள் பல கடைகளுக்குச் சென்றபோதிலும் அவளுக்கு விருப்பமானது கிடைக்கவில்லை. கணவன் சோர்வடைந்தான். அவன், அன்பே உனக்கு நீ என்ன மாதிரியான மேலங்கியை வாங்க விரும்புகிறாய் என்று தெரியுமா? என்று கேட்டான். மனைவி சொன்னாள். ஆம் அன்பே! செத்து விழும் மேலங்கி ஒன்றைத் தேடிக் கொண்டிருக்கிறேன், அவள் என்ன சொன்னாள் என்பது கணவனுக்குப் புரியவில்லை. அவன் கேட்டான், செத்து விழும் மேலங்கி என்பது என்ன, அன்பே? மனைவி சொன்னாள், மக்கள் அதைப் பார்த்தால் செத்து விழுந்து விடுவார்கள்!

(பலத்த சிரிப்பு)

நாம் எப்பொழுதும் எவ்வாறு மக்களிடமிருந்து சான்றிதழ்களைச் சேகரிக்கலாம் என்று பார்த்துக்கொண்டிருக்கிறோம்! நமது ஒவ்வொரு செயலும் விழிப்பற்ற நிலையில், மக்கள் அதைப் பற்றி என்ன சொல்வார்கள். அதற்கு அவர்களின் எதிர்ச்செயல் எவ்வாறு இருக்கும் என்பது பற்றியே அமைகிறது.

உதாரணத்திற்கு ஒரு பை உங்களுடைய பட்ஜெட்டிற்குள் வரலாம். அது மிகவும் பயனுள்ளதாகவும் இருக்கலாம். ஆனால், விழிப்பற்ற நிலையில் நீங்கள் அந்தப் பையை வைத்திருப்பதாகவும் மக்கள் அதைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்றும் உங்கள் மனம் கற்பனை செய்து பார்க்கிறது. பிறகு நீங்கள் அந்தப்பையை வைத்திருப்பதை மக்கள் பார்ப்பது ஒரு நல்ல அபிப்பிராயத்தைத் தராது என்று' தீர்மானிக்கிறீர்கள். மீண்டும் வேறொன்றை தேர்ந்தெடுக்கத் தொடங்குகிறீர்கள்! ஆனால், நீங்கள் சான்றிதழ்களைத் தான் தேடிக்கொண்டிருக்கிறீர்கள் என்பதை ஒப்புக்கொள்ள மாட்டீர்கள். ஏனெனில் அது உங்களுக்குள் விழிப்பற்ற நிலையில் நடைபெறும் செயலாகும்!

**பரமஹம்ஸ சுவாமி**

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சிகள் அதிக பலமடைந்து வருவது ஜனநாயகத்தை பொறுத்தவரை சாதகநிலை



(கொழும்பு)

ஊவா மாகாண சபைத் தேர்தல் முடிபுகளின் படி ஆளும் கட்சி வெற்றியடைந்துள்ள போதிலும் எதிர்கட்சிகள் பலமடைந்து வருவது ஜனநாயகத்தைப் பொறுத்தவரை மிகவும் சாதகமாகத் தென்படுவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஊவா மாகாணசபைத் தேர்தல் பெறுபேறுகள் வெளியாகியுள்ளதையடுத்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ஹக்கீம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

இந்த நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இனவாத நடவடிக்கைகளைக் கண்டும் காணாமல் மிகவும் அலட்சியப் போக்குடன் நடந்து கொள்ளும் ஆட்சித் தலைவருக்கும் அரசாங்கத்திற்கும் எங்களது பலத்த அதிருப்தியை வெளிப்படுத்துவதற்காகவே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸும் பதுளை மாவட்டத்தில் ஜனநாயக ஐக்கிய முன்னணியின் இரட்டை இலைச் சின்னத்தில் தனித்துப் போட்டியிட்டோம்.

முஸ்லிம்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை சுட்டிக்காட்டி தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் நாங்கள் அரசாங்கத்தை மிகவும் கடுமையாக விமர்சித்தோம்.

அரசாங்கத்திற்குள் உள்ள எதிர்க்கட்சியாகவே முஸ்லிம் காங்கிரஸ் இருந்து வருகின்றது.

முஸ்லிம் மக்களுக்கு எதிரான இனவாதச் செயல்களைப் பொறுத்தவரை அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து முஸ்லிம்கள் ஏமாற்றத்தினதும் ஏக்கத்தினதும் விளிம்பில் இருப்பதால் பதுளை மாவட்டத்தில் உலமாக்களும், பள்ளிவாசல் நிர்வாகங்களும் ஊர் மக்களும் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அகில இலங்கை மக்கள் காங்கிரஸையும் இணைத்துக் கொண்டு இந்தத் தேர்தலில் தனிச் சின்னத்தில் களமிறங்கியது.

முஸ்லிம் வாக்காளர்களின் எண்ணிக்கை குறைவாகவுள்ள பதுளை மாவட்டத்தில்எமது வேண்டுகோளைஏற்றுஇன்னும்ஏறத்தாழமூவாயிரம் வாக்குகளை எங்களுக்கு அளித்திருந்தால் மாகாண சபையில் உறுப்பினர் ஒருவரைப் பெற்றிருப்போம்.

கடந்த தேர்தலை விட அதிக வாக்குகளைப் பெற்றுள்ளோம். ஆயினும் அடுத்து வரும் ஒரு தேசிய மட்டத் தேர்தலில் நாம் தீர்மானிக்கும் சக்தியாகத் திகழ்வதற்கான அறிகுறிகள் இந்தத் தேர்தலின் பின்னணியில் புலப்படுகின்றது. மலையக தோட்டத் தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான தமிழ் கட்சிகளின் ஆதரவுடன் தான் ஆளும் கட்சி இத்தேர்தலில் வெற்றி பெற்றிருக்கின்றது.

அக்கட்சிகளின் ஆதரவு இல்லையென்றால் ஆளும் கட்சியும். அரசாங்கமும் மிகப் பாரதூரமான பின்னடைவைச் சந்தித்திருக்கும். எல்லா முஸ்லிம் அரசியல் கட்சிகளும், சிறுபான்மை அரசியல் கட்சிகளும் குறுகிய வேறுபாடுகளை புறந்தள்ளி ஒற்றுமைப்படுவது காலத்தின் தேவையாக மாறியிருக்கின்றது.

விடிவை நோக்கிய பயணம் ஊவா மாகாணத்திலிருந்து ஆரம்பித்திருக்கின்றது. இந்த தேர்தலில் எங்களுக்கு தங்களது பெறுமதியான வாக்குகளை அளித்த வாக்காளர் பெருமக்களுக்கும் வேட்பாளர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் மனப் பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ஹக்கீம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## சுட்டுப் பிடிக்கப்பட்டான் ஹெரோயின் வியாபாரி



தனது காரில் ஹெரோயின் போதைப் பொருளை எடுத்துச் சென்ற நபர் ஒருவர் நேற்று முன்தினம் பொலிஸாரால் கல்கிஸையில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

வீதியில் பயணித்த காரை நிறுத்துமாறு பொலிஸார் கட்டளையிட்டனர். எனினும் சந்தேக நபர் வாகனத்தை நிறுத்தாது சென்றதால், பொலிஸார் அவர் மீது துப்பாக்கி பிரயோகம் செய்துள்ளனர்.

துப்பாக்கி சூடு நடத்திய போதும் சந்தேக நபர் வாகனத்தை கல்கிஸ்சை வரை செலுத்தி சென்றுள்ளார்.

இதனையடுத்து பொலிஸார் தமது ஜீப் வண்டியை வாகனத்திற்கு குறுக்காக நிறுத்தி சந்தேக நபரின் காரை நிறுத்தியுள்ளனர்.

குடு ருவான் என்று அழைக்கப்படும் ருவான் தம்மிக அலியாஸ் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரின் வாகனத்தில் இருந்து 900 கிராம் ஹெரோயினை தாம் கைப்பற்றியதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## எள்ளு

Botanical Name: Sesamum indicum
Family- Pedaliaceae
Eng- Gingelly
Sinh- Thala

இது உரோமங்களுடைய நிமிர் வளர் சிறு செடியாகும். எதிரிலையமைவு முனையில் மாற்றிலையமைவு பற்கள், மடல்கள் அல்லது பிளவு பட்ட இலை விளிம்பை உடையது. தனி மலர்கள் நுனியில் அல்லது இலைக்கோணங்களில் அமைந்திருக்கும். சில சமயங்களில் மஞ்சள் குறியீடு கொண்டு மற்றும் சிறிய காம்பினைக்கொண்டது. புல்லிவட்டம் 5 பாகங்களை உடையது. மகரந்த தாள்கள் 4 அல்லி வட்டம் குழல் வடிவானது. முட்கள் அற்றது விதைகள் எண்ணற்றவை. முட்டை வடிவானது. கருமை அல்லது வெண்மை நிறமுடையவை. மலர்களும் கனிகளும் வருடம் முழுவதும் இச்செடியில் உருவாக்கப்படும். மாசி, பங்குனி மாதங்களில் இச்செயற்பாடு இடம்பெறும்.

**பரம்பலும் இனவிருத்தியும்**

முக்கியமாக வெப்பமான பகுதிகளில் எண்ணெய்ப்பயிராக பயிரிடப்படுகிறது. விதைமூலம் இனவிருத்தி செய்யலாம்.

**மருத்துவப் பயன்கள்**

✦ ஒன்றிரண்டு பச்சை இலைகளை எடுத்து குளிர்ந்த நீரில் அலசினால் பச்சைத்தன்மை நீங்கும். இது புண்பட்ட கண்களை கழுவ உதவும்.

✦ 100 கிராம் இலைகளை 1200 மில்லிலீற்றர் குளிர்ந்த நீரில் ஊற விட்டு தினம் 2 வேளை 30 மில்லி லீற்றர் அளவு எடுத்து 5 நாட்கள் பருக சீதநோய் குணமாகும்.

✦ இதன் இலைகளை நன்கு கழுவி அரைத்து கட்டிகளுக்கு கட்ட அவை சீக்கிரம் பழுத்து உடையும்.

✦ இதன் பூக்களை எடுத்து துப்புரவு செய்து குடிநீர் செய்து கண்நோய் உள்ள கண்களைக் கழுவலாம்.

✦ இதன் காய்களை அதன் தோலுடன் சேர்த்துச் சுட்டுச் சாம்பலாக்கி அரித்து புண்களுக்கு தூவ புண்கள் ஆறும்.

✦ இதன் விதைகளை சுத்தம் செய்து 2 தொடக்கம் 4 கிராம் அளவு எடுத்து தேனுடன் கலந்து காலை, மாலை ஆகிய நேரங்களில் 3- 5 நாட்கள் சாப்பிடக் கொடுக்க மாதவிடாய்க்காலத்தில் ஏற்படும் வலி தீரும்.

✦ இதன் விதைகளை 30 கிராம் எடுத்து 200 மில்லி லீற்றர் நீரில் ஊறவைத்து பருக மாதவிடாய் காலத்தில் ஏற்படும் உதிர சிக்கல் தீரும்.

✦ குறிப்பு: கர்ப்பிணித்தாய்மார்கள் முதல் 5 மாதங்களில் இதனை கூடுதலாக எடுப்பதைத் தவிர்க்க வேண்டும். ஏனெனில் கருச்சிதைவை ஏற்படுத்தலாம்.

ஆனால் கர்ப்பிணித்தாய்மார் 7 ஆம் மாதத்தின் பின் பனங்கட்டி சேர்த்து துவைத்து 1, 2 உருண்டை வாரத்தில் 3 நாட்கள் சாப்பிடலாம். இதனால் இரத்தவிருத்தி உண்டாவதுடன் மலச்சிக்கலும் தீரும்.

✦ விதையை அரைத்து கொதிக்க வைத்து கட்டிகளுக்கு கட்ட அவை பக்குவமடையும்.

✦ எள்ளை சேர்த்து பக்குவம் செய்த சோற்றை உண்டால் உடல் பலம் பெறும்.

✦ எள்ளில் இருந்து பெறப்படும் நல்லெண்ணெய்யை ஓர் மேசைக் கரண்டி அளவு தினம் குடித்து வந்தால் உடல் பூரிக்கும்; தோல் வியாதிகள் வராது தடுக்கும்.

✦ நல்லெண்ணெய் (20 மி.லீ) ஒரு முட்டை வெண்கருவுடன் கலந்து பருகினால் இருமல் தணியும்.

✦ நல்லெண்ணெய்யை முட்டை வெண்கருவுடன் முகப்பருக்கள் மீது பூசி வர பருக்கள் குறையும்.


✦ தினமும் காலையில் எள் எண்ணெய்யை இரு கண்களிலும் 3 துளி வீதம் விட்டு தலையிலும் பூசி தட்டாமல் வெந்நீரில் அடுத்தடுத்து 3 நாட்கள் தலை முழுகி வர கண் சிவப்பு, கண்வலி, கண்ணில் நீர் வடிதல், கண் கூசல், மண்டைக்குத்து ஆகிய நோய்கள் தீரும்.

✦ தீச்சுட்ட புண்களுக்கு முட்டை மஞ்சள் கருவுடன் நல்லெண்ணெய்யை கலந்து பூசலாம்.

✦ நல்லெண்ணெய் 500 மில்லி லீற்றருக்கு வட்டத்துத்தி வேர்ப்பட்டை 40 கிராம் சேர்த்து அடுப்பிலேற்றி சிறு தீயாக எரித்து வேர்ப்பட்டை சிவந்ததும் இறக்கி ஆறவிட்டு முகப் பருக்களுக்கு பூச முகப்பருக்கள் முற்றாக நீங்குவதுடன் முகமும் பளபளப்பாகும்.

✦ மஞ்சள் கையாந்தகரைச்சாறு 200 மில்லி லீற்றர் மற்றும் நல்லெண்ணெய்யை 200 மில்லிலீற்றரில் கலந்து அடுப்பேற்றி சாறு வற்றியதும் இறக்கி ஆறவிட்டு அதனை பயன்படுத்தினால் முடி கருமையாகி நன்கு வளரும்.





✦ கரிசலாங்கண்ணி நல்லெண்ணெய் சேர்த்துக்காய்ச்சி தலை முழுகி வந்தாலும் சகல பித்த ரோகங்களும் தீரும்.

✦ எள்ளெண்ணெய்யும் சுண்ணாம்பு கலந்த நீரும் சமபாகத்தில் எடுத்து கலந்து வெந்தபுண் ஆவிக் கொப்புளம் மற்றும் சீழ்ப்புண்களுக்கு தடவலாம்.

✦ எள்ளெண்ணெய் மற்றும் சந்தன எண்ணெய் ஆகியவைகளை சம அளவாக கலந்து தலை வலிக்கு தடவலாம்.

✦ எள்ளுச்செடியின் இலைகளை கசாயம் வைத்துக்குடித்தால் சீதக் கழிச்சல் குணமாகும்.

✦ எள்ளை அரைத்து சுண்டைக்காய் அளவு தினமும் சாப்பிட்டு வந்தால் இரத்தமூலம் குணமாகும்.

✦ எள்ளுப்புண்ணாக்கு (50 கிராம்), முருங்கை இலை (50 கிராம்), வெற்றிலை(5) ஆகியவற்றை ஒன்றாக சேர்த்து கசாயம் காய்ச்சிக் குடித்தால் ஆண்மைக்குறைபாடு நீங்கும்.

✦ எள் கார்ப்பு, கசப்பு, இனிப்பு சுவைகள் கொண்டதாகும். குருத் தன்மையும் எண்ணெய்ப் பசையும் உஷ்ணவீரியமுள்ளது. தலை முடியை வளர்க்கும், தாய்ப்பாலை மிகுதியாக்கும். பற்களுக்கும் உடலின் மேற்றோலுக்கும் நன்மை தரும்.

✦ எண்ணெய்யுடன் எள்ளின் விழுதைக்கலந்து சூடாக்கி துணியில் வைத்து இளஞ்சூடாக இருக்கையில் அதை கொண்டு ஒத்தடம் கொடுப்பின் மூலநோயின் வலி தணியும்.

✦ எள்ளின் தூளில் வெண்ணெய்யை கலந்து உட்கொண்டால் இரத்த மூலம் தணியும்.

**திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)**
**சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்,**
**கைதடி.**

✦ வில்வம் பிஞ்சு, எள் இவ் இரண்டையும் சம அளவில் கொண்டு விழுதாக்கித் தயிர் தெளிவும் எண்ணெய்யும் கலந்து கஞ்சியாக்கி உட்கொண்டால் சீதபேதி தணியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டியது அவசியம்

## பிரிட்டன் தொழிற் கட்சியின் தமிழர் அமைப்பின் தலைவர் கோரிக்கை



**இலங்கை அரசியல்வாதிகள், இராணுவ அதிகாரிகள் மீது பயணத் தடை மற்றும் சொத்துக்களை முடக்குதல் தொடர்பான தடைகளுக்கு ஆரவளிக்க வேண்டும்.**

ஐ.நா. தலைமையிலான விசாரணைக்குழு, இலங்கைக்குள் நுழைவதற்கு அரசாங்கம் தடை விதித்துள்ளது. அனைத்துலக விழுமியங்கள், விதிமுறைகளைப் பிணபற்றுவதில் இலங்கை அரசிற்கு ஆர்வமில்லை. ஆனால் நம்பிக்கை இழப்பதற்கு இது நேரமல்ல.

எனவே நாம் தொடர்ந்து அழுத்தம் பிரயோகிக்க வேண்டியுள்ளது. வழமைபோல அதற்கான முதல் அடியை தொழிற்கட்சி தான் எடுத்து வைக்க வேண்டும்.

இலங்கை அரசியல்வாதிகள் மறறும் இராணுவ அதிகாரிகள் மீது பயணத்தடை மற்றும் சொத்துகளை முடக்குதல் தொடர்பான தடைகளுக்கு ஆதரவளிக்க வேண்டும்

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேணடும்.

இலங்கை அரசாங்கத்தை அதனது மீறல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்புக்கூற வைக்க வேண்டும். இவவாறு பிரித்தானியத் தொழிற் கட்சிக்கான தமிழர் அமைப்பின் தலைவர் சென். கந்தையா வேண்டுகோள் விடுத்துள்ளார். பிரித்தானிய தொழிற்கட்சியின் மாநாட்டில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எமது கட்சி மாநாட்டில் மீண்டும் உரையாற்றுவதை ஒரு பேறாகக் கருதுகிறேன். ஒரு தொழிற்கட்சி ஆதரவாளனாக, ஒரு பிரித்தானியப் பிரஜையாக, ஒரு தமிழனாக ஸ்கொட்லாந்து பொதுவாக்கெடுப்புக்கான பரப்புரைச் செயற்பாடுகளை பெரும் ஆர்வத்தோடு அவதானித்து வந்தேன்.

இந்த வரலாற்று நிகழ்வு உணர்வுபூர்வமான பிரதிபலிப்புகளை ஏற்படுத்தியுள்ளது. இளைய தலைமுறையினர், வளர்ந்தவர்கள் மற்றும் மூத்த தலைமுறையினர் என பல் மில்லியன் ஸ்கொட்லாந்து மக்கள் தமது ஜனநாயக உரிமையைப் பிரயோகித்துள்ளனர்.

ஒரு துளி இரத்தம் கூடச் சிந்தாமல் அமைதியான முறையில் இது நிகழ்ந்துள்ளது. பிரித்தானியாவின் இந்த முன்னுதாரணத்திலிருந்து அனைவரும் கற்றுக்கொள்வதற்கு நிறையவேயுள்ளது.

இலங்கையில் எமது போராட்டத்தில் நான் அறிந்தவற்றோடு ஒப்பிடுகையில் அனைத்து வகையிலும் இதிலிருந்து முற்றுமுழுதான வேறுபாடுகளைக் காணமுடியும்.

தமிழ் மக்கள் மிகப் பாரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த சில நாட்களுக்கு முன்னர் எந்த உரிமைக்காக ஸ்கொட்லாந்து மக்கள் மகிழ்வுடன் ஈடுபட்டார்களோ, அதே உரிமைக்காக நூறாயிரக்கணக்கான தமிழ் மக்கள் உயிர்கள் இழக்கப்பட்டுள்ளன.

ஆயுதப்போராட்டத்தின் இறுதி மாதங்களில் மட்டும் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் பலியாகியுள்ளனர். ஒரு இலட்சத்து 46 ஆயிரம் பேர் வரையானவர்களுக்கு என்ன நேர்ந்ததென்ற விபரங்கள் தெரியாதுள்ளது.

அங்கு நடந்தேறிய அவலங்களுக்கு எந்தவித நீதியும் வழுங்கப் படவில்லை. பொறுப்புக்கூறலும் இடம் பெறவில்லை. போர் முடிவடைந்து ஐந்தரை ஆண்டுகள் கடந்து விட்ட போதும் இந்நிலை தொடர்கிறது.

போர்க்குற்றங்கள், மானிடத்திற்கெதிரான குற்றங்கள் இடம்பெற்றமைக்கான ஏராளமான ஆதாரங்கள் வெளிவந்துள்ளன. இலங்கைத்தீவின் வடக்கு, கிழக்கில் தமிழர்களின் வாழ்விட நிலங்கள் இலங்கைப் படையினரினால் அபகரிக்கப்பட்டு, இராணுவ மயப்படுத்தப்பட்டுள்ளன. எனவே இலங்கை விவகாரத்தில் அனைத்துலக சமூகத்தின் செயற்பாடுகள் அவசியமாகின்றன.

இந்தப் புறநிலையிலேயே இலங்கைத்தீவில் இடம்பெற்ற மோசமான உரிமைமீறல்கள் மீதான சுதந்திரமான அனைத்துலக விசாரணைப் பொறிமுறை அமைக்கப்பட வேண்டுமென்று கடந்த மார்ச் மாதம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தினை வரவேற்றிருந்தேன்.

2012 இலிருந்து அவ்வகையான விசாரணைக்குத்தொழிற்கட்சி அழைப்பு விடுத்து வந்துள்ளது. அந்த வகையில் இவ்விவகாரத்தில் தொழிற் கட்சியின் அணுகுமுறையினை நான் பாராட்டுகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# முஸ்லிம்களின் கட்சிகள் முழுமையாக நிராகரிக்கப்பட்டதன் காரணம் என்ன?

(கொழும்பு)

இலங்கையில் ஊவா மாகாண சபைத் தேர்தலில் அரசாங்கத்தின் பங்காளி கட்சிகளான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய முஸ்லிம் கட்சிகள் கூட்டாக போட்டியிட்டிருந்தும், முஸ்லிம் வாக்காளர்கள் அந்தக் கூட்டணியை நிராகரித்துள்ளதாக தேர்தல் முடிவுகள் அமைந்துள்ளன.

2009 ஆம் ஆண்டு ஊவா மாகாண சபையில் இழந்த முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை மீண்டும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற இலக்குடன் ஜனநாயக ஐக்கிய முன்னனியின் இரட்டை இலை சின்னத்தில் இரு கட்சிகளும் தமது வேட்பாளர்களை கூட்டாக நிறுத்தியிருந்தன.

37 ஆயிரம் முஸ்லிம் வாக்காளர்களை கொண்ட பதுளை மாவட்டத்தில் சுமார் 5 ஆயிரம் வாக்குகளையே இக்கட்சிகளால் பெற முடிந்தது. அதனால் அவர்களுக்கு ஒரு பிரதிநிதித்துவமும் கிடைக்கவில்லை.

கணிசமான முஸ்லிம் வாக்குகள் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே. கட்சிக்கு கிடைத்திருந்தாலும், அந்தக்கட்சியில்போட்டியிட்ட இருமுஸ்லிம் வேட்பாளர்களும் தெரிவாகவில்லை.

பதுளை மாவட்டத்தில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி முஸ்லிம் தனது வேட்பாளர் பட்டியலில் முஸ்லிம்களுக்கு இடமளிக்கவில்லை.

அரசாங்கத்தின் பங்காளி கட்சிகளாக இருந்தாலும் இரு முஸ்லிம் கட்சிகளும் அரசாங்கத்தை விமர்சிக்கும் வகையிலான பிரசாரங்களை தேர்தலின்போது முன்னெடுத்தாலும், எதிர்பார்த்த வாக்குகளை பெற முடியவில்லை.

இது தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளரான எம். ரி.ஹசன் அலி கூறுகையில்,

அரசாங்கத்தின் ஆதரவு வழங்கும் கட்சிகள் என்ற காரணத்தினாலே தங்களுக்கு எதிர்பார்த்தவாறு முஸ்லிம்களின் வாக்குகள் கிடைக்கவில்லை என்றார்.

பதுளை மாவட்டத்திலுள்ள பள்ளிவாசல்கள், சம்மேளனம் மற்றும் உலமா சபைகள் உட்பட பல்வேறு தரப்பினரின் வேண்டுகோளின் பேரில் தான் இரு கட்சிகளும் பொதுச் சின்னத்தில் போட்டியிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் பிரசாரங்களுக்கு வேட்பாளர்கள் சென்றிருந்தபோது வெற்றி பெற்ற பின்னர் அரசாங்கத்தை ஆதரிப்பார்கள் என்ற சந்தேகம் முஸ்லிம் வாக்காளர்களிடம் காணப்பட்டதாக ஹசன் அலி கூறினார்.

இந்த சந்தேகத்தை நீக்கும் வகையில் அரசாங்கத்தை ஆதரிக்க மாட்டோம் என அனைத்து வேட்பாளர்களும் உலமாக்கள் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்திருந்தும் வாக்காளர்கள் அதனை நம்பவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த தேர்தல் முடிவானது அரசாங்கத்தின் பங்காளி கட்சி என்ற நிலைப்பாட்டில் மாற்றம் தேவை என்ற அழுத்தமாக கருத முடியுமா? என்று அவரிடம் கேட்டபோது, அதனை நிராகரிக்காதவாறு அவரது பதில் இருந்தது குறிப்பிடத்தக்கது. (இ)

# இன்று ஒரு தகவல்

## ஒற்றுமை

ஒரு ஊரில் அண்ணன், தம்பி இரண்டு பேர் இருந்தார்கள். அவர்களுடைய தந்தை கடைசியாக அவர்களுக்கென்று விட்டிட்டுப் போன சொத்து.

ஒரு மாமரம், ஒரு பசுமாடு, ஒரு போர்வை இவ்வளவு தான். இந்த மூன்றையும் 'அவர்கள் இருவரும் ஆளுக்கு பாதியாக பிரித்துக் கொள்ள வேண்டும்.

எப்படிப் பாகம் பிரிப்பது? எப்படி பங்கு போட்டுக் கொள்வது? எல்லாவற்றையும் சரிபாதியாக வெட்டி ஆளுக்கு அரைவாசியாகவா எடுத்துக் கொள்ள முடியும்? அண்ணன்காரன் ஒரு மக்கு. என்ன சொன்னாலும் தலையாட்டிக் கொண்டு போவான். தம்பிக்காரன் புத்திசாலி. இருந்தாலும் அந்தப் புத்தி சாலித்தனத்தை தவறாக உபயோகப்படுத்தக் கூடியவன்.

அந்தத் தம்பி அண்ணனிடம் சொன்னாள்.

"அண்ணா நம்முடைய அப்பா நமக்காக விட்டுட்டுப் போன சொத்தை நாமிருவரும் ஒற்றுமையாக இருந்து பிரித்துக் கொள்ளலாம். ஊரைக் கூட்டி பஞ்சாயத்து பண்ண வேண்டிய அவசியமில்லை" என்றான்.

"அப்படியானால் சரி, தம்பி நீயே அதைப் பங்கு போடு" என்றான் அண்ணன்.

தம்பி யோசித்தான் அதற்குப் பின் சொன்னான்.

"அண்ணா, நீங்கள் வயதில் மூத்தவர். அதனால் மூன்று விடயத்திலும் உங்களுக்குத் தான் முன்னுரிமை கொடுக்க வேண்டும். அதுதான் நியாயம். முதலில் அந்த மாமரத்தை எடுத்துக் கொள்வோம். அதில் அடிப்பாகம் தான் வலுவானது. அதனால் அந்த மரத்தின் அரைவாசிக்குக் கீழ் உள்ளதெல்லாம் அதாவது வேர் உட்பட அடிப்பாகம் முழுவதும் உங்களுக்கு. மேல்பாகம் வெறும் கிளையும் இலையுமாக இருப்பது எனக்கு இருக்கட்டும். அடுத்ததாக அந்தப் பசுமாடு.

எண்சாண் உடம்புக்கு சிரசே பிரதானம். அதனால் அந்த மாட்டின் தலைப்பாகம் உங்களுக்கு. பின்பக்கம் எனக்கு இருந்து விட்டுப் போகட்டும். அடுத்தது அந்தப் போர்வை. "அதைப் பகல் முழுவதும் நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள். இரவு முழுவதும் நான் வைத்துக் கொள்கிறேன்" என்றான் தம்பி.

விபரம் புரியாத அண்ணன் சரியென்று ஒத்துக் கொண்டான். அதற்குப் பின் என்ன ஆயிற்று தெரியுமா? அண்ணன் அந்த மரத்துக்கு உரமிட்டான். நீர் பாய்ச்சினான். தம்பி ஜாலியாக மரத்தின் மேல் உட்கார்ந்து பழத்தையெல்லாம் பறித்துக் கொண்டிருந்தான். அண்ணன் பசுமாட்டுக்குத் தீனி வைத்தான். புல்லை அள்ளி வந்து போட்டான். தண்ணீர் வைத்தான். தம்பி தன்பாட்டுக்கு பால் கறந்து கோப்பி போட்டு குடித்துக் கொண்டிருந்தான்.

அண்ணன் பகல் முழுவதும் அந்தப் போர்வையை சும்மா மடித்து வைத்திருந்தான். தம்பி ஜாலியாக இராத்திரியில் அதை வாங்கிப் போர்த்திக் கொண்டு தூங்கினான். இப்படியே நடந்து கொண்டிருந்தது. இதை பக்கத்து வீட்டுக்காரன் ஒருநாள் கவனித்தான் நடப்பது நியாயமில்லை என்பதைப் புரிந்து கொண்டான் உடனே அந்த அண்ணனை இரகசியமாக ஒருநாள் தன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்து சில யோசனைகளை சொல்லி, இனிமேல் இப்படி நடந்து கொள் என்று சொன்னான். அவனும் சரியென்று சொல்லி தலையாட்டி விட்டுப்போனான். அதன் பின் என்ன ஆயிற்று தெரியுமா? அண்ணன் மரத்துக்கு உரம் வைப்பது தண்ணீர் பாய்ச்சுவதை நிறுத்தினான். மரம் காய்க்கவில்லை. தம்பி முழிக்க ஆரம்பித்தான். பின் ஒரு கோடரியை எடுத்து வந்து அடிமரத்தை வெட்ட ஆரம்பித்தான். தம்பி பதறிப்போய்" என்னண்ணே இப்படிசெய்கிறீர்கள்?"என்றான்.

"என்னுடைய பங்கில் நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன். உன்னுடைய பங்கிலேயா நான் வெட்டுகிறேன்?" என்று கேட்டான்.மாட்டுக்குத் தீனி வைப்பதையும் தண்ணீர் வைப்பதையும் நிறுத்தினான். தம்பியால் பால்கறக்க முடியவில்லை. தவித்துப் போய் விட்டான்.'

அந்தப் போர்வையை பகல் முழுவதும் அண்ணன் வைத்திருந்து இரவு நேரம் வருவதற்குள் அதை தண்ணீரில் நனைத்து தம்பியிடம் கொடுத்தான். அவனால் போர்த்திக் கொள்ள முடியவில்லை. அதன் பின் அண்ணனிடம் சமரசம் செய்து கொண்டு நியாயமாக நடக்க ஆரம்பித்தானாம் அந்தத் தம்பி. ஒற்றுமையாக வாழ்வதிலும் ஒழுங்கு முறை வேண்டுமென்பது இதிலிருந்து புரிகிறதல்லவா! ஒருத்தன் சொன்னான்.


"என்னுடைய எதிர் வீட்டுக்காரனிடம் நான் மிகவும் பிரியமாக நடந்து கொண்டேன். அவனை என்னுடன் கூடப்பிறந்த தம்பியாக நினைத்துப் பழகினேன். தம்பியென்று தான் கூப்பிடுவேன். அதுதான் இப்பொழுது வில்லங்கமாகி விட்டது"என்றான்.

"ஏன்?" என்று கேட்டேன்."அவனும் அதை நிஜமென்று நினைத்துக் கொண்டு இப்பொழுது என்னுடைய சொத்தில் பங்கு கேட்கிறான் சேர்" என்றான் மிகவும் வேதனையோடு.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவை அதிர வைத்துள்ள அருண் செல்வராஜன்!





அண்மைய நாட்களாக இந்திய ஊடகங்களில் மிகப் பரபரப்பான செய்தியாக மாறியிருப்பவர் அருண் செல்வராஜன் என்ற இலங்கை இளைஞர்.

சென்னையில் வைத்து என்ஐஏ எனப்படும் இந்தியாவின் தேசிய புலனாய்வு முகவரகத்தினால் கைது செய்யப்பட்டதை அடுத்து இவர் பற்றியும், இவரது தொடர்புகள் மற்றும் செயற்பாடுகள் குறித்தும், இவர் அளித்ததாகக் கூறப்படும் தகவல்கள் குறித்தும் நாளுக்குநாள் புதிய புதிய தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன.

28 வயதான அருண் செல்வராஜன் என்ற இந்த இளைஞரை இந்தியப் புலனாய்வு அதிகாரிகள் கைது செய்திருப்பதற்குக் காரணம், அவர் பாகிஸ்தானின் உளவாளியாகச் செயற்பட்டவர் என்பதே.

சென்னையில் உள்ள சாலிக் கிராமத்தில் அடுக்குமாடிக் குடியிருப்பு ஒன்றில் வைத்து கடந்த 10ஆம் திகதி இரவு கைது செய்யப்பட்ட அருண் செல்வராஜன் இந்தியாவுக்கு அதிர்ச்சியைக் கொடுக்கும் பல தகவல்களை வெளியிட்டிருப்பதாக கூறப்படுகிறது.

தென்னிந்தியாவில் உள்ள முக்கியமான பாதுகாப்பு, சுற்றுலா கேந்திர நிலைகள் பற்றிய முழுமையான தகவல்களை இவர் பாகிஸ்தானுக்கு வழங்கியிருப்பதாக இந்திய அதிகாரிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் பணியாற்றும் அதிகாரிகள் மூலமே இந்த தகவல்கள் பரிமாறப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

அருண் செல்வராஜன் கைதுசெய்யப்பட்டது, இந்தியப் புலனாய்வு அமைப்புகளை கடுமையாக அதிர்ச்சி கொள்ள வைத்திருக்கிறது. ஏனென்றால், அவரால், மிகவும் இறுக்கமான பாதுகாப்பு கடைப்பிடிக்கப்படும் இடங்களுக்குள்கூட இலகுவாக நுழைய முடிந்துள்ளது. தகவல்களையும் படங்களையும் திரட்டி பாகிஸ்தானுக்கு அனுப்ப முடிந்துள்ளது.

கொழும்பிலுள்ள பாகிஸ்தான தூதரகத்தினால், தென்னிந்தியாவில், குறிப்பாக தமிழ்நாட்டில் உளவு பார்ப்பதற்காக அனுப்பி வைக்கப்பட்டு கைது செய்யப்பட்டவர்களில் இவர் மூன்றாமவர்.

முதலாவதாக 2012 ஆம் ஆண்டு தமீம் அன்சாரி என்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த வெங்காய வியாபாரி கைது செய்யப்பட்டார். அதையடுத்து சில மாதங்களுக்கு முன்னதாக கண்டியைச் சேர்ந்த ஸகீர் உசேன் என்ற இலங்கையர் கைது செய்யப்பட்டார்.

இப்போது அருண் செல்வராஜன் கைது செய்யப்பட்டுள்ளார்.

அருண் செல்வராஜன் ஒரு இலங்கையர் என்றும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்றும் இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. ஆனால் குறிப்பாக எந்த இடத்தைச் சேர்ந்தவர் என்பது பற்றியோ, அவரது குடும்பத்தினர் பற்றியோ, தெளிவான தகவல்கள் ஏதும் வெளிவரவில்லை.

இதுவரை அவர் பற்றி வெளியான தனிப்பட்ட தகவல்கள் அனைத்தும் குழப்பம் நிறைந்தவையாக உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

30 ஆண்டுகளுக்கு முன்னர், யாழ்ப்பாணத்தில் இருந்து இவரது குடும்பத்தினர் சென்னைக்குச் சென்றதாகவும், 10ஆம் வகுப்பு வரை அங்கேயே கல்வி கற்றதாகவும் செய்திகள் வெளியாகின.

2008இல் மீண்டும் கொழும்புக்குத் திரும்பியதாகவும், லைபீரியாவில் ஹோட்டல் ஒன்று ஆரம்பித்து அதில் நஷ்டப்பட்டு கொழும்பு திரும்பியபோது முச்சக்கரவண்டி சாரதி ஒருவர் மூலம் பாகிஸ்தான் தூதரக அதிகாரிகளுடன் தொடர்பு ஏற்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கிடையே, இவருக்கு விடுதலைப் புலிகளுடன் தொடர்பு இருந்ததாகவும், அவர்களிடம் பயிற்சி பெற்றதாகவும்கூட செய்திகள் வெளியிடப்பட்டன.

இவர் இலங்கையில் சிறிது காலமே தங்கியிருப்பதாகத் தெரிகிறது.

அந்தக் காலகட்டத்தில்தான் இவர் பாகிஸ்தான் உளவாளியாக மாற்றப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் தூதரகத்தில் வீசா அதிகாரியாகப் பணியாற்றிய அமீர் சுபைர் சித்திக் என்பவரே இவரை உளவுப் பணிக்காக சென்னைக்கு அனுப்பி வைத்திருந்ததாக கூறப்படுகிறது.

ஏற்கனவே தமீம் அன்சாரி, ஸகீர் உசேன் ஆகியோரையும், பாகிஸ்தானுக்காக உளவாளியாகச் செயற்பட வைத்ததாக இவர் மீதே குற்றச்சாட்டு இருந்தது.

புதுடில்லியிலிருந்து கொழும்புக்கு கொடுக்கப்பட்ட அழுத்தங்களை அடுத்து அமீர் சுபைர் சித்திக் கடந்த மே மாதம் பாகிஸ்தானுக்குத் திருப்பி அழைக்கப்பட்டிருந்தார். அதன் பின்னர் ஹாஜி எனப்படும் சிராஜ் அலி என்ற இன்னொரு பாகிஸ்தான அதிகாரியே அருண் செல்வராஜனை கையாண்டிருக்கிறார்.

அருண் செல்வராஜன் மூலம் தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளாவில் உள்ள பாதுகாப்பு நிலைகள் பற்றி தகவல்கள் பாகிஸ்தானுக்குத் தொடர்ச்சியாக கிடைத்து வந்திருக்கின்றன.

கடற்படைத் தளங்கள், விமானப்படைத் தளங்கள், இராணுவப் பயிற்சித் தளங்கள் என்பன குறித்து மட்டுமன்றி, பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்கள், கரையோரப் பகுதிகள், அணுமின் நிலையங்கள், முக்கிய ஆலயங்கள் என்று மிக விரிவான தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

தரையிலிருந்து மட்டுமன்றி, வானில் சிறிய விமானத்திலிருந்து கூட முக்கியமான இடங்களை படம் எடுத்து அனுப்பியிருக்கிறார். அவ்வாறு விமானம் மூலம் படம் எடுப்பதற்கு இவருக்கு மாவட்ட நிர்வாகங்களே அனுமதி கொடுத்திருக்கின்றன.

பாகிஸ்தானிடமிருந்து கிடைத்த கோடிக் கணக்கான ரூபா பணத்தைக் கொண்டு ஐஸ் இவன்ட மனேஜ்மென்ட் என்ற நிறுவனத்தை தொடங்கி, தனது உளவு வலையமைப்பை பரவலாக்கியிருக்கிறார் அருண் செல்வராஜன்.

இந்த நிறுவனத்துக்கு ஹைதராபாத், பெங்களூர் நகரங்களிலும் கிளைகள் இருக்கின்றன. நிகழ்ச்சிகளை ஒழுங்கமைத்துக் கொடுக்கும் இந்த நிறுவனத்தின் மூலம் முக்கிய பிரமுகர்களை வளைத்துப் போடவும், அதனைக் கொண்டு கேந்திர நிலைகளுக்குள் ஊடுருவவும் இவரால் முடிந்திருக்கிறது.

அருண் செல்வராஜன் சென்னையில் தனியார் நிறுவனம் ஒன்றில் விமானம் ஓட்டும் பயிற்சியைப் பெற்றுள்ளதாகவும் கூட தகவல்கள் வெளிவந்திருக்கின்றன.

இவையெல்லாம் உண்மையானால், அருண் செல்வராஜன் மூலம் தமிழ்நாடு மற்றும் அயல் மாநிலங்கள் குறித்து மிகத் துல்லியமான தகவல்களை பாகிஸ்தான் பெற்றுவந்துள்ளது என்பதில் சந்தேகத்துக்கு இடமில்லை.

இதைவிட பாகிஸ்தான் எதிர்ப்பு, இலங்கை எதிர்ப்பு போராட்டங்கள் பற்றிய தகவல்கள் படங்களையும்கூட இவர், பாகிஸ்தான உளவுத்துறை அதிகாரிகளிடம் திரட்டிக் கொடுத்திருக்கிறார்.

தமது நிகழ்ச்சி ஒழுங்கமைப்பு நிறுவனத்தின் மூலம், மேல்மட்டப் பிரமுகர்கள், சினிமா பிரபலங்கள், அரசியல்வாதிகள், அரசு அதிகாரிகள் போன்றோரின் தொடர்புகளை பெற்று, அவர்களுடன் அருண் நெருக்கமாகியிருப்பதும் தெரியவந்துள்ளது.

ஊடகவியலாளர் என்ற போர்வையில் கடலோரக் காவல்படையின் நிகழ்வுகளுக்குச் சென்று படம் எடுத்துள்ளதும், இராணுவ அதிகாரிகளின் விருந்துபசார நிகழ்வு ஒன்றுக்குச் சென்று படம் பிடித்துள்ளதும்கூட அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதுபோன்ற ஏராளமான தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

ஆனால் இவையனைத்தும் உண்மையா அல்லது ஊகங்களா என்பது விசாரணைகளின் முடிவில்தான் தெரியவரும்.

எவ்வாறாயினும், இவரை ஒரு தீவிரவாத தாக்குதலுக்காக பயன்படுத்த பாகிஸ்தான் எண்ணியிருக்கவில்லை என்றே தெரிகிறது.

சென்னையை நன்கறிந்தவராகவும், பேச்சு மொழி நடையால் சந்தேகம் எழாது என்பதாலும், தேவையான தகவல்களைத் திரட்டிக்கொள்வதற்கு பாகிஸ்தான் இவரை மிக நன்றாகவே பயன்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது.

இந்தளவுக்கு எல்லா மட்டங்களிலும் தொடர்புகளை ஏற்படுத்தி தனியொருவரால் தகவல் திரட்ட முடியாது.

இதனால்தான் இவருடன் தொடர்புடையவர்கள் பற்றிய விபரங்களை குடையத் தொடங்கியிருக்கிறது தேசிய புலனாய்வுப் பிரிவு. இதற்கிடையே இவரிடம் விசாரணை நடத்த ஐ.பி. எனப்படும் உள்ளகப் புலனாய்வுப் பிரிவும், சி.பி.ஐ எனப்படும் மத்திய புலனாய்வுப் பிரிவும்கூட முயற்சிக்கின்றன.

சி.பி.ஐ இவருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பிருக்கிறதா என்றும், ராஜீவ்காந்தி கொலை குறித்தும் விசாரிக்க முனைவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆனால் ராஜீவ்காந்தி கொலை இடம்பெற்றபோது அருண் செல்வராஜனுக்கு ஐந்து வயதுதான் ஆகியிருக்கும்.

எனவே அதுபற்றி விசாரிக்க சி.பி.ஐ முயற்சிக்கிறது என்றால், வேறு ஏதேனும் காரணங்கள் இருக்கலாம் என்றே கருத வேண்டியுள்ளது.

தமிழ்நாட்டிலும், ஏனைய தென்மாநிலங்களிலும் தாக்குதல் நடத்தி குழப்பம் ஏற்படுத்த பாகிஸ்தான் உளவுப்பிரிவு முயற்சிப்பதாக ஏற்கனவே பலமுறை எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்தன.

இத்தகைய பின்னணியில் அருண் செல்வராஜன் பிடிபட்டிருப்பது, தமிழ்நாட்டில் அச்சத்தை தோற்றுவித்திருக்கிறது.

இவர் தமிழ்நாட்டில் தாக்குதல்களை நடத்துவதற்கான ஒருவராக இனங்காணப்படாத போதிலும் அதற்குத் தேவையான தகவல்களை வழங்கக் கூடிய ஒருவராகவே இந்திய அதிகாரிகளால் கூறப்படுகிறார்.

அருண் செல்வராஜன் கைது என்பது தமிழ்நாட்டில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்கள் பற்றிய சந்தேகங்களையும் தோற்றுவித்துள்ளது.

ராஜீவ்காந்தி கொலைக்குப் பின்னர் இலங்கைத் தமிழர்களை சந்தேகத்துடன் பார்க்கும் நிலை ஒன்று இருந்தது.

அண்மைக்காலமாக அந்தச் சூழல் மெல்ல மாறியிருந்த நிலையில்தான் அருண் செல்வராஜன் விவகாரம் மீண்டும் இலங்கைத் தமிழர்களை சந்தேகத்துடன் பார்க்கின்ற சூழலை ஏற்படுத்தியிருக்கிறது.

அருண் செல்வராஜனுக்கும் பாகிஸ்தானுக்கும் நேரடித் தொடர்புகள் இருப்பது உறுதி செய்யப்பட்டால் பாகிஸ்தான் விவகாரத்தில் இலங்கைக்கு இந்தியா கடுமையான அழுத்தங்களை கொடுக்க முனையும்.

ஏற்கனவே புதுடில்லி கொடுத்த அழுத்தங்களையடுத்தே கடந்த மே மாதம் அமீர் சுபைர் சித்திக் இஸ்லாமாபாத்திற்கு திருப்பி அழைக்கப்பட்டிருந்தார். ஆனால் ஒருபோதும், தாம் இந்தியாவில் உளவு பார்ப்பதற்கு இலங்கையைத் தளமாகப் பயன்படுத்தவில்லை என்றே பாகிஸ்தான் கூறி வந்திருக்கிறது.

அருண் செல்வராஜன் பிடிபட்டவுடன் கூட, பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் இது பழைய செய்தி என்றும், இந்தியா அதனை அடிக்கடி புதுப்பித்துக் கொள்வதாகவும் எதுவும் தெரியாததுபோல் பதிலளித்திருந்தார்.

அதற்குப் பின்னர், பாகிஸ்தானிடமிருந்து எந்தக் கருத்தும் வெளியாகவில்லை. இந்தநிலையில், அருண் செல்வராஜன் விவகாரத்தில், கொழும்பு மீது மீண்டும் புதுடில்லி அழுத்தங்களைப் பிரயோகிக்க வாய்ப்புகள் உள்ளன.


அத்தகையதொரு நிலையில், அது கொழும்புக்கும் புதுடில்லிக்கும் இடையிலான உறவுகளை பாதிக்குமா அல்லது கொழும்புக்கும் இஸ்லாமாபாத்துக்கும் இடையிலான உறவுகளை பாதிக்குமா என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்.

-சுபத்ரா-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புரட்டாதி மாத இராசி பலன்கள்

# 17.09.2014-15.10.2014



## கும்பம்

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி, 1,2,3 ஆம் பாதங்கள்**

**எதை எந்த நேரத்தில் செய்தால் வெற்றி கிட்டும் என்பதை அறிந்துள்ள கும்ப இராசி நேயர்களே!**

**கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும்!**

புரட்டாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கிற பொழுது மாதத் தொடக்கத்தில் ராசிநாதன் பலம் பெற்றிருக்கிறார். எனவே உடல் ஆரோக்கியம் சீராகும். உற்சாகம் உள்ளத்தில் குடிகொள்ளும். கடமையிலேயே கண்ணும், கருத்துமாக இருந்து காரியங்களைச் சாதித்துக்கொள்வீர்கள்.

2, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குரு பகவான் உச்சம் பெற்று தனஸ்தானத்தை பார்ப்பது யோகம்தான். தனவரவு திருப்திகரமாக இருக்கும். யாருடைய பணமாவது உங்கள் கைகளிலே புரண்டு கொண்டே இருக்கும். குறிப்பாக ராசியைப் பார்க்கும் கிரகமான சுக்ரன் சுகாதிபதியாக விளங்குவதால் சுகங்களும், சந்தோஷங்களும் அதிகரிக்கும் மாதமாகவே இந்த மாதத்தைக் கருதலாம்.

தேங்கியிருந்த தொழிலில் திடீர் வளர்ச்சி ஏற்படும். வாங்கிப் போட்ட இடங்களை நல்ல விலைக்கு கேட்கிறார்களே, வைத்துக் கொள்ளலாமா? இல்லை கொடுத்து விடலாமா? என்று சிந்திப்பீர்கள். என்ன இருந்தாலும் ஒரு சில இடங்களையோ, நூதனப் பொருட்களையோ லாபத்திற்கு விற்கும் சூழ்நிலை உருவாகும்.

அஷ்டமத்தில் ராகு சஞ்சரிப்பதால் உடல் நலத்தில் மட்டும் ஒரு சில குறைபாடுகள் தோன்றிக் கொண்டேயிருக்கும். கைவலி, கால்வலி, முதுகுவலி என்று ஏதாவது ஒரு வலி வந்து நீங்கும். ராகுவின் பார்வை செவ்வாயின் மீது பதிவதால் ஒரு சில சொத்துக்களை லாபத்திற்கு விற்க நேரிடும். உடன்பிறப்புகள் உங்களுக்கு கூட்டாளியாக இருந்து தொழில் முன்னேற்றத்திற்கு வித்திடுவர். செயற்பாடுகளில் தீவிரம் காட்ட வேண்டாம்.

வாகனம் மாற்றம் செய்ய உகந்த நேரமிது. வைத்திருக்கும் வாகனங்களில் பழுதுச் செலவுகள் அதிகரிக்கிறதே என்ற கவலை அகலும் விதத்தில் இனி புதிய வாகனங்கள் வாங்குவதற்கான முயற்சியில் ஈடுபடுவீர்கள். வாக்கு ஸ்தானத்தில் கேது சஞ்சரிப்பதால் கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியுமா என்பது சந்தேகம்தான். எனவே குழப்பங்களிலிருந்து விடுபடவும் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றவும் எதையும் ஒருமுறைக்கு இருமுறை யோசித்துச் செயற்படுவது நல்லது.

**நீச்ச சுக்ரனின் சஞ்சாரம்!**

செப்டம்பர் 26 ஆம் திகதி கன்னி ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இது சுக்ரனுக்கு நீச்ச வீடாகும். உங்கள் ராசிக்கு 4, 9இற்கு அதிபதியான சுக்ரன் நீச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. என்றாலும் அந்தச் சுக்ரன், உச்சம் பெற்ற புதனோடு இணைந்து நீச்ச பங்க ராஜயோக நிலையை அடைகின்றார். எனவே காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடிவிடும். தொழில் வளர்ச்சி மேலோங்கும். உறவினர் பகை மாறும். உதாசீனப்படுத்தியவர்கள் உங்கள் இல்லம் தேடி வருவர். அரைகுறையாக நின்ற பணி மீதியும் தொடரும். அடிமைத் தொழிலில் இருந்தவர்கள் சுயதொழில் செய்ய முன்வருவர்.

**தனுசு செவ்வாயின் சஞ்சாரம்!**

அக்டோபர் 13 ஆம் திகதி தனுசு ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். 3, 10இறகு அதிபதி லாபஸ்தானத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். தொழிலில் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதலாக லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வுகள் தானாகவே வந்து சேரும். குடும்பத்தினர்களாலும் உதிரி வருமானங்கள் கிடைக்கும். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பழைய கூட்டாளிகளை மாற்றம் செய்து புதியவர்களை இணைத்துக் கொள்ள முன்வருவீர்கள். பூமி வாங்கும் எண்ணம் மேலோங்கும். மகாளய அமாவாசை அன்று மறவாமல் முன்னோர் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

தனாதிபதி குரு உச்சம் பெற்றிருக்கும் இந்த நேரத்தில் மனித தெய்வ வழிபாடுதான் உங்களுக்கு மகத்துவம் தரும். இம்மாதம் நவராத்திரி விழாவில் கலந்து கொண்டு துர்க்கை, சரஸ்வதி, இலக்குமி ஆகிய தெய்வங்களையும் வழிபட்டு தொடர்ந்து நல்ல வாய்ப்புகளை வரவழைத்துக் கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் பணத்தேவைகள் பூர்த்தியாகும். பக்கத்தில் உள்ளவர்களின் பகை மாறும். கணவன்மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பிள்ளைகள் நல்ல தகவல்களைக் கொண்டு வந்து சேர்ப்பர். விருந்தினர் வருகை அதிகரிக்கும்.

வீடு மாற்றங்கள் ஒருசிலருக்கு வந்து சேரும். கடன் சுமையில் பாதிக்கு மேல் குறைந்தது என்று எடுத்துச் சொல்வீர்கள். கவலை என்ற மூன்றெழுத்து விலகவும், காரிய வெற்றி ஏற்படவும் நவராத்திரி நாயகியை வழிபாடு செய்யுங்கள். இழந்தவைகளை மீண்டும் பெற இம்மாதத்தில் கிரக நிலைகள் சாதகமாக விளங்குகின்றன.

உத்தி யோகத்தில் உள்ளவர்களுக்கு இலாகா மாற்றங்கள் ஏற்படலாம்.

### உடல் ஆரோக்கியம் சீராகும்! உற்சாகம் உள்ளத்தில் குடிகொள்ளும்!

## சிவல்புரி சிங்காரம்



## மீனம்

**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

**விட்டுக்கொடுத்துச் செல்வதே கெட்டிக் காரருக்கு அழகு என்று சொல்லும் மீன இராசி நேயர்களே!**

**சனி விலகும் வரை சற்று பொறுமை தேவை!**

புரட்டாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது உங்கள் ராசிநாதன் குரு உச்சம் பெற்ற ராசியையே பார்ப்பது யோகம்தான். அதே நேரத்தில் அஷ்டமத்தில் சனியும் உச்சம் பெற்றிருக்கிறார். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற புதனும் சப்தம ஸ்தானத்தில் உச்சம் பெற்றிருக்கிறார். எனவே தேவையில்லாத மனக்குழப்பங்கள் ஏற்படும்.

திடீர், திடீர் என நட்பு பகையாகும். படபடப்பையும், கோபத்தையும் குறைத்துக் கொண்டு பக்குவமாக செயறபடுவதன் மூலமே நன்மைகளைக் காண முடியும். சனி விலகும் நேரம் என்பதால் எதற்கும் கவலைப்படத் தேவையில்லை.

கடந்த இரண்டே கால் வருடங்களாக அஷ்டமத்தில் ஆட்சி புரிந்து வந்த சனி பகவான் டிசம்பர் 16ஆம் திகதி விலகப் போகிறார். இதுவரை நல்ல பலன்களை கொடுக்காதவர்களுக்கு இனிமேல் நற்பலன்கள் வந்து சேரும். இதுவரை நல்ல பலன்களைக் கொடுத்தவர்களுக்கு இனிமேல் விரயங்களும், விவகாரங்களும் உருவாகும். அதிலிருந்து விடுபட வேண்டுமானால் ஆனைமுகப் பெருமானையும், அனுமனையும் விடாது வழிபட்டு வருவது நல்லது.

அஷ்டமாதிபதி சுக்ரன் 6இல் சஞ்சரிப்பது யோகம்தான். "கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம" என்பதற்கேற்ப நல்ல பலன்களும், திடீர் மாற்றங்களும் வந்து சேரும். குறிப்பாக பெண்வழிப் பிரச்சினைகள் அகலும். சகோதர வர்க்கத்தினரின் ஒத்துழைப்போடு முன்னேற்றங்களைக் காண்பீர்கள். விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்பு கிட்டும். ஊதிய உயர்வும், எதிர்பார்த்த பணி மாற்றமும் கிடைக்கும்.

சூரிய பலம் நன்றாக இருப்பதால் அரசியல் மற்றும் பொதுநலத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும். புகழ்மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து பொதுநலத்தில் ஈடுபட்டபோது ஏற்பட்ட பிரச்சினைகள் தீர வழிவகுத்துக் கொடுப்பர். உடலுக்கு குளிர்ச்சியூட்டும் பொருட்களை உணவில் சேர்த்துக்கொண்டு ஆகாரத்தில் கட்டுப்பாடு செய்து ஆரோக்கியத்தை சீராக்கி கொள்ளுங்கள்.

குழந்தைகளின் கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நீண்ட நாட்களாக தடைப்பட்டு வந்த பிரார்த்தனைகள் இப்பொழுது நிறைவேறும். ஜென்மத்தில் கேதுவும், 7இல் ராகுவும் சஞ்சரித்து சர்ப்ப தோஷத்தை உருவாக்குவதால் சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை முறையாக மேற்கொள்வது நல்லது.

**நீச்ச சுக்ரனின் சஞ்சாரம்!**

பொதுவாக ஜாதகத்தில் பாதகாதிபதி வலுவிழக்க வேண்டும். சாதகாதிபதி வலுவடைய வேண்டும். அப்பொழுதுதான் செயறபாடுகளில் வெற்றி கிடைக்கும். செப்டம்பர் 26ஆம் திகதி கன்னி ராசியில் சுக்ரன் நீச்சம்பெறப் போகிறார். 3, 8இற்கு அதிபதி நீச்சம் பெறுவது யோகம்தான். "கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம்" என்பதற்கேற்ப திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றிகளை தேடிக் கொடுக்க வழிசெய்வார். பணப்புழக்கம் அதிகரிக்கும். பயணத்தால் பலன் கிடைக்கும். மனக்குழப்பம் மாறும். மதிப்பும், மரியாதையும் உயரும்.

**தனுசு செவ்வாயின் சஞ்சாரம்!**

அக்டோபர் 13ஆம் திகதி தனுசு ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். 10இல் செவ்வாய் சஞ்சரிப்பது யோகம்தான். பண வரவு பலவழிகளிலும் வந்து பையை நிரப்பும்.

பக்கபலமாக நண்பர்கள் இருந்து தொழில் தொடங்க வழிவகுத்துக்கொடுப்பர். அரசுவழி அனுகூலம் உண்டு. அரசியலில் ஈடுபாடு கொண்டவர்களுக்கு இந்த நேரத்தில் உயர் பதவி கிடைப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. கொடிகட்டிப் பறந்த குடும்பப் பிரச்சினைகள் படிப்படியாக மாறும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். அடுக்கடுக்காக வரும் புதிய ஒப்பந்தங்களைக் க்ண்டு ஆச்சரியப்படுவீர்கள். முருகப் பெருமான் வழிபாட்டை முறையாக மேற்கொண்டால் இக்காலம் இனிய காலமாக மாறும்.

**பெண்க்ளுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும் மாதமாக அமையப் போகிறது. அடுத்தவர்கள் நலன் க்ருதி எடுத்த முயற்சிகளில் ஆதாயம் கிடைக்கும். ஆரோக்கியம் சீராக மாற்று மருத்துவத்தை மேற்கொள்ளுங்கள். கணவன்-மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். குடும்பப் பெரியவர்கள் உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்க முடிவு செய்வர். அஞ்சல் வழியில் அனுகூல தகவல் வந்து சேரும். குழந்தைகளின் முன்னேற்றம் கண்டு பெருமைப்படுவீர்கள். செவ்வாய்க்கிழமை தோறும் சக்தி வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். நவராத்திரி நாயகியை கொண்டாடி நலம் காணுங்கள். மகாளய அமாவாசை அன்று முன்னோர்களை வழிபட்டு முன்னேற்றங்களை வரவழைத்துக் கொள்ளுங்கள்.

### சனி விலகும் வரை சற்று பொறுமை தேவை!

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை. பிரதேசங்களுக்கு திடீர் மரண விசாரணை அதிகாரிகளை நியமியுங்கள்

## மக்கள் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பிரதேசங்களுக்கு திடீர் மரண விசாரணை அதிகாரிகளை நியமிக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் திடீர் மரண விசாரணை அதிகாரிகள் இல்லாத பிரதேசங்களை இனங்கண்டு அரசாங்க அதிபர் நீதி அமைச்சிற்கு அறிவிக்க வேண்டும். நீதியமைச்சு அல்லது அரச அதிபர் நீதியமைச்சின் அனுமதியுடன் வர்த்தமானியில் பிரசுரம் செய்து விண்ணப்பங்களைக்கோரி நேர் முகப்பரீட்சையை நடத்தி அதில் தெரிவானவர்களை நீதியமைச்சின் அங்கீகாரத்திற்கு அனுப்பி வைத்து நீதியமைச்சர் திடீர் மரண விசாரணை அதிகாரிகளுக்குரிய நியமனக்கடிதங்களை வழங்குவார்.

தற்போது மக்கள் மீள்குடியேறி நான்கு வருடங்கள் கடந்து விட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் திடீர் மரணங்களாக வாகன விபத்து, கிருமிநாசினி அருந்தி மரணம், தற்கொலை, மாரடைப்பு ஆகிய மரணங்கள் நாளுக்கு நாள் நடைபெற்று வருகின்றன.

இதற்கு உடனடியாக மரண விசாரணைகளை மேற்கொள்வதற்கு அந்தந்த பிரதேசங்களில் திடீர் மரண விசாரணை அதிகாரிகள் இல்லாததால் 90 கிலோ மீற்றருக்கு அப்பாலுள்ள திடீர் மரண விசாரணை அதிகாரிகளை மக்கள் தேடி செல்ல வேண்டிய தேவையுள்ளது.

இதனால் போக்குவரத்து செலவுகள், காலதாமதங்கள் போன்ற பல் வேறுபட்ட அசௌகரியங்கள் மக்களுக்கு ஏற்படுகின்றன.

எனவே, அந்தந்த பிரதேசங்களுக்கு திடீர் மரண விசாரணை அதிகாரிகளை நியமிப்பதன் மூலமே மேற்படி பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியுமென முல்லைத்தீவு மாவட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

திடீர் மரண விசாரணை அதிகாரி அந்தந்த பிரதேசங்களுக்கு நியமிக்கப்பட்டிருந்தால் அவர்கள் நீதிமன்ற உத்தரவைப் பெற்று மரண விசாரணையை விரைவாக மேற்கொள்ள முடியும்.

இந்நிலையில் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவிற்கு கடந்த 15 வருடங்களாகவும் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிற்கு 35 வருடங்களாகவும் மாங்குளம் பிரதேசத்திற்கு கடந்த 2009 ஆம் ஆண்டிற்கு பின்னரும் நியமனங்கள் இடம்பெறவில்லை.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிலுள்ள உடையார்கட்டு பிரதேசத்திற்கும் ஒரு திடீர் மரண விசாரணை அதிகாரி நியமிக்கப்பட வேண்டும்.

முல்லைத்தீவு பிரதேசத்திற்கு கடந்த 10 வருடங்களாக திடீர் மரண விசாரணை அதிகாரி நியமிக்கப்படவில்லை. கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவிலுள்ள கொக்குளாய் பிரதேசத்திற்கு இதுவரை நியமிக்கப்படவில்லை.

முள்ளியவளையில் உள்ள திடீர் மரண விசாரணை அதிகாரியே வயது முதிர்ந்த நிலையிலும் மேற்படி வெற்றிடமாகவுள்ள இடங்களுக்கும் தேவைப்படும் இடங்களுக்கும் சென்று பணியாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே முல்லைத்தீவு அரச அதிபர் இவ்விடயத்தை கருத்தில் கொண்டு நியமிக்கப்பட வேண்டிய பிரதேசங்களுக்கு திடீர் மரண விசாரணை அதிகாரிகளை நியமிக்கு மாறு முல்லைத்தீவு மாவட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-267)

# தமிழ், முஸ்லிம் மக்கள் இணைந்து ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும்

## வடமாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

(குருமன்காடு)

அரசியல் உரிமைகளை பெற்றுக்கொள்வதற்காக தமிழ்மொழி பேசும் மக்கள் என்ற அடிப்படையில் தமிழ், முஸ்லிம் மக்கள் இணைந்து போராட வேண்டிய தருணம் இது வென வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தின் செட்டிகுளம், ஆண்டியாபுளியங்குளம் பள்ளிவாசலுக்கு ஒலிபெருக்கியும் ஆண்டியாபுளியங்குளம் மகா வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் நேற்று முந்தினம் வழங்கி வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

'இந்நாட்டில் வாழ்கின்ற தேசிய இனங்களான தமிழ், முஸ்லிம் மக்கள் மதத்தால் வேறுபட்டாலும், மொழியால் ஒன்றுபட்டவர்கள்.

இந்நிலையில், எமது அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்காக எதிர்காலத்தில் தமிழ்மொழி பேசும் மக்களுக்கான தீர்வை நோக்கி இணைந்து போராட வேண்டிய தருணம் இது.

தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் தங்களுக்கென தனித்துவமான மொழி, கலாசார விழுமியங்களை கொண்டு வாழ்கின்ற தேசிய இனங்களாகும்.

சனத்தொகையில் சிங்கள மொழி பேசுபவர்களை விட, தமிழ்மொழி பேசுபவர்கள் குறைந்தவர்களாக இருப்பதால் நாமொன்றும் அவர்களுக்கு குறைந்தவர்களல்லர்.

அவர்கள் அனுபவிக்கும் அனைத்து அரசியல் உரிமைகளையும் நாமும் அனுபவிப்பதற்கு உரித்துடையவர்கள்.

ஆனாலும், தமிழ்மொழி பேசும் முஸ்லிம் மக்களுக்கு எதிரான அண்மைய நடவடிக்கைகள் இந்நாட்டில் நாம் இரண்டாந்தர பிரஜைகளாக நடத்தப்படுவதை கோடிட்டுக் காட்டுகின்றது.

எனவே, மொழியால் ஒன்றுபட்டு வாழ்கின்ற, தேசத்தால் அடக்கி ஆளப்படுகின்ற சிறுபான்மை இனங்களாகிய நாம், ஒற்றுமையுடன்இணைந்து பணியாற்ற வேண்டிய தருணம் இது' என்றார். (2)










மாங்குளம் புதிய தபால் கட்டிப்பாட்டு அலுவலகத் திறப்புவிழா நேற்று முந்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் வன்னி மாவட்ட அபிவிருத்தி குழுத்தலைவரும் வணிக கைத்தொழில் அமைச்சருமான ரிசாத் பதியுதீன் உள்ளிட்ட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் அலுவலகம் திறந்து வைக்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- குருமன்காடு செய்தியாளர்)

# கிருமிகள் அழிக்கப்பட்டு குழாய் கிணற்று நீர் மக்கள் பாவனைக்கு

## கரைதுறைப்பற்று பிரதேச சபை செயலாளர் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பொதுச் சந்தை வளாகத்தினுள் அமைக்கப்பட்டுள்ள குழாய் கிணற்று நீரானது கிருமி தொற்றுக்குள்ளாகி அருந்த முடியாது இருந்த நிலையில் முல்லைத்தீவு பொதுச்சுகாதார பரிசோதகரின் ஆலோசனைக்கு அமைய குறித்த கிருமிகளை அழிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதையடுத்து தொடர்ந்து குழாய் கிணற்று நீரை மக்கள் அருந்துவதற்கு விடப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபை செயலாளர் சு.ரவீந்திரநாதன் தெரிவித்துள்ளார்.

இப்பொதுச் சந்தையின் குழாய் கிணற்று நீரில் கிருமிகளின் தாக்கம் இருப்பது முல்லைத்தீவு பொதுச் சுகாதார பரிசோதகரினால் முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபையினரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதையடுத்தே பொதுச் சுகாதார பரிசோதகரின் ஆலோசனைக்கு அமைய கிருமிகள் அழிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது சம்பந்தப்பட்ட சுகாதார பரிசோதகரும் குறித்த பிரதேச சபையினருடன் இணைந்து இவ்வேலைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்த ஒத்துழைப்பு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இது தொடர்பான செய்தி நேற்று முன்தினம் வலம்புரி பத்திரிகையில் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

# வயற்காணிகளில் வீடுகள் கட்டுவதற்கு தடை விதிப்பு

## பூநகரி கமநல சேவை நிலையம் தெரிவிப்பு

(பூநகரி)

பூநகரி கமநல சேவை நிலைய எல்லைக்குட்பட்ட நெல் விதைப்பு காணிகளில் நெல் விதைக்காது தமது சொந்த தேவைக்காக பயன்படுத்தவும் அதில் வீடுகளைக் கட்டுவதும் தடைசெய்யப்பட்டுள்ளதாக பூநகரி கமநல சேவை நிலையம் அறிவித்துள்ளது.

பலர் எந்தவிதமான அனுமதியும் பெறாமல் வயற்காணிகளை நிரப்பி வீடுகளை அமைத்து வருகின்றனர். இதனையடுத்தே வயற்காணிகளை நிரப்பி வீடுகள் அமைப்போர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் தெரிவிக்கப்படுகின்றது.

இதுதொடர்பில்தெரியவருவதாவது, தற்போது பூநகரி பிரதேச மக்களுக்கு அரசாங்கத்தினால் இந்தியன் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் காணிகள் இல்லாதோர் வயற்காணிகளை மேட்டு நிலமாக மாற்றி அமைத்து அதில் தமக்கான வீடுகளை கட்டி வருகின்றனர்.

இதனால் எதிர்காலத்தில் நெற் செய்கையில் ஈடுபடுவதற்கு விவசாயிகளுக்கு விவசாயக் காணிகள் இல்லாது காணப்படும். இதனால் நெல் தட்டுப்பாடு ஏற்படும். விவசாய குடும்பங்கள் வாழ்வாதாரத்தை முன்னேற்ற முடியாது வறுமைக்கு தள்ளப்படுவர்.

இதனை கருத்தில் கொண்டே பூநகரி கமநல சேவை நிலையம் விவசாயக் காணிகளை மேட்டுக் காணிகளாக மாற்றி வீடுகள் அமைப்பதற்கு தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

சொந்தக்காணிகள் இல்லாதோருக்கு இந்தியன் வீட்டுத் திட்டம் வழங்கப்படமாட்டாது என அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆதலால் சொந்தக்காணி இல்லாதோர் தமக்கான காணிகளை மேட்டுக் காணிகளாக மாற்றி அமைத்து வீடு கட்டுவதாக கூறுகின்றனர். (2-84)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெ. கூட்டுப்பெற்ற நாடுகளினது பிரஜைகளுக்கு கடும் எச்சரிக்கை

## ஐ.எஸ்.ஐ.எஸ் விடுத்தது

(டெஹ்ரான்)

ஈராக்கில் இஸ்லாமிய அரசு (ஐ.எஸ்.ஐ.எஸ்) ஆயுதக் குழுவின் நிலைகள் மீது அமெரிக்காவும் பிரான்ஸும் விமானத் தாக்குதல்களை நடத்தத்தொடங்கிய பின்னர், அந்த இயக்கத்தின் பேச்சாளர் ஒருவர் முதற்தடவையாக உரையொன்றை ஆற்றி வெளியிட்டுளளார்.

தமக்கு எதிராக அமெரிக்கா தலைமையிலான அணியுடன் கூட்டுச் சேர்ந்துள்ள நாடுகளின் பிரஜைகள் மீது தாக்குதல் நடத்தவுள்ளதாகவும் ஐ.எஸ்.ஐ.எஸ் பேச்சாளர் அபு முஹமட் அல் அத்னானி அச்சுறுத்தியுள்ளார்.



அமெரிக்கா மீது தரைவழிப் போர் ஒன்றுக்கு இழுக்கப்படும் என்றும் ஜனாதிபதி ஒபாமாவுக்கு அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஐ.எஸ்.ஐ.எஸ் இயக்கத்தினர் ஈராக்கிலும் சிரியாவிலும் கணிசமான அளவு நிலப்பகுதிகளை கைப்பற்றி வைத்துள்ளனர்.

அமெரிக்காவும் அதன் மேற்குலக கூட்டாளி நாடுகளும் ஐ.எஸ்.ஐ.எஸ்.இயக்கத்தின் மீது தாக்குதல் நடத்துவதற்காக, அரபுலக நாடுகளையும் உள்வாங்கிக் கொண்டு, பரந்துபட்ட சர்வதேச நடவடிக்கைகளை தீவிரப்படுத்துவதற்காக முயன்றுவரும் வேளையில் இந்த உரை வெளியாகியுள்ளது.

அரபுமொழியில் பேசப்பட்ட இந்த உரைக்கு ஆங்கிலத்திலும் பிரெஞ்சிலும் ஹீப்ருவிலும் மொழி பெயர்ப்புக் குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## பட்டாசு தொழிற்சாலை வெடித்தது-12 பேர் பலி சீனாவில் சம்பவம்

(பீஜிங்)

சீனாவிலுள்ள பட்டாசுத் தொழிற்சாலையொன்றில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் குறைந்தது 12 பேர் மரணமடைந்ததுடன், 33 பேர் காயமடைந்ததாக அந்த நாட்டு அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

ஹனான் மாகாணத்திலுள்ள லீலிங் நகரத்தில் அமைந்துள்ள தொழிற்சாலையிலேயே நேற்று முன்தினம்திங்கட்கிழமை இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது.

இதன்போது, இருவர் காணாமற் போயுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த வெடிப்புக்கான காரணம் இதுவரையில் தெரியவரவில்லையெனவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ)

## அமெரிக்காவின் விருந்தினர் மாளிகையில் 10 ஆண்டுகளின் பின்னர் இந்திய பிரதமர்

(வோஷிங்டன்)

அமெரிக்க சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் பிரதமர் நரேந்திர மோடி, அங்கு அமெரிக்க ஜனாதிபதி விருந்தினர் மாளிகையில் தங்கவிருக்கிறார்.

அமெரிக்க வெள்ளை மாளிகையின் ஒரு பகுதியில் கடந்த 1824 ஆம் ஆண்டு தனியாக கட்டடம் ஒன்று கட்டப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி ஆண்ட்ரூ ஜாக்சன், ஆபிரகாம் லிங்கன் உள்ளிட்டோரின் காலத்தில் அவர்களின் தனிப்பட்ட விவாதத்துக்காக பயன்படுத்தப்பட்டது.

2 ஆம் உலகப் போருக்குப் பின் இந்த மாளிகையை எடுத்துக் கொண்ட அமெரிக்க அரசு, இதை ஜனாதிபதி விருந்தினர் மாளிகையாக பயன்படுத்தி வருகிறது.

'பிளேர் மாளிகை' என அழைக்கப்படும் இந்த மாளிகை கடந்த 190 ஆண்டுகளாக அமெரிக்க அரசியல், தூதரக, கலாசார வரலாற்றில் மிக முக்கிய பங்காற்றி வருகிறது.

இந்நிலையில் நாளை மறுதினம் அமெரிக்கா செல்லும் பிரதமர் நரேந்திர மோடி, இந்த பிளேர் மாளிகையில் தங்கும் சிறப்பை பெறுகிறார்.

அதன்படி சுமார் 10 ஆண்டுகளுக்குப்பின் இந்த கௌரவத்தை பெறும் இந்திய பிரதமராகிறார் நரேந்திரமோடி. (இ)




## பிணைக்கைதியின் தலை துண்டிக்கப்படும் அல்ஜீரிய தீவிரவாதிகள் கடும்எச்சரிக்கை



ஈராக்கில் 'ஐ.எஸ்.ஐ.எஸ்' தீவிரவாதிகள் மீது குண்டு வீச்சு நடத்தும் அமெரிக்காவுக்கு பிரான்ஸ் ஆதரவு அளித்துள்ளது. மேலும் அமெரிக்காவுடன் இணைந்து பிரான்ஸ் போர் விமானங்களும் கடந்த 3 நாட்களுக்கு முன்பு குண்டு வீச்சை தொடங்கின.

இந்த நிலையில் அல்ஜீரியாவுக்கு குகைகள் குறித்து ஆய்வு நடத்த சென்ற பிரெஞ்ச் ஆராய்ச்சியாளர் ஹெர்வ் குயர்தெல் (வயது55) என்பவரை கடத்தி பிணைக் கைதியாக பிடித்தனர். அவர்கள் 'ஜீனட அல்-ஹிலாபா' அல்லது 'காலிபட் இராணுவ வீரர்கள்' என்ற தீவிரவாத அமைப்பை சேர்ந்தவர்கள்.

இவர்கள் அல்கொய்தா தீவிரவாதிகளிடம் இருந்து பிரிந்தவர்கள். தற்போது இவர்கள் ஒன்லைனில் அதிரடியாக ஒரு வீடியோ வெளியிட்டுள்ளனர். அதில், பிணைக் கைதியாக பிடித்து வைத்துள்ள பிரான்ஸ் ஆராய்ச்சியாளர் ஹெர்வ் குயர்தெல் இருக்கிறார்.

அவர் அருகே முகமூடி அணிந்த 2 தீவிரவாதிகள் உள்ளனர். அவர்கள் குயர்தெலை துப்பாக்கி முனையில் வைத்துள்ளனர்.

அதன் பின்னர் பிரான்ஸ் அரசுக்கு தீவிரவாதிகள் வீடியோவில் மிரட்டல் விடுத்துள்ளனர். அதில், இன்னும் 24 மணி நேரத்தில் ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் மீதான தாக்குதலை பிரான்ஸ நிறுத்த வேண்டும்.

இல்லாவிடில், பிணைக் கைதியாக பிடித்து வைத்துள்ள குயர்தெல் தலையை துண்டித்து படுகொலை செய்வோம் என தெரிவித்தனர்.

ஹெர்வ் குயர்தெல் பிரான்ஸ் நாட்டில் நைஸ் பகுதியை சேர்ந்தவர். அல்ஜீரியாவில் குகைகள் பற்றி ஆராய்ச்சி நடத்த கடந்த வாரம் வந்தார். கபிலிபகுதியில் திஷி ஒயூஷேர் என்ற மலைப்பகுதியில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.(இ)

# இந்திய எல்லைக்குள் சீன இராணுவம்!

## இராணுவ உயர் அதிகாரிகள் திடீர் மாற்றம்; சீன ஜனாதிபதி ஜின்பிங் அதிரடி நடவடிக்கை

சீன ஜனாதிபதி ஜின்பிங் அந்த நாட்டு இராணுவத்தின் (சீன மக்கள இராணுவம்) தலைமை தளபதியாகவும், மத்திய இராணுவ ஆணையத்தின் தலைவராகவும் இருந்து வருகிறார். மேலும் கம்யூனிஸ்டு கட்சியின் பொதுச் செயலாளராகவும் அவர் பதவி வகிக்கிறார்.

இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியான அருணாசல பிரதேசத்தை தேவை இல்லாமல் சீனா சொந்தம் கொண்டாடி வருகிறது. மேலும்சீன இராணுவம்அவ்வப்போது இந்திய எல்லை பகுதிக்குள் ஊடுருவி நெருக்கடியை ஏற்படுத்துகிறது.

இந்த நிலையில், 3 நாட்கள் சுற்றுப்பயணமாக சமீபத்தில் இந்தியா வந்திருந்த ஜின்பிங், பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து இரு தரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

அப்போது, எல்லையில் நடைபெறும் அத்துமீறல்கள் குறித்து ஜின்பிங்கிடம் தனது கவலையை தெரிவித்த நரேந்திர மோடி, இந்த பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண வேண்டும் என வலியுறுத்தினார். அதற்கு, எல்லை பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண்பதில் சீனா உறுதியாக இருப்பதாக ஜின்பிங கூறினார்.

ஜின்பிங் இந்தியா வந்திருந்த போதும், காஷ்மீர் மாநிலம் லடாக் பகுதியில் சீன இராணுவத்தின் ஊடுருவல் இருந்தது. சீன ஜனாதிபதி இந்தியா வந்திருக்கும் நிலையில், அந்த நாட்டின் இராணுவம் ஊடுருவியது சில சந்தேகங்களை எழுப்பியது.

ஜனாதிபதி மாளிகையின் அனுமதி இல்லாமல், இராணுவத்தில் உளள உயர் அதிகாரிகளே இத்தகைய நடவடிக்கைகளுக்கு காரணமாக இருக்கிறார்களா? என்ற சந்தேகமும் எழுந்தது.

இந்த சூழ்நிலையில், ஜனாதிபதி ஜின்பிங் இராணுவ தளபதிகள் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் கூட்டத்தை நேற்று முன்தினம் கூட்டி முக்கிய ஆலோசனை நடத்தினர்.

அந்த கூட்டத்தில், கட்டளை பிறப்பிப்பது தொடர்பாக இராணுவத்தில் இருக்கும் பல்வேறு அதிகாரமட்டங்கள் குறித்து கவலை தெரிவித்த ஜின்பிங், புதிய சூழ்நிலைக்கு ஏற்ப இதை ஒழுங்குபடுத்த வேண்டியதனஅவசியம் பற்றியும் தெரிவித்தார்.

இதைத்தொடர்ந்து சீன இராணுவத்தில் உயர் அதிகாரிகள் மட்டத்தில், ஜனாதிபதி ஜின்பிங் சில அதிரடி மாற்றங்களை செய்து இருப்பதாகவும் தெரியவருகிறது. 3 இராணுவ அதிகாரிகளுக்கு பதவி உயரவு வழங்கப்பட்டு இருப்பதாகவும் கருதப்படுகிறது. மத்திய இராணுவ ஆணையத்திலும் அவர் மாற்றங்களை செய்து இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

மூத்த இராணுவ அதிகாரிகள் மீது கூறப்படும் ஊழல் புகார்கள் குறித்து விசாரணை நடத்த அவர் உததரவிட்டு இருப்பதாகவும் அங்குள்ள பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியாகி இருக்கிறது.

இந்த நிலையில், சீன வெளியுறவுத்துறையின் செய்தித் தொடர்பாளர் ஹுவா சுன்யின் நேற்று முன்தினம் நிருபர்களிடம் கூறுகையில, எல்லை பிரச்சினைக்கு கருத்து ஒற்றுமையின் அடிப்படையில் தீர்வு காண வேண்டியதன் அவசியத்தை இரு நாட்டு தலைவர்களும் ஒப்புக் கொண்டுள்ள நிலையில், இரு தரப்பிலும் தேவை இல்லாத சந்தேகங்கள் எழ வேண்டிய அவசியம் இல்லை என்றார். எல்லையில் அமைதியையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இருப்பதாகவும் அப்போது அவர் தெரிவித்தார். (இ)

## இஸ்லாமிய அரசுக்கு அமெரிக்கா குண்டுவீச்சு

அமெரிக்கப் படைகள், கூட்டாளி அரபு நாடுகளின் பங்கேற்புடன் சிரியாவில் இஸ்லாமிய அரசு (ஐ.எஸ்.ஐ.எஸ்) ஆயுததாரிகளுக்கு எதிராக 14 இடங்களில் விமான குண்டு வீச்சுக்களை நடத்தியுள்ளதாக அமெரிக்க இராணுவ தலைமைக் கட்டுப்பாட்டு மையம் கூறுகிறது.

அமெரிக்க குண்டுவீச்சு விமானம் ஒன்றுபல்வேறு இலக்குகள் மீது குண்டுகள் வீசப்பட்டுள்ளன

சிரியாவின் வடக்கிலும் கிழக்கிலும் உள்ள இஸ்லாமிய அரசு இயக்கத்தின் பயிற்சி வளாகங்கள், கட்டுப்பாட்டு மையங்கள், வாகனங்கள், சேமிப்புக்கூடங்கள் போன்றவை இத்தாக்குதலில் அழிக்கப்பட்டும் சேதப்படுத்தப்பட்டும் உள்ளன என்று அது தெரிவித்துள்ளது.(இ)

## இத்தாலியில் நடுக்கடலில் படகு கவிழ்ந்து விபத்து

### 55பேர் உயிருடன் மீட்பு; 40பேரின் நிலை தெரியாது

கிழக்கு லிபியாவில் இருந்து இத்தாலி நோக்கி பயணிகள் படகு ஒன்று சென்றது.

இந்த படகில் 95 பேர் இத்தாலியில் குடிபெயர்வதற்காக பயணம் செய்தனர். லிபி யாவில் இருந்து 48 கிலோ மீற்றர் தூரம் கடலில் சென்றபோது திடீரென நடுக்கட லில் படகு கவிழ்ந்தது.

உடனே இத்தாலி நாட்டைச் சேர்ந்த மீட்புக்குழுவினர் படகுகளுடன் சென்று கடலில் மூழ்கிய 55 பேரை உயிருடன் மீட்டனர். இன்னும 40 பேரை காணவில்லை. அவர்களை மீட்புக்குழுவினர் தொடர்ந்து தேடி வருகிறார்கள்.

சிரியாவில் நடந்து வரும் போர் மற்றும் ஆபிரிக்க நாடான எரித்திரியாவில் நடந்து வரும் இராணுவ ஆட்சி போன்ற காரணங்களால் இருநாடுகளில் இருந்தும் இதுவரை கடல்மார்க்கமாக ஒரு இலட்சத்து 30 ஆயிரம் பேர் இத்தாலி சென்று குடியேறி உள்ளனர் என்று ஐ.நா. அகதிகள் ஆணையம் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஏர்செல்-மேக்ஸிஸ் வழக்கில் சிதம்பரம் பற்றியும் விசாரணை

(சென்னை)

ஏர்செல் - மேக்சிஸ் ஒப்பந்த முறைகேடு வழக்கில், முன்னாள் மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரத்தின் செயற்பாடுகள் குறித்தான விசாரணைகளும் மேற்கொள்ளப்படுவதாக சிபிஐ தெரிவித்துள்ளது.

ஏர்செல் நிறுவனத்தின் பங்குகளை, மலேசியாவைச் சேர்ந்த மேக்ஸிஸ் நிறுவனத்துக்கு விற்க அழுத்தம் தரப்பட்டதாக எழுந்த குற்றச்சாட்டுகள் மீது நடக்கும் வழக்கின் விசாரணை நேற்று முன்தினம் டில்லி சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்றது.

சிபிஐ தரப்பில் வழக்கறிஞர் கே.கே.கோயல்ஆஜராகி வாதாடியபோது, முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம் பொறுப்பு வகித்த காலத்தில் சில முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக குற்றஞ்சாட்டினார்.

மேலும் இந்த விசாரணைகளை மேற்கொள்ளும் சிபிஐ அதிகாரி நீதிமன்றத்தில் அதன் விபரங்களை அளித்தார்.

அதில், பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவின் ஒப்புதல் இல்லாமல் சன் டைரக்ட் நிறுவனத்திற்கு ரூபாய் மூவாயிரத்து 500 கோடி அளவுக்கு வெளிநாட்டிலிருந்து முதலீடு செய்யப்பட்டது தொடர்பிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்தார். (இ)

பாரதச் செய்தி

## 10 நிமிட இடைவெளியில் 5 குழந்தைகள் பிரசவம்




மணிப்பூர் மாநிலத்தின் பிஷ்னுபூர் மாவட்டத்திற்குட்பட்ட தங்க சமுக்கோல் கிராமத்தில் வசித்து வருபவர் 35 வயதான கீதா. நான்கு குழந்தைகளுக்கு தாயான அவர் மீண்டும் கர்ப்பமடைந்தார்.

கர்ப்பமடைந்த 28 வார காலத்திற்கு பின் நேற்று அப்பெண்ணுக்கு பிரசவ வலி ஏற்பட்டது. இதனையடுத்து அப்பகுதியில் உள்ள பிராந்திய அறிவியல் வைத்தியசாலையில் அவர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். மருத்துவர்கள் அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்க ஒன்றன் பின் ஒன்றாக நான்கு அழகான பெண் குழந்தைகளையும், ஒரு அழகான ஆண் குழந்தையையும் பத்து நிமிட இடைவெளியில் கீதா பெற்றெடுத்தார். (இ)




# மகிந்தவின் ஐ.நா.உரையை எதிர்த்து சென்னையில் கண்டனப் போராட்டம்



ஐ.நா.சபையில் நாளை25ஆம் திகதி இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரையாற்ற அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதை கண்டித்து விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் சென்னை வள்ளுவர் கோட்டம் அருகே நேற்று நடந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் தலைமை தாங்கினார். பொதுச் செயலாளர் சிந்தனை செல்வன், ஆனூர் ஷாநவாஸ், பாவரசு, பால சிங்கம், இரா.செல்வம், வீரமுத்து, பாவலன் ஆகியோர்இந்த ஆர்ப்பாட்டத்திற்கு முன்னிலை வகித்தனர்.

இலங்கை அரசை சர்வதேச விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்று கூறும் நிலையில் ஐ.நா. மன்றத்தில் ஜனாதிபதி மகிந்தவை பேச அனுமதி கொடுத்திருப்பது தமிழர்களின் வெந்த புண்ணில் வேலை பாய்ச்சுவது போலவுள்ளது.

இந்திய அரசு இதில் தலையிட்டு சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்போடு ஜனாதிபதி மகிந்தவை ஐ.நா. மன்றத்தில் பேசுவதை தடுத்து நிறுத்த வேண்டும். சர்வதேச நாடுகள் பங்கேற்கும் ஐ.நா. மன்றத்தில் மகிந்த பேசுவதை அனுமதிக்க முடியாது.

இதை கண்டித்து நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் நடத்தும் ஆர்ப்பாட்டத்துக்கு விடுதலை சிறுத்தை கட்சி வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது. அதே போல் நாளை(இன்று) பல்வேறு அமைப்புகள் சார்பாக நடத்தப்படும் பேரணிக்கும் வாழ்த்து தெரிவித்துக் கொள்கிறேன்.

25ஆம் திகதி கறுப்பு சட்டை அணிந்து எதிர்ப்பை தெரிவிக்க வேண்டும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி தமிழக மக்களுக்கு அழைப்பு விடுத்திருக்கிறார். அதனை வரவேற்கிறோம். நாங்கள் இன்று(நேற்று) முதலே கறுப்பு சட்டை அணிந்துள்ளோம். (இ)

# எபோலா பீதி

## இளைஞருக்கு தீவிர சிகிச்சை

அரியலூர் மாவட்டம் செந்துரை தாலுகா கஞ்சமலை பட்டியை சேர்ந்தவர் பாலமுருகன் (வயது 22). நைஜீரியா நாட்டுக்கு சென்றிருந்த இவர்நேற்றுமுன்தினம் காலை சென்னை வந்தார். விமான நிலையத்தில் மிகவும் சோர்வாக காணப்பட்ட பாலமுருகனை அங்குள்ள மருத்துவ குழுவினர் பரிசோதனை மேற்கொண்டனர். அப்போது அவருக்கு காய்ச்சல் அதிகமாக காணப்பட்டது.

நைஜீரியா நாட்டில் இருந்து வநததால்பாலமுருகனுக்கு எபோலா காய்ச்சல் இருக்கலாம் என்று சென்னை விமான நிலைய மருத்துவ குழுவினர் சந்தேகப்பட்டனர்.

இதனால் அவரை தனி அம்புலன்ஸ் மூலம் சென்னை ராஜீவ் காந்தி அரசு தலைமை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். காலை 8.30 மணிக்கு அனுமதிக்கப்பட்ட பாலமுருகனுக்கு 216ஆம் நம்பர் அறை ஒதுக்கப்பட்டு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

இரத்த பரிசோதனை உட்பட அனைத்து சிகிச்சைகளும் மேற்கொள்ளப்பட்டன. இதில் பாலமுருகனுக்கு எபோலா நோய் அறிகுறி இல்லை என தெரியவந்தது. சாதாரண வைரஸ் காய்ச்சலால் தான் அவர் சோர்வாக உள்ளார் என்றும் டாக்டர்கள் கண்டுபிடித்தனர். காய்ச்சலுக்கு தற்போது மருந்து மாத்திரை வழங்கப்பட்டுள்ளதால் பாலமுருகன் வேகமாக குணமடைந்து வருவதாகவும் வைத்தியர்கள் தெரிவித்தனர். (இ)

# 200 ரூபாவிற்கு 26 இலட்சம்; இளைஞனை பாராட்டிய பொலிஸ்



ஐதராபாத் எஸ்.ஆர். நகரில் வசித்து வரும் லத்தீப், இளநிலை பட்டப்படிப்பு படித்து வருகிறார். நேற்றுமுன்தினம் காலை லத்தீப் தனது நண்பருடன் சேர்ந்து அப்பகுதியில் உள்ள ஓர் அரசு வங்கிக்கு சொந்தமான ஏடிஎம்முக்கு 200 ரூபா பணம் எடுக்கச் சென்றுள்ளார். அபபோது தனது ஏடிஎம் அட்டையை இயந்திரத்தில் செருகிய பினனர், இரகசிய குறியீட்டுஎண்ணை அழுத்தி உள்ளார். அப்போது திடீரென அந்த ஏடிஎம் இயந்திர பாகங்கள் திறந்து கொணடு அதிலிருந்த 26 இலட்சம் ரூபா வெளியே வந்ததாகக் கூறப்படுகிறது.

இதைக்கண்டு அதிர்ச்சி அடைந்த லத்தீப், உடனடியாக ஏடிஎம்மில் இருந்த கட்டணமில்லா தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு நடந்த விடயங்களை தெரிவித்துள்ளார். அதன் பிறகு தனது நண்பனை காவலுக்கு வைத்து விட்டு அருகிலிருந்த எஸ்.ஆர். நகர் பொலிஸ் நிலையத்தில் புகார் தெரிவித்துள்ளார் லத்தீப். விரைந்து வந்த வங்கி அதிகாரிகள், இயந்திரத்தை சரி செய்தனர்.

இந்த ஏடிஎம் மையத்தில் கண்காணிப்பு கமராவோ பாதுகாவலரோ இல்லை என்பதால், வங்கி அதிகாரிகளின் அலட்சியத்தை பொலிஸார் கண்டித்தனர். அதே நேரம் மாணவர் லத்தீப்பின் நேர்மையையும், அவர் எடுத்த முயற்சிகளையும் பொலிஸார் வெகுவாக பாராட்டினர். (இ)

# வடக்குகிழக்கு மாநிலங்களில் பலத்த மழையினால் வெள்ளம்

## 10பேர் பலி



வட-கிழக்கு மாநிலங்களில் மக பலத்த மழை பெய்து வருகிறது.

குறிப்பாக அசாம் மாநிலத்தில் அதிகபட்ச மழை பெய்து வருகிறது.

தொடர் மழை காரணமாக அசாம், மேகாலயா, மாநிலங்களில் பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. அசாமில் கோல்பரா, துப்ரி, லக்கிம்பூர், கம்ரப் மாவட்டங்களில் கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த மாவட்டங்களில் சுமார் 100 கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அந்த கிராமங்களில் இருந்து சுமார் 50 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

மழைவெள்ளத்துக்கு இது வரை 10 பேர் பலியாகி விட்டனர். தேசிய நெடுஞ்சாலைகளில் அரிப்பு ஏற்பட்டுள்ளதால் அசாம், மேகாலயா மாநிலங்களின் பல பகுதிகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் அடுத்த 2 நாட்களுக்கு பலத்த மழை நீடிக்கும் என்று வானிலை இலாகா எச்சரித்துள்ளது. எனவே வடகிழக்கு மாநிலங்களில் பல்வேறு முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.எல்லை பாதுகாப்பு படை வீரர்கள், புதிய பேரிடர் மீட்புக் குழுவினர் வடகிழக்கு மாநலங்களுக்கு விரைந்து சென்று மீட்புப் பணிகளை தொடங்கியுள்ளனர். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்டாள் என்பவன் யார் தெரியுமா?
தன் வியாதிக்காக டாக்டரிடம் போய் தன் சொத்துக்களுக்கு அவரையே வாரிசாக்குகிறானே அவன்தான்.
- பெஞ்சமின் ஃப்ராங்க்ளின்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## முஸ்லிம் அரசியல் கட்சிகளுடன் உறவு வைக்கக் கூடாது

சில இடங்களில் கதைப்பது நல்லது. சில இடங்களில் மௌனமாக இருப்பது நல்லது. எனினும் சிலர் கதைக்க வேண்டிய இடத்தில் மௌனமாக இருப்பர். இன்னும் சிலர் மௌனமாக இருக்க வேண்டிய இடத்தில் கதை அளப்பர். இவை பொருத்தமற்ற நடைமுறைகள் என்பதை அறிந்து அதற்கு ஏற்றால்போல் செயற்படுவதே புத்திசாலித்தனம்.

இலங்கை அரசியலில் சிலர் மௌனமாக இருப்பது நல்லது. இன்னொரு பகுதியினர் கதைப்பது நல்லது. இன்னும் ஒரு பகுதியினர் அரசியலில் இருந்து ஒதுங்குவது நல்லது. இதனைப் புரிந்து கொள்வதற்கு உதாரணங்கள் தேவை என்றால், அமைச்சர் மேர்வின் சில்வா கதைக்காமல் இருப்பதும் அமைச்சர் ராஜித சேனரட்ண கதைப்பதும் ரணில் விக்கிரமசிங்க அரசியலில் இருந்து ஒதுங்குவதும் உத்தமமானதாகும். இருந்தும் இவை நடக்கப் போகின்ற விடயங்கள் அன்று.

நடக்க வேண்டியவை நடக்காமல் போகிறது. என்ன செய்ய முடியும்? தென்னை மரத்தில் நல்ல பழுத்த தேங்காய் இருக்க, குரும்பை கீழே விழுகிறதல்லவா? இதுதான் நியதி.

பழுத்த தேங்காய் கீழே விழுந்து; குரும்பை தென்னையோடு இருந்தால் இரண்டுமே உச்சமான பயன்பாடாகி இருக்கும்.

இதை விடுத்து பழுத்த தேங்காய் கீழே விழாமல் தென்னையோடு இருந்தால், இளநீர் வற்றி தேங்காய் குடுகுடுப்பையாகி விடும். பின்னர் அதனை தேங்காய் என்று எவரும் சொல்ல மாட்டார்கள். மாறாக கொப்பறா என்றே அழைப்பர்.

இதேபோல் குரும்பை தென்னையில் இருந்தால் இளநீர், முட்டுக்காய் என்ற பருவங்களைக் கடந்து தேங்காய் என்ற பக்குவமான நிலையை அடைந்து இறைவனுக்கும் மனிதர்களுக்கும் பயன்படு பொருளாகி இருக்கும்.

ஆனால் குரும்பை கீழே விழுந்ததால் ஒரு தேங்காயை இழக்க வேண்டியதாயிற்று. இத்தகைய இழப்புகள் இங்கு தென்னையோடு வைத்துப் பேசப்படுகின்றனவாயினும் எங்கள் அரசியலிலும் இந்த நிலைமைகள் உள்ளன. இதனால் ஏற்படக் கூடிய பாதிப்புகள் மனித சமூகத்துக்கானவை.

நடந்து முடிந்த ஊவா மாகாண சபைத் தேர்தல் முடிவுகளை ஒரு கணம் மீட்டுப்பாருங்கள். முஸ்லிம்கள் தரப்பில் எவரும் வெற்றி பெறவில்லை. அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுத்ததன் விளைவு என்று அவர்களே கூறும் அளவிற்கு நிலைமை உள்ளது.

முஸ்லிம்கள் தங்களுடைய இனத்துவத்தைப் பேணும் வகையில் நடந்திருந்தால் நிச்சயமாக அவர்கள் ஒரு சில பிரதிநிதித்துவங்களையாவது பெற்றிருக்க முடியும். அல்லது அவர்கள் தமிழர்களோடு சேர்ந்து தேர்தலில் போட்டியிட்டிருந்தால் அவர்களுக்கு வெற்றி கிட்டியிருக்கும்.

ஆனால் முஸ்லிம் அரசியல் கட்சிகள் பேரினவாதத்தோடு சேர்ந்திருந்ததன் காரணமாக முஸ்லிம் மக்கள் அவர்களை அடியோடு நிராகரித்து விட்டனர்.

எனவே முஸ்லிம் மக்களால் நிராகரிக்கப்பட்ட-தூக்கி ஏறியப்பட்ட-பேரினவாதத்திற்கு முண்டு கொடுக்கும் எந்த முஸ்லிம் அரசியல் கட்சிகளுடனும் கூட்டுச் சேர்வது தொடர்பில் தமிழ்த் தரப்புகள் சிந்திக்கக் கூடாது. அவ்வாறானதொரு சிந்தனை இருந்தால், அதனை மாற்றிக் கொள்ள வேண்டும்.

அதேநேரம் சிறுபான்மையினரின் உரிமைக்காகப் போராடுதல் என்ற உயர்ந்த நோக்கைக் கொண்ட; முஸ்லிம் அரசியல் கட்சிகளின் தோற்றத்திற்கு தமிழத் தரப்பு உதவுவதுடன் அத்தகைய முஸ்லிம் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து சிறுபான்மை இன மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வது காலத்தின் தேவையாகும்.

# தமிழ் பேசும் பௌத்தர்கள் வட - கிழக்கில் இருந்தனர்

## முதலமைச்சர் விக்கி தெரிவிப்பு

முன்னொரு காலத்தில், வடக்கு கிழக்கில் தமிழ் பேசும் பௌத்தர்கள் வாழ்ந்தார்கள். அவர்களால் இங்கு வைக்கப்பட்ட பௌத்த சின்னங்களே இன்றும் இங்கு காணப்படுகின்றன என்று வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரியின் நாவலர் நற்பணி மன்றத்தால் அமைக்கப்பட்ட நாவலர் சிலையை நேற்று செவ்வாய்க்கிழமை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

சைவ சமயத்தில் தோன்றிய சமய குரவர்கள் நால்வரும் சைவ சமய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்கள். பண்டைய காலத்தில் இலங்கையின் வட, கிழக்கு பிரதேசத்தில் இருந்த தமிழ் மக்கள் கூட சரித்திரப்படி பார்த்தால் இந்து தர்ம முறைப்படியே வாழ்ந்து வந்தவர்கள். கௌதம புத்தரின் தோன்றலுக்கு முன்னையதான சரித்திர சான்றுகளில் இவ்விடயம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஆனால் பின்னைய பௌத்தத்தின் உள்நுழைவால் நூற்றாண்டுக்கும் மேற்பட்ட காலத்திற்கு பௌத்தத்தால் கவரப்பட்டு பௌத்த சமயிகளாக மாறி, அதன்பின்னர் இந்து சமய குரவர்களின் வரவாலும் அவர்களின் சமய ஆதிக்கத்தாலும் பௌத்தத்தில் இருந்து விடுபட்டு சைவத்திற்கு சென்றவர்களே எமது மூதாதையர்.

ஒருகால கட்டத்தில் தமிழ் பேசும் பௌத்தர்கள் வடக்கு, கிழக்கில் வாழ்ந்ததால் தான் பௌத்த சின்னங்கள் இன்றும் இங்கு காணப்படுகின்றன. அதையே தவறாக சிங்கள பெரும்பான்மையினர் பௌத்தம் வடக்கு கிழக்கில் நிலைபெற்றிருந்ததால் இங்கு வாழ்ந்த மக்கள் சிங்கள மக்கள் தான் என்றும் தமிழர்கள் இந்தியாவில் இருந்து பின்னைய காலத்தில் வந்து சிங்கள மக்களை விரட்டி விட்டார்கள் என்றும் திரிபுபடுத்தி ஒரு வாதத்தை முன் வைக்கின்றார்கள்.

பௌத்த மத தமிழ்களை சிங்களவர் என்று தவறாக பிரசாரம் செய்கின்றார்கள். ஏன் இராவணனையே ஒரு சிங்களவன் என்கின்றார்கள். "தெமல பௌத்தயோ" அதாவது "தமிழ் பௌத்தர்கள்" என்ற ஒரு சிங்கள நூல், பேராசிரியர் சுனில் ஆரியரத்ன என்பவரால் உண்மையை விளக்கி சில காலத்துக்கு முன்னர் எழுதப்பட்டது.

அதன் மறு பிரசுரிப்பை சில பௌத்த பிக்குகள் அண்மையில் தடை செய்துள்ளார்கள். இவ்வாறு தான் உண்மையை வெளிவராமல் பெரும்பான்மையினருள் சிலர் தடுக்க முற்படுகின்றனர். சிங்கள மொழி என்பதன் உற்பத்தியே பௌத்தத்தின் நிமித்தமே எழுந்தது என்பதை இவர்கள் மறந்து விடுகின்றார்கள். புத்த பிக்குகள், பாளி மொழியை இங்கிருந்த தமிழ் மொழிக்குள் உட்படுத்தியே சிங்கள மொழி பிறந்தது.

எனினும் சைவசமயம் மறு சமயங்களால் மங்கிப்போன காலகட்டங்களில் அதனை மேலோங்க வைப்பதற்கு வந்த அவதார புருஷர்கள் தான் எமது சமயகுரவர்கள் நால்வரும் என்று கூறலாம்.

பலவிதமான அற்புதங்களை செய்தும், உணர்வுகளை கனிய வைக்கும் தேவார, திருவாசக பாடல்களை பாடியும் மக்கள் மனதை இறைவன் பக்கம் திருப்பி மீண்டும் சைவத்தை வளர செய்த மகானுபாவர்கள் அவர்கள் என முதலமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ)

## நவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.நாவலர் வீதி கடையிற் சுவாமிகள் குருவார அன்னசத்திர சிவன் தேவஸ்தானத்தின் நவராத்திரி விரதம் இன்று புதன்கிழமை தொடக்கம் தினமும் பிற்பகல் 3.45 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 3ஆம் திகதி விஜயதசமி அன்று காலை 9 மணிக்கு விசேட பூஜைகள் நடைபெறும்.

அத்துடன் கேதாரகௌரி நோன்பு அடுத்தமாதம் 3ஆம் திகதி தொடக்கம் தினமும் மாலை 4.45 மணிக்கு விசேட பூஜைகளுடன் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## மீசாலை பொது நூலகத்தின் ஆலோசனைக்குழுக்கூட்டம்

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் மீசாலை பொது நூலகத்தினரால் பல்வேறு செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இதற்கான ஆலோசனைக்கூட்டம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நகராட்சி மன்ற தவிசாளரும் நூலக அபிவிருத்திக் குழுக்களின் தலைவருமான இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் மீசாலை பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே தேசிய வாசிப்பு மாதச் செயற்குழு உறுப்பினர்களை தவறாது சமுகமளிக்குமாறு மீசாலை பொது நூலக நூலகர் திருமதி தயாநிதி பாலச்சந்திரன் அறிவித்துள்ளார். (இ-29)

## நூல் வெளியீடும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

மு/பாரதி வித்தியாலயத்தின் நூல் வெளியீடு மற்றும் பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் பி.சற்குணசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வியமைச்சர் த.குருகுலராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (இ)

## கேப்பாப்பிலவு காணிகள் நிபந்தனைகள் அடிப்படையில் மக்களுக்கு கையளிப்பு

### வடமாகாண பிரதி அவைத் தலைவர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, கேப்பாப்பிலவு பகுதியில் இராணுவம் மற்றும் விமானப்படை ஆகியோரின் வசமிருந்த 642 ஏக்கர் பொதுமக்களின் காணிகள் நிபந்தனைகளின் அடிப்படையிலேயே பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக வட மாகாண பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதன் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினரின் வசமிருந்த கேப்பாப்பிலவு - வாவெட்டிகுளம், இயன்கன்குளம் ஆகிய பகுதிகளிலுள்ள 67 விவசாயிகளுக்கு சொந்தமான 320 ஏக்கர் விவசாய காணியும், விமானப்படையின் கட்டுப்பாட்டின் கீழிருந்த இயன்கன்குளம் பகுதியிலுள்ள 32 விவசாயிகளுக்கு சொந்தமான 82 ஏக்கர் வயல் நிலமும், வாவெட்டிக்குளம் பகுதியிலுள்ள 34 விவசாயிகளுக்கு சொந்தமான 240 ஏக்கர் வயல் நிலமும் கடந்த 18ஆம் திகதி பொது மக்களிடம் கையளிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் நேற்று முன்தினம் கேப்பாப்பிலவு மக்களுக்கு அரிசிப் பைகள் வழங்கும் பொருட்டு அங்கு விஜயம் செய்தபோது அத்தருணத் தில் அப்பகுதி மக்கள், தங்களிடம் திருப்பி தரப்பட்ட காணிகள் நிபந்தனைகளின் அடிப்படையில் தரப்பட்டுள்ளதாக கூறினார்கள்.

அதாவது, மீண்டும் இராணுவத்திற்கு காணிகள் தேவைப்பட்டால் இந்தக் காணிகளை மீண்டும் இராணுவத்துக்கு கொடுக்க வேண்டும், காணிகள் மீண்டும் தராவிட்டால் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சம்மதம் தெரிவித்தல் ஆகிய நிபந்தனை கடிதங்களில் கையெழுத்து வாங்கிய பின்னரே காணிகள் வழங்கப்பட்டுள்ளன என ஜெகநாதன் மேலும் தெரிவித்தார். (2-250)

## பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்க

யாழ்.கரவெட்டி கால்நடை வைத்திய அலுவலகத்திற்குட்பட்ட கால்நடை வளர்ப்போர் தமது மாடுகளுக்கு காதடையாளமிடப்பட்டும் இதுவரை அதற்கான பற்றுச் சீட்டைப்பெற்றுக் கொள்ளாதவர்கள் கரவெட்டி கால்நடைவைத்திய அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ளுமாறு கரவெட்டி கால்நடை வைத்திய அலுவலக அதிகாரி திருமதி சா.மகேந்திரராஜா அறிவித்துள்ளார். (இ-60)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### இதயம் ஒரு கோயில்



✦ கடவுளை அடைவதற்குப் பாதைகள் பல உள்ளன. அதில், எந்த வழியில் வேண்டுமானாலும் நீ செல்லலாம்.

✦ பக்தனின் இதயமே கடவுள் குடியிருக்கும் இல்லம். நல்ல எண்ணங்களே அவருக்குஉரிய அர்ச்சனை.

✦ வெறும் சாஸ்திரம் கற்பதை விட, உண்மையின் பாதையில் நடப்பதே உயர்வானது.

✦ செல்வத்தால் உண்டாகும் பெருமை நிலைத்து நிற்பதில்லை.

✦ பெண்களைத் தாயாகக் கருதி நடத்துங்கள். அதனால், மனதில் தீமைகள் அனைத்தும் மறைந்து போகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்ட கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

## ஞானமுருகன் சம்பியன்







வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டத்திலுள்ள அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையில் நடைபெற்ற காற்பந்தாட்ட இறுதிப்போட்டியில் ஞானமுருகன் அணி 6:0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றியீட்டியது.

24 காற்பந்தாட்ட அணிகள் பங்குபற்றிய இந்த போட்டியின் இறுதிப் போட்டி, உரும்பிராய் இந்து கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

அரையிறுதி போட்டிகளில் ஊரெழு றோயல் அணி 8:1 என்ற கோல் கணக்கில் நவஜீவன்ஸ் அணியையும், ஞானமுருகன் அணி 4:2 என்ற கோல் கணக்கில் நாவாந்துறை சென்.மேரிஷ் அணியையும் வென்று இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றன.

இறுதிப்போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதியது.

போட்டியின் ஆரம்பம் முதல் இரு அணிகளும் நிதானமாக விளையாடின. முதல் பாதியாட்டம் நிறைவு பெறும் வேளையில் ஞான முருகன் அணியின் சிவஞானம் லஸ்ரின் முதலாவது கோலை போட்டார்.

முதல்பாதி ஆட்டத்தில் ஞானமுருகன் அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதியாட்டத்தில் ஞானமுருகன் அணி முழுமையான ஆதிக்கத்தை மைதானத்தில் நிலைநாட்டியது.

ஞானமுருகன் அணி, அடுத்தடுத்து 5 கோல்களை இரண்டாவது பாதியாட்டத்தில் போட்டது. றோயல் அணியால் எவ்வித கோல்களையும் பெறமுடியவில்லை. இறுதியில் 6:0 என்ற கோல் கணக்கில் ஞானமுருகன் அணி வெற்றி பெற்று சம்பியனாகியது.

ஞானமுருகன் அணியின் சிவஞானம் லஸ்ரின், வரதராஜா தவரூபன் ஆகியோர் தலா 2 கோல்களையும், இரவீந்திரன் பார்த்தீபன், இரவீந்திரன் ஜெகதீஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோல்களையும் பெற்றனர்.

இறுதிப்போட்டியின் நாயகனாக ஞானமுருகன் அணியின் சிவஞானம் லஸ்ரினும், சிறந்த கோல் காப்பாளராக சந்திரதாஸா சயந்தனும் தெரிவு செய்யப்பட்டனர். (க-23)

விளையாட்டுச் செய்திகள்

# சென்றலைட்ஸ் வெற்றி

பற்றீசியன் விளையாட்டு கழகத்திற்கு எதிரான கிரிக்கெட் போட்டியில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் 2 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன் விளையாட்டுக்கழகம்26.4ஓவர்களில் அனைத்து விக்கெட்டினையும் இழந்து 140 ஓட்டங்களைப்பெற்றது.

துடுப்பாட்டத்தில் விதுபாலா 38 ஓட்டத்தினையும் மனோஜ் 26 ஓட்டத்தினையும் சுகநேசன் ஆட்டமிழக்காது 25ஓட்டத்தினையும் அலக்ஸ்ரின் 14 ஆட்டத்தினையும் பெற்றனர்.

பந்து வீச்சில் ஜெனோசன் 5ஓவர்கள் பந்து வீசி 25 ஓட்டத்தினை விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டினையும் ஜெரிக் 4.4 ஓவர்கள் பந்து வீசி 25 ஓட்டத்தினை விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

141 ஓட்டம் எடுத்தால் வெற்றி என களமிறங்கிய சென்றலைட்ஸ் அணி 24.3ஓவர்களில் 8 விக்கெட் இழப்பிற்கு தமது வெற்றி இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் டார்வின் 3சிக்ஸர் 4 பவுண்டரிகள் உட்பட 46 ஓட்டத்தினையும் ஜெனோசன் ஆட்டமிழக்காது 2சிக்ஸர் 4பவுண்டரி கள் உட்பட33 ஓட்டத்தினையும் ஸ்ரீபன் 23 ஓட்டத்தினையும் பெற்றனர்.

இறுதிப்போட்டி எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 9 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் கொக்குவில் கே.சி.சி அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் அணி மோதவுள்ளது. (க)

# பார்முலா I கார்ப்பந்தயம்; ஹாமில்டன் முதலிடம்



பார்முலா 1 கார்ப்பந்தயத்தில் இங்கிலாந்து வீரர் லீவிஸ் ஹாமில்டன் முதலாமிடத்தை பெற்றுக் கொண்டார்.பார்முலா 1 காரப்பந்தயத்தின் 14ஆவது சுற்றான சிங்கப்பூர் கிராண்ட்பிரீ அங்குள்ள மரினா ஓடுதளத்தில் நேற்றுமுன்தினம் நடந்தது. வழக்கம் போல் 11 அணி களை சேர்ந்த 22 வீரர்கள் காரை செலுத்தினர். இதில் பந்தய தூரமான 308.965 கிலோ மீற்றர் இலக்கை இங்கிலாந்து வீரர் லீவிஸ் ஹாமில்டன் (மெர்சிடஸ் அணி) 2 மணி 04.785 விநாடியில் கடந்து முதலிடத்தை பிடித்து அதற்குரிய 25 புள்ளிகளை பெற்றார். இந்த சீசனில் அவர் பெற்ற 7ஆவது வெற்றி இதுவாகும். அவரை விட 13.5 விநாடி பின்தங்கிய நடப்பு சம்பியன் ஜேர்மனியின் செபாஸ்டியன் வெட்டல் 2ஆவது இடத்தை பிடித்தார். ஹாமில்டனின் பிரதான போட்டியாளரான ஜேர்மனியின் நிகோ ராஸ்பர்க் (மெர்சிடஸ் அணி) துரதிர்ஷ்டவசமாக கியர்பாக்ஸ் பிரச்சினையால் பாதியில் விலக நேரிட்டது.

இன்னும் 5 சுற்றுகள் எஞ்சியுள்ள நிலையில் ஒட்டுமொத்த சம்பியன்ஷிப் பட்டத்திற்கான போட்டியில்ராஸ்பர்க்கை (238 புள்ளி) முந்திய ஹாமில்டன் 241 புள்ளிகளுடன் முதலிடத்திற்கு வந்துள்ளார்.

3ஆவது இடத்தை அவுஸ்திரேலியாவின் டேனியல் ரிச்சியர்டோ 181 புள்ளிகளுடன் வகிக்கிறார். 15ஆவது சுற்று போட்டி ஜப்பானில் அடுத்த மாதம் 5ஆம் திகதி நடக்கிறது. (க)

# வேலணை ஐயனார் ஏ அணி சம்பியன்



ஊர்காவற்றுறை தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக்கழகம் நடத்திய அணிக்கு 9 பேர் கொண்ட காற்பந்தாட்ட சுற்றுப்போட்டியில்வேலணை ஐயனார் ஏ அணி சம்பியனாகியது.

மேற்படி சுற்றுப்போட்டியில் தீவகத்தை சேர்ந்த 17 காற் பந்தாட்ட அணிகள் பங்குபற்றியதுடன், போட்டிகள் தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வந்தது.

தொடர்ந்து இறுதிப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றதுடன், இறுதிப்போட்டியில் வேலணை ஐயனார் ஏ அணியை எதிர்த்து வேலணை ஐயனார் பி அணி மோதியது.

போட்டி ஆரம்பமாகிய முதல் இரண்டு அணிகளும் கோல் போடும் முயற்சியில் தாக்குதல் ஆட்டத்தில் ஈடுபட்ட போதிலும் கோல் எதனையும் பெறமுடியவில்லை. முதல் பாதியாட்டம் கோல் எதனையும் பெறாத நிலையில் முடிவுற்றது.

இரண்டாவது பாதியாட்டத்தில் வேலணை ஐயனார் ஏ அணி இலாவகமாக ஒரு கோல் பெற்று முன்னிலை பெற்றது.

இறுதியில் வேலணை ஐயனார் ஏ 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனாகியது. (க-23)

# பாகிஸ்தான் தொடரிலிருந்து வோட்சன் விலகல்



அவுஸ்திரேலியா அணியின் சகலதுறை வீரர் ஷேன் வோட்சன், உபாதை காரணமாக ஐக்கிய அரபு இராச்சியத்தில் இடம்பெறவுள்ள பாகிஸ்தான் அணியுடனான தொடரில் இருந்து விலகியுள்ளார்.

கால் தசையில் ஏற்பட்டுள்ள உபாதையே அவர் இந்த தொடரில் இருந்து விலகக் காரணம். டெஸ்ட் போட்டிகளுக்காக பென்ஹில் பன்கோஸ் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள அதேவேளை ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கும் இருபது-20 போட்டிகளுக்கும் கேன் ரிச்சர்ட்சன் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார். மிச்சல் மார்ஷ், டெஸ்ட் போட்டிகளில் தனது அறிமுகத்தை [illegible] என [illegible] ஷேன் வோட்சன், உபாதை காரணமாக அணியில் இருந்து விலகிய நிலையில் மிச்சல் மார்ஷ் அணியில் இடம்பெறுவது உறுதியாகியுள்ளது.

ஷேன் வோட்சன் அண்மைக் காலமாக தொடர்ச்சியான உபாதைகள் காரணமாக விளையாட முடியாமல் போயுள்ளது. இதன் காரணமாக உலகக்கிண்ண அணியில் இடம்பெற முடியுமா என்ற சந்தேகம் உருவாகியுள்ளது. உலககிண்ண தொடருக்கான அணியை தயார் செய்வதில் உபாதைகள் காரணமாக அவுஸ்திரேலியஅணி பின்னடைவுகளை சந்தித்து வருகின்றது. அணியின் தலைவர் மைக்கல் கிளார்க் ஏற்கனவே இந்த தொடரில் விளையாடுவது சந்தேகம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

மிச்சல் மார்ஷ் டெஸ்ட் அறிமுகத்தை மேற்கொண்டால் தகப்பனும் அவருடைய இரண்டு மகன்களும் டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய மூன்றாவது சந்தர்ப்பம் இதுவாக அமையும். இந்தியாவின் லாலா அமர்நாத்தும், அவருடைய புதல்வர்களான மொகிந்தர், சுரிந்தர் ஆகியோரும், நியூசிலாந்தை சேர்ந்த வோல்ட்டர் ஹட்லி மற்றும் அவருடைய புதல்வர்களான ரிச்சர்ட் மற்றும் டேயில் ஆகியோரும் இவ்வாறு முதலில் விளையாடியவர்கள் ஆவர். (க)

# வடமாகாண தடகள போட்டி; யாழ்.மாவட்டம் முதலிடம்

வடமாகாணத்துக்கு உட்பட்ட மாவட்டங்களுக்கு இடையிலான தடகள விளையாட்டுப் போட்டியில் யாழ்.மாவட்டம் முதலிடத்தை பெற்றுள்ளது.

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் மகாவித்தியாலத்தில் சனி,ஞாயிறு தினங்களில் நடைபெற்ற வடமாகாணத்தை சேர்ந்த மாவட்டங்களுக்கு இடையிலான தடகளப் போட்டியில் யாழ்.மாவட்ட அணி 249 புள்ளிகளை பெற்று முதலிடத்தை பெற்றுக் கொண்டது.

177 புள்ளிகளை பெற்று வவுனியா மாவட்டம் 2ஆம் இடத்தினையும்,90 புள்ளிகளை பெற்று முல்லைத்தீவு மாவட்டம் 3ஆம் இடத்தினையும் பிடித்தது.

மேலும் இந்த வருடத்திற்கான சிறந்த ஓட்ட வீரராக யாழ்.மாவட்ட அணியைச் சேர்ந்த சதீஸனும், சிறந்த ஓட்ட வீராங்கனையாக வவுனியா மாவட்ட அணியைச் சேர்ந்த லேகாசினியும் தெரிவு செய்யப்பட்டனர்.

அதேவேளை சிறந்த தடகள வீரராக யாழ்.மாவட்டத்தின் வி.[illegible]மினன் தெரிவு செய்யப்பட்டார்.(க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோர்தன் நைட்ஸை வென்றது ஹரிக்கேன்ஸ்



விக்கெட்டைக் கைப்பற்றினர்.

ஹரிக்கேன்ஸ் அணி வீரர்களின் துடுப்பாட்டத்துக்கும் பந்துவீச்சுக்கும் முன்னால் தாக்குப்பிடிக்க முடியாமல் நியூசிலாந்தின் நோர்தன் நைட்ஸ் 86 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

6-வது சம்பியன்ஸ் லீக் தொடரின் 9-வது லீக் போட்டி நியூசிலாந்தின் நோர்தன் நைட்ஸ் – ஆஸியின் ஹொபார்ட் ஹரிக்கேன்ஸ் அணிகளுக்கு இடையில் நேற்று ராய்பூரில் நடைபெற்றது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற நைட்ஸ் அணி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஹரிக்கேன்ஸ் அணி 20 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரமே இழந்து 178 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் பிளிசார்ட் 63, மலிக் ஆட்டமிழக்காமல் 45 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் நோர்தன் நைட்ஸ் அணி சார்பில் சௌதி, சோதி, ஸ்கொட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

179 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்கு தமது துடுப்பாட்டத்தை ஆரம்பித்த நைட்ஸ் அணி, ஆஸியின் ஹரிக்கேன்ஸ் அணி வீரர்களின் துல்லியமான பந்துவீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் 16.2 ஓவர்கள் வரையே தாக்குப் பிடித்து வெறும் 92 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

துடுப்பாட்டத்தில் ஸ்கொட் ஸ்ரைரிஸ் அதிகபட்சமாக 37 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார்.

ஹரிக்கேன்ஸ் அணியின் பந்துவீச்சில் ஹில்பெனாஸ், போலிஞ்சர் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும், மென்னி, டோஹெர்டி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக ஹரிக்கேன்ஸ் அணியின் ஹில்பெனாஸ் தெரிவானார். (கு)

## போர்க்குற்ற...

இந்த வாய்மூல அறிக்கையில் விசாரணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டமை, அதன் செயற்பாடுகள், சாட்சிய பதிவுகள் மற்றும் பதிவுசெய்யப்பட்ட சாட்சியங்கள் தொடர்பான தகவல்கள் அடங்குவதாக அவர் கூறினார்.

இந்த விடயங்கள் தொடர்பான எழுத்துமூல அறிக்கை அடுத்த வருடம் மார்ச் 25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் ஆணையாளர் தெரிவித்தார்.

இலங்கை தொடர்பில் தெரிவிக்கப்பட வேண்டிய கருத்துக்கள், அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து அறிந்துகொள்வதற்கு இந்த வாய்மூல அறிக்கையின் மூலம் சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாக பிரதீப மஹானாமஹேவா சுட்டிக்காட்டினார்.

சர்வதேச விசாரணை தொடர்பான வாக்கெடுப்பில் சில நாடுகள் கலந்துகொள்ளாதிருந்த நிலையில், அவர்களுக்கு விசாரணை குறித்து இதனூடாக அறிந்துகொள்ள முடியுமென அவர் குறிப்பிட்டார்.


இந்த வாய்மூல அறிக்கையினால் இலங்கைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாதெனவும், எழுத்துமூல அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னரே, அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் பிரதீப மஹானாமஹேவா மேலும் தெரிவித்தார். (செ-11)

## மகிந்த...

ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் பான் கீ மூனை சந்திப்பார் என தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 29,30-ம் திகதிகளில் அமெரிக்க ஜனாதிபதி பரக் ஒபாமாவை நரேந்திர மோடி சந்திக்க உள்ளதாக வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சயிட் அக்பருடீன் தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷ், நேபாளம் மற்றும் இலங்கைத் தலைவர்களையும் மோடி சந்திக்க உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். (செ-11)




# ஐ.நா பொதுச் சபைக் கூட்டத்தில் மகிந்த இன்று உரையாற்றுகிறார்

(நியூயோர்க்)

ஐக்கிய நாடுகள் சபையின் 69ஆவது பொதுச் சபை கூட்டத் தொடர் நியூயோர்க்கில், நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அந்த மாநாட்டில் இன்று உரையாற்றவுள்ளார்.

இந்த கூட்டத்தொடரில் கலந்துகொள்வதற்காக பயணமான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியூயோர்க் நேரத்தின் பிரகாரம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பகல் சென்றடைந்துள்ளார் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

69ஆவது பொதுச் சபை கூட்டத் தொடரில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் அமெரிக்கா நோக்கி புறப்பட்டுச் சென்றனர்.

ஐ. நா. பொதுச் சபை மாநாட்டில் உரையாற்றிய பின்னர் எதிர்வரும் 26ஆம் திகதி, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாடு திரும்பவுள்ளதாக ஜனாதிபதி செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அவரது பாரியார் ஷிராந்தி விக்கிரமசிங்க ராஜபக்ஷ ஆகிய இருவரையும் ஐக்கிய நாடுகளின் நிரந்தர பிரதிநிதி கலாநிதி பாலித கோஹன, ஐக்கிய அமெரிக்காவிற்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம், பிரதி நிரந்தர பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா, ஐக்கிய நாடுகளின் நிரந்தர பிரதிநிதிகள் அலுவலகத்தின் பணியாளர்கள் ஆகியோர் வரவேற்றனர்.

ஐக்கிய நாடுகளின் 69ஆவது பொதுச்சபை அமர்விற்கு மேலதிகமாக, காலநிலை உச்சிமாநாடு 2014, கிளின்டன் உலகளாவிய முன்னெடுப்பின் வருடாந்தக் கூட்டம், பொது நலவாய நாடுகளின் அரச தலைவர்களின் கூட்டம் ஆகியன உட்பட இவ்வாரம் இடம் பெற எதிர்பார்க்கப்பட்டுள்ள சில பெரியளவிலான சர்வதேச நிகழ்வுகளில் பங்குபற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று 24ஆம் திகதி புதன்கிழமை ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் உரையாற்றவுள்ளார். பொதுச்சபையில் ஜனாதிபதி ஆற்றும் ஏழாவது உரையாக இது அமையவுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், வடிகாலமைப்பு மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புப் பிரதியமைச்சர் திருமதி நிருபமா ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் த வாஸ் குணவர்தன, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜே.ஆர்.பி. சூரியப்பெரும, ஏ.எச்.எம். அஸ்வர், நிரஞ்சன் விக்கிரமசிங்க, மத்திய மாகாண முதலமைச்சர் ரத் ஏக்கநாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் திருமதி செனுகா செனவிரத்ன, சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் கலாநிதி. ரி.ஆர்.சி. றுபெரு, காலநிலை மாற்ற செயலகத்தின் பணிப்பாளர் (சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு) கலாநிதி. சுனிமால் ஜெனதுங்க ஆகியோர் ஜனாதிபதியுடன் இணைந்து சென்றுள்ளனர்.

உத்தியோகபூர்வ நிகழ்வுகளில் கலாநிதி கோஹன, தூதுவர் காரியவசம், மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா ஆகியோரும் இணைந்து கொள்வர். (செ-11)

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குடும்பப் பெண் நேற்றுக் கைது

(கரணவாய்)

வடமராட்சிப் பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குடும்பப் பெண்ணொருவர் நேற்றைய தினம் நெல்லியடிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

துன்னாலை தெற்கு கரவெட்டியைச் சேர்ந்த 56 வயதுடைய குடும்பப் பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

குறித்த பெண் தொடர்ச்சியாக கசிப்பு உற்பத்தி வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ள நிலையில் நெல்லியடிப் பொலிஸாருக்கு இது தொடர்பாக தகவல் கிடைத்தது.

இந்நிலையில் நேற்றைய தினம் குறித்த பகுதிக்கு நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போது குறித்த பெண் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டார்.

இதனையடுத்து பிரஸ்தாப பெண்ணை கைது செய்த பொலிஸார் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்ட பொருட்களையும் கைப்பற்றிச் சென்றனர்.

பொலிஸ் நிலையத்தில் குறித்த பெண்ணிடம் மேற்கொண்ட மேலதிக விசாரணையின் பின்னர் பெண்ணிற்கு எதிராக பொலிஸார் எதிர்வரும் 26-ம் திகதி பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். (செ-60)

யாழ் மாணவர்களுக்கு ஓர் அரியசந்தர்ப்பம்
O/L சித்தியடையவில்லையா?
ஆங்கிலம் சித்தியடையவில்லையா?
கவலையை விடுங்கள்!
100% விசா உத்தரவாதம்
Singapore, Malaysia, Mauritius இல்
தொழிலுடன் கூடிய கல்வி வாய்ப்புக்கள்!
➢ எவ்விதமான முகவர் கட்டணமும் இல்லை
➢ பாடநெறியின் முடிவில் PR பெற்றுக் கொள்வதற்கான வசதிகள்
➢ பின்னர் உங்கள் கனவுலக நாட்டு விசாவை பெற்றுக் கொள்ளும் வழிகள்
FREE!!!!! Air Ticket Accommodation Sim Card Transport from Airport to Accommodation!!!
உங்கள் கனவை எம் மூலம் நனவாக்குங்கள்!
உங்கள் கலாசாரச் சூழலுடன்
Coss Jaffna (Pvt) Ltd
021 221 7522, 0777561346
(7664)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 617 ஏக்கர்...

ருக்கும், கடற்படையினருக்கும் நேரடியாக காண்பித்து தங்களுடைய நிலத்தை விடுவிக்குமாறு கோரியிருந்தனர்.

எனினும் அது தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கை எவையும் எடுக்கப்படவில்லை.

இந்நிலையில் குறித்த 617 ஏக்கர் நிலத்தையும் நேற்று சுவீகரிப்பிற்காக அளவீடு செய்யவுள்ளதாக நில அளவைத் திணைக்களம் நில உரிமையாளர்களுக்கு அறிவித்திருந்தது.

தமது காணிகள் கையளிக்கபடவுள்ளன என்பதை அறிந்த மக்கள் நேற்றுக் காலை அங்கு கூடியிருந்தனர்.

இவர்களில் இரண்டு பேர் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தமது காணிகளை படையினருக்கு வழங்க சம்மதம் தெரிவித்தனர். இதனையடுத்து அவர்களது காணிகளை அதிகாரிகள் அளவீடு செய்தனர்.

ஏனையவர்கள் தமிழர்கள். அவர்கள் தமது காணிகளை அளக்க வேண்டாம் என்று கோரிக்கை விடுத்ததுடன், நில அளவைத் திணைக்கள அதிகாரிகளுக்கு கடிதம் மூலம் தெரிவித்தனர்.

காணி உரிமையாளர்களது எதிர்ப்பு மற்றும் கோரிக்கைகள் காரணமாக தமது அளவீட்டுப் பணிகளை இடைநிறுத்திவிட்டு அதிகாரிகள் சென்றுவிட்டனர்.

பொதுமக்களுக்கு ஆதரவாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம், வட மாகாணசபை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், அன்ரனி ஜெகநாதன் ஆகியோரும் சம்பவ இடத்தில் பிரசன்னமாகியிருந்தனர்.

எமது காணிகளை தொடர்ந்தும் சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் நாம் தொடர்ந்து போராடுவோம் என வட மாகாணசபை பிரதித் தலைவர் அன்ரனி ஜெகநாதன் தெரிவித்தார். (செ-4-250)

# ஏழாயிரம்...

யாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த தேரர்,

எதிர்வரும் 28-ம் திகதி கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடை பெறவுள்ள பொது பல சேனாவின் மாபெரும் மாநாடு. இலங்கை நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் ஒரு மாநாடாக அமையவுள்ளது.

நாம் இன்று எமது பிறந்த நாட்டில் அவலத்துக்குரியவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம், 12 வீதம் உள்ள தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதாக கூறிக்கொண்டு, சர்வதேச சக்திகளுக்கு துணைபோகும் ராயப்பு ஜோசப் உள்ளிட்ட, புலித்தோல் போர்த்திய கூட்டம் நாட்டை பிரிக்க வேண்டும் என கோருகின்றனர்.

அதேபோன்று 7 வீதம் உள்ள முஸ்லிம் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்கள் எனக் கூறிக்கொண்டு இராணுவம் தவிர்ந்த மற்ற நிர்வாகத்தினர், கல்வி, சட்டம் போன்ற அனைத்து இடங்களிலும் மிகவும் ஆபத்தான முறையில் தமது ஆதிக்கங்களை செலுத்தி வருகின்றனர்.

12 வீதம் மற்றும் 7 வீதம் உள்ள இவர்கள் எந்தநேரமும் ஒரு இறாத்தல் இறைச்சியையே கேட்டுக்கொண்டிருகின்றனர், என்றாலும் இவர்களுக்கு யாரும் இனவாதிகள் அல்லது தீவிரவாதிகள் என கூறுவதில்லை.

ஆதலால் 28-ம் திகதி நாம் எமது நாட்டில் பிறந்த சமூகத்துக்காகவும், இரத்தம், கண்ணீர், வியர்வை சிந்திய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சிங்கள பௌத்தர்களுக்காகவும் நாமும் ஒரு இறாத்தல் இறைச்சி கேட்போம்.

இந்த நாட்டின் சகல நிகழ்ச்சி நிரல்களும் மாற்றியமைக்கப்பட வேண்டும். பௌத்த தர்மத்துக்கு ஏற்றமுறையில் நிர்வாகம், கல்வி, மருத்துவம் உட்பட சகலதையும் கட்டியெழுப்ப நாம் பணியாற்றுவோம்.

அதற்கு நாம் தயார். அதற்காக நாடும் தயாராகி வருகிறது. சிங்கள பௌத்த தலைவர்களை உருவாக்கிக் கொள்ளும் சூழல் தற்பொழுது உருவாகியுள்ளது.

நாம் 28-ம் திகதி இது தொடர்பான கொள்கையையும், எங்கள் வேலைத்திட்டத்தையும் இந்த சமூகத்துக்காக வெளியிடுவோம்.

துரதிர்ஷ்டவசமாக நாம் நம்பிக்கை வைத்துள்ள எமது தலைவர்கள் இது தொடர்பில் எதனையும் கூறுவதில்லை, அவர்கள் தாங்கள் பிறந்த சமூகத்தின் அலுகோசுகளாகவே காணப்படுகிறனர்.

இந்த நாட்டின் அரசியல்வாதிகள் தொடர்பில் மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டுள்ளது.

ஆகவே நாம் இந்த நிலையை மாற்ற வேண்டும். அதற்காக நாம் தயாராகவுள்ளோம என அவர் மேலும் தெரிவித்தார். (செ-11)

# முதல்வரால்...

பார்வை இழந்த பயனாளி கந்தையா வரதராசன் வீட்டில் அடிக்கல் நாட்டி வீட்டுத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் சி.திருவாகரன், முதலமைச்சரின இணைப்புச் செயலாளர் மற்றும் அலுவலர்கள், பொதுமக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

வீடமைப்புத் திட்டத்திற்கான நிதியாக கடந்த இரண்டு வருடங்களாக ஒவ்வொரு ஆண்டிற்கும் ரூபா 3 மில்லியன் ஒதுக்கப்பட்டு வந்தது. 2014 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட 3 மில்லியன் ரூபாவில் முதலமைச்சரின் நல்லெண்ணத்தில் தோன்றிய வறிய மக்களுக்கு புதிய வீடு என்ற திட்டம் முதல்தடவையாக இவ்வருடம் யாழ்ப்பாணம் கைதடியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கான பயனாளிகள் வடக்கு மாகாண சபை முதலமைச்சரிடம் வீடு கட்டுவதற்கு உதவி கோரிய நிலையில் போரினால பாதிக்கப்பட்ட மற்றும் வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட பொதுமக்களிலிருந்து பொருத்தமான பயனாளிகள் சரியாக இனங்காணப்பட்டு ஐந்து பேர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

இதில் ஒரு பயனாளிக்கு 6 இலட்சம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது. அடுத்து வரும் வருடங்களில் கூடுதலாக நிதி கிடைக்கப் பெற்றால் பயனாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு இன்னும் வீட்டு வசதி இல்லாத வறிய மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என முதலமைச்சர் அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (செ-6)

# ஐ.நா விசார...

அல் ஹுசைன் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் ,இன்று புதன்கிழமை வெளியிடப்படவுள்ள வாய்மூல அறிக்கை நேற்று முன்தினம் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவிடம சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையிலேயே ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் சயிட அல் ஹுசைன் இலங்கை அரசாங்கத்துக்கு இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார். இவ்வறிக்கையில் இலங்கை விவகாரம் தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் சமாதானத்துக்கும், நல்லிணக்கத்துக்கும் குந்தகம் ஏற்படுத்தும் வகையில் இடம்பெறும் முஸ்லிம் மற்றும் சிறுபான்மை மதத்தினருக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும்.

தண்டனையிலிருந்து விலக்களிக்கப்படுதலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும், இனங்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் மற்றும் சட்டத்தின் ஆட்சியை நடைமுறைப்படுத்துதல் என்பனவற்றுக்கும் பொறுப்புக்கூறுதல் மிக அவசியமானது.

இலங்கை அரசாங்கம் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நிராகரிப்பது மற்றும் விசாரணைகளுக்கு ஒத்துழைக்க மறுப்பது போன்ற விடயங்கள் குறித்து நான் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளேன் என இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

# தீக்காயம்...

இளைஞன் மீது தீக்காயம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று அதிகாலை 2மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவரது மரணம் தொடர்பில் யாழ்.போதனா வைத்தியசாலையில் திடீர் மரணவிசாரணையதிகாரி நவசிவாயம் பிரேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தார்.

இதேவேளை யாழ்ப்பாணம் பொலிஸாரும் விசாரணைகளையும் மேற்கொண்டு இருந்தனர். (செ- 4-6)

# தேர்தல்...

ஐக்கிய தேசியக் கட்சியின் முதலமைச்சர் வேட்பாளர் ஹரின் பெர்ணான்டோ உள்ளிட்ட எதிர்க்கட்சி வேட்பாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்கள் 100க்கும் அதிகமானவை பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ மூனுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள வீடியோ, படங்கள் மற்றும் அறிக்கைகளின் பிரதிகள் ஐ.நா மனித உரிமைகள் பேரவை மற்றும் அனைத்துலக நாடாளுமன்ற சங்கம் ஆகியவற்றுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். (செ-11)




## துபாயில் தொழில்

## 400 டக்ஸி ஓட்டுனர் வெற்றிடங்கள்

ஐக்கிய அரபு இராச்சியத்தில் (அபுதாபியில்) இயங்கி வரும் பிரபல்யமான முன்னணி கார் டாக்சி கம்பனியில் கார் டாக்சி ஓட்டுனர்களுக்கான வேலைவாய்ப்புகள். இலங்கை அரசாங்க வாகன சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்களுக்கு அரியதொரு நல்ல சந்தர்ப்பம்.

**தகைமைகள்**

- இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்- குறைந்தது 2 வருடங்கள். (மூன்று வருடங்கள் விரும்பத்தக்கது)
- வயதெல்லை 23-47
- GCC அல்லது UAE வாகன சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருப்பவர்களுக்கு விஷேடசலுகை

(சி-8576)

**அடிப்படைச்சம்பளம்**

ஒருமாதம் 30,000 /= + கொமிஷன்
(130000-170000)

மாதம் ஒன்றிற்கு 200,000 /= பெற முடியும்



**மேலதிக சலுகைகள்**

- தங்குமிடம் மற்றும் போக்குவரத்து வழங்கப்படும்
- அடிப்படை சம்பளம் 800 DHMS + கொமிஷன் (Commissions)
- இரண்டுவருட உடன்படிக்கை உத்தரவாதம்
- தொழிலாளர் சட்டதிட்டங்களுக்கு அமைவாக மருத்துவ செலவுகள் வழங்கப்படும்

வங்கிக் கடன் வசதி 118000 வரை பெற்றுத் தரப்படும்.

**தேவைப்படும் ஆவணப் பத்திரங்கள்**

- கடவுச்சீட்டு பிரதி (பிரதி உட்பட)
- வாகன சாரதி அனுமதி பத்திரம் (பிரதி உட்பட)
- சுயவிபரக் கோவை
- 10 Passport Size Color Photos

இடம்:-துரையப்பா விளையாட்டரங்கின் முன்பாகவுள்ள பழைய யாழ். நகர சபை வளாகம்.
காலம்:-28.09.2014 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்:- காலை 8.30 மணி

உள்நாட்டு அனுமதிப்பத்திரத்தை ஐக்கிய அரபு இராச்சிய வாகனசாரதி அனுமதிப்பத்திரமாக துபாயை சென்றடைந்த பின்னர் மாற்றிக் கொள்ளலாம்.

உடன் தொடர்புகளுக்கு
Lanka Voice (Jaffna) 077 952 7575
Lanka Voice (Mannar, Vavuniya) 076 669 7789

Secure Manpower
Recruitment
No. 8 B, Vajira Road, Bambalapitiya, Colombo 04, Sri Lanka.



**- ALLIANCE FRANÇAISE DE JAFFNA -**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி — af Alliance Française de Jaffna

கற்பதற்கு FRENCH EMBASSY இன் கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே (யாழில் 1976 முதல்). 136+ நாடுகளில் 1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர்கள், அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS.

பிரான்ஸ் செல்வோர் விரையுங்கள்...உடன் அழையுங்கள்...

021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.



**af FRENCH MOVIES – JAFFNA**

Alliance Française de Jaffna
cordially invites you to the screening of

**THE THINGS OF LIFE**

A man recalls things of his life while being victim of a car accident (Claude Sautet, 1970, 89 min.)

on Thursday 25 September 2014 at 4:00 p.m.
at Alliance Française de Jaffna, 61, Kachcheri-Nallur Road, Jaffna.
Phone : 0212228093

French language. English subtitles. Free entrance.

(7654)



ஆசிரியர் வே. அன்பழகன் அவர்களின்

**தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2015**

**வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன**

| | |
|---|---|
| யாழ்ப்பாணத்தில் | சாவகச்சேரியில் |
| அன்பொளி கல்வியகம் | அன்பொளி கல்வி நிலையம் |
| யாழ். இந்துக்கல்லூரி வீதி, | தபாற்கந்தோர் வீதி, |
| யாழ்ப்பாணம். | சாவகச்சேரி. |

அனுமதிகளை 29.09.2014 திங்கட்கிழமைக்கு முன்னதாக பிற்பகல் 3.00 மணி தொடக்கம் பிற்பகல் 5.30 மணிக்குள் முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குநர்கள்



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 321 0815
021 567 1532


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.09.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.